Registered as a Newspaper

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சஞ்சீவி

# உதயன்

சுடர் : 38
கதிர் : 330

ஞாயிற்றுக்கிழமை 22 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 05 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# பணத்தை விழுங்கும் விளையாட்டுச் செயலிகள்!

## மக்களே அவதானம்: மோசடியில் சிக்காதீர்
## யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
விளையாட்டுச் செயலிகள் ஊடாக பணமோசடிகள் நடக்கின்றன என்றும் இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் எனவும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்திலும், யாழ். மாவட்டத்திலும் இவ்வாறான »15

# ஜனாதிபதித் தேர்தலே அடுத்த வருடம் நடக்கும்!

## சீனாவால் வந்த கையோடு ரணில் அறிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 22

அரசமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலும், 2025ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். »15

## இந்தியப் படையினரால் நிகழ்த்தப்பட்ட யாழ். மருத்துவமனைப் படுகொலை;
### நேற்று உணர்வுபூர்வ நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ். போதனா மருத்துவமனைக்குள் புகுந்த இந்திய இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்டோரின் 36 ஆவது நினைவு நாள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. »14

### கிழக்கில் புதிதாக முளைக்கும்
## சிங்களக் குடியேற்றங்களின் பின்னணியில் புலனாய்வாளர்கள்
### விமானப்படை முன்னாள் அதிகாரி தகவல்

கொழும்பு, ஒக். 22
கிழக்கில் சிங்களக் குடியேற்றம் மற்றும் சிங்கள மக்களுக்கு காணிகளைப் பகிரும் திட்டத்தை புலனாய்வாளர்களே செயற்படுத்துகின்றனர். இதற்காக காவி உடை தரித்த குழுவொன்று களமிறக்கப்பட்டுள்ளது என்று »15

## மின்கட்டண அதிகரிப்பு
### எதிராக வழக்கு

கொழும்பு, ஒக். 22
மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என மின் பாவனை »14

## கட்டுப்பணம் அதிகரிப்பு;

கொழும்பு, ஒக். 22
ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான வைப்புப் பணத்தொகையை அதிகரிப் »14

## நாளாந்தம் எரிபொருள் விலைமாற்றம்

யாழ்., ஒக். 22
நாளாந்தம் எரிபொருள் விலையைத்தீர்மானிக்கும் விலை சூத்திர முறைமையை அறிமுகப் »14

## தென்னையிலிருந்து வீழ்ந்தவர் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 22
தென்னை மரத்திலிருந்து வீழ்ந்த ஒருவர் நேற்று மாலை உயிரிழந்துள்ளார். »15

### போலி விசா:
## பருத்தித்துறை வாசி கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, ஒக். 22
போலி விசாவைப் பயன்படுத்தி பிரிட்டன் செல்ல முயன்ற ஒருவர் கட்டுநாயக்க »14





அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT

ashok STEEL
நீடித்த வலிமை

மத்திய மாகாணம் - 0773825832
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
கிழக்கு மாகாணம் - 0743712824
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ. 275,000 + VAT




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்கவேண்டும்!

## பலஸ்தீனத்துக்காக கொதித்தோருக்கு மனோ கணேசன் எம்.பி. கடும்காட்டம்



கொழும்பு, ஒக். 22

**பலஸ்தீனத்துக்கு அனுதாபம் தெரிவித்து எப்படி அந்த நாட்டை இஸ்ரேல் அங்கீகரிக்கவேண்டும் என்று நினைக்கின்றோமோ அதேபோன்று இலங்கையிலும் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சியை அங்கீகரிக்கவேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காஸா மோதல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காஸாவில் நடக்கும் மோதல் நிலைமையால் துன்பப்படும் மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், பாதிக்கப்பட்ட இஸ்ரேலிய மக்களுக்கும் அனுதாபத்தைக் கூறிக்கொள்கின்றேன்.

பலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலின் அடாவடியாலேயே இந்தச் சம்பவங்கள் நடக்கின்றன. அங்கே காஸாவில் மருத்துவமனை மீது குண்டு விழுந்துள்ளது. பாடசாலைகள், மக்கள் குடியிருப்புகள் மீது குண்டுகள் விழுகின்றன. இலங்கையிலும் இதுவே நடந்தது. எதற்கும் போர் தீர்வாக அமையாது. அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இதற்கான தீர்வுக்கு, பிரச்சினையின் மூலகாரணத்தைக் கண்டறியவேண்டும்.

இன்று ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன பல் இல்லாத பாம்புகளைப் போன்றே இருக்கின்றன. எந்த அதிகாரமும் கிடையாது. இலங்கை விடயத்திலும் அப்படித்தான். இலங்கையில் நடந்தது சாட்சிகள் இல்லாத யுத்தமாக இருந்தது. சர்வதேச சமூகம் என்று ஒன்று உள்ளது. அவர்களுக்கு நீதி, நியாயம் கிடையாது. ஐ.நா.வை பொறுத்தவரை இலங்கை யுத்தத்தின் பின்னர் அவர்களின் உள்ளக அறிக்கையில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் எனக் குறிப்பிடப்படுகின்றது. தமிழ்த் தரப்பில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற கருத்து உள்ளது. ஐ.நா. இதன்மூலம் பாடம் படித்துள்ளதாக கூறப்பட்டாலும் அது நடக்கவில்லை. இல்லாவிட்டால் காஸாவில் இந்த நிலைமை இருக்காது.

கிழக்கு ஜெருசலேமை அடிப்படையாகக் கொண்ட பலஸ்தீனத்தை இஸ்ரேல் அங்கீகரிக்கவேண்டும். அதேபோன்று இஸ்ரேலின் இருப்பையும் பலஸ்தீனம் அங்கீகரிக்க வேண்டும். அதுவே நியாயமான தீர்வாக அமையும். இங்கே தனி நாட்டு கோரிக்கை காணாமல் போய்விட்டது. ஆனால் தமிழரும், சிங்களவரும் ஒன்றாக வாழவேண்டும் என்றால், நடந்த அநியாயங்களை நாங்கள் புரிந்துகொண்டிருந்தால் பலஸ்தீனத்துக்கு ஒரு நியாயமும் இலங்கைக்கு இன்னுமொரு நியாயமும் இருக்கமுடியாது - என்றார். (ம-44)

# காஸா மோதல் என்பது ஓர் உலகப்போர்முனை

கொழும்பு, ஒக். 22

பலம் வாய்ந்த நாடுகளின் ஒருதலைப்பட்ச செயற்பாட்டினால் இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் மூன்றாம் உலகப்போராக மாற்றமடையும் தன்மை காணப்படுகிறது என்று முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உக்ரைன் - ரஷ்யா மோதலுக்கு இணையாக தற்போது இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தீவிரமடைந்துள்ளது. இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் உலகளாவியரீதியில் கடும் தாக்கங்களை ஏற்படுத்தும் அளவுக்குப் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. பலஸ்தீன விவகாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும். அத்துடன் இஸ்ரேல் பொறுப்புடன் செயற்படவேண்டும். உலக நாடுகளின் பார்வை தற்போது வேறுபடுத்தப்பட்டுள்ளது. பலம் வாய்ந்த நாடுகள் ஒருதலைப்பட்சமாக செயற்படும்போது இந்தப் பிரச்சினை மூன்றாம் உலகப்போராக மாற்றம்பெறும் - என்றார். (ம)

# பலஸ்தீனத்தை ஒழிக்க அமெ. - இஸ்ரேல் திட்டம்

## ஐ.நா. தலையீடு தேவை ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 22

உலக வரைபடத்திலிருந்தே பலஸ்தீனத்தை நீக்குவதற்கான திட்டத்தை இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து தீட்டுகின்றன. ஐக்கிய நாடுகள் சபை தலையீடு செய்து இந்தப் பேரவலத்தைத் தடுக்க வேண்டும். அன்று முதல் இன்றுவரை இலங்கை பலஸ்தீன மக்கள் பக்கமே - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்து ரஷ்யாவுக்கு எதிராக போர் தொடுக்க அஞ்சிய அமெரிக்காவே ஹமாஸ் அமைப்புக்கு எதிராக போர் தொடுக்க இஸ்ரேலுடன் இணைந்துள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடர்பில் மேற்குலக ஊடகங்களின் செயற்பாடுகள் வெட்கமளிக்கின்றன. பலஸ்தீன மக்கள் படும் அவலங்கள் காண்பிக்கப்படுவதில்லை. மாறாக இஸ்ரேல், அமெரிக்க இராணுவத்தின் வெற்றிகள் காண்பிக்கப்படுகின்றன. அன்று முதல் இன்றுவரை இலங்கை பலஸ்தீன மக்கள் பக்கமே இருந்து வந்துள்ளது. இந்தப் பிரச்சினையை சமாதானம் மூலம் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை தலையீடு செய்யவேண்டும் - என்றார். (ச-44)

# லலித் கொத்தலாவல நேற்றுக் காலமானார்

கொழும்பு, ஒக்.22

இலங்கையின் பிரபல வர்த்தகர் தேசபந்து லலித் கொத்தலாவல தனது 84 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

அவர் செலான் வங்கியின் ஸ்தாபகத் தலைவரும், செலிங்கோ கன்சோலிடேட்டட் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் ஆவார். கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இவர் உயிரிழந்துள்ளார். (எ-இ)

# இன்னொரு முள்ளிவாய்க்கால் காஸாவில் தோன்றுகின்றது!

## எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

இலங்கை அரச பயங்கரவாதம் எவ்வாறு தமிழர்களைக் காவுகொண்டதோ அதேபோன்று இஸ்ரேலும் பலஸ்தீனர்களை காவுகொள்கிறது. மீண்டும் ஒரு முள்ளிவாய்க்கால் காஸாவில் உருவாகுவதைத் தடுக்க ஐக்கிய நாடுகள் போர்நிறுத்தத்தை மேற்கொள்ளவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

காஸா மீதான தாக்குதலை நிறுத்த வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சனிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் பங்கேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

47க்கும் மேற்பட்ட நாடுகள் காஸாவுக்கு ஆதரவாக இருந்தபோதிலும் அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தால் இஸ்ரேலை ஒன்றும் செய்ய முடியாதுள்ளது. முள்ளிவாய்க்கால் மண்ணில் எம் பிள்ளைகள் எவ்வாறு கொல்லப்பட்டார்களோ - எவ்வாறு மருத்துவமனைகளின் மீது தாக்குதல் புரியப்பட்டதோ அதேபோன்றே இன்று காஸா மீது இஸ்ரேல் போர் நகர்வுகளை முன்னெடுக்கிறது. எனவே மீண்டும் ஒரு முள்ளிவாய்க்காலை காஸா மண்ணில் உருவாகாது தடுக்கவேண்டும். அதற்கு ஐக்கிய நாடுகள் இனியும் மௌனம் காக்காது பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நீதி கிடைக்க விரைந்து செயற்பட வேண்டும் - என்றார். (ச-125)

# இஸ்ரேல் - பலஸ்தீனம் போர் சர்வதேசப் பேரவலமாக விரிவு

## உடன் தடுக்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 22

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதலானது புவிசார் அரசியலில் ஸ்திரமின்மையை ஏற்படுத்தி சர்வதேச பேரவலமாக விரிவடைகிறது. இதனைத் தடுப்பது அனைவரின் பொறுப்பாகும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதல் சூழ்நிலை ஒரு மனித பேரவலமாக மாறியுள்ளது. அத்துடன், சர்வதேசப் பாதுகாப்புக்குக் கடுமையான அச்சுறுத்தலாகியுள்ளது. இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலால் அப்பாவிப் பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள், தாய்மார்கள் பிரேதசத்தன மாகக் கொன்று குவிக்கப்படுகின்றனர். பயங்கரவாதம் மற்றும் அரச பயங்கரவாதம் ஆகிய இரண்டும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. புவிசார் அரசியலில் மத்திய கிழக்கில் நிலவும் இந்த ஸ்திரமின்மை சர்வதேச பேரவலமாக விரிவடைவதை விரைந்து தடுக்கவேண்டும்- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரசபை ஊழியர்களுக்கு செலவு செய்யும் பணம் வீண்!

## மூத்த அதிகாரி ஒருவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 22

இலங்கை மின்சாரசபையின் 23 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் மற்றும் வெளி நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட ஊழியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பணி நடைபெறாததால் அவர்களுக்காகச் செலவழிக்கப்படும் பணம் முற்றிலும் வீணானது என மின்சாரசபையின் மூத்த அதிகாரி ஒருவர் சிங்கள ஊடமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் பணிபுரிந்தாலும் அவர்களின் செயற்றிறன் தொடர்பாகப் பல சிக்கல்கள் உள்ளன. மின்சாரசபையின் இவ்வளவு ஊழியர்களைப் பராமரிப்பதற்கு அமைச்சு மாதாந்தம் செலவு செய்தமையே மின்சாரக் கட்டண உயர்வை மறைமுகமாகப் பாதித்துள்ளது.

பெரும்பாலான ஊழியர்கள் தேவையில்லாத இடங்களில் கடமைகளைச் செய்ய நியமிக்கப்படுகின்ற நிலையில் அத்தகைய ஊழியர்களிடமிருந்து சபை எதிர்பார்க்கும் கடமைத் திறனைப் பெறமுடியாது. பணியாளர்களை சரியான முறையில் பயன்படுத்தினால் அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் தேவையில்லை.

23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் இருந்தாலும் பெரும்பாலான பணிகள் மற்ற மூன்றாம் தரப்பினிடம் இருந்து பெறப்பட்ட ஊழியர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. நிறுவனத்தில் அதிக பணியாளர்கள் இருக்கும்போது, ஆண்டுதோறும் வெளி நிறுவனங்களில் இருந்து பணியாளர்களை அழைத்து வந்து அவர்களுக்குச் சம்பளம் வழங்குவது பெரும் பிரச்சினையாக உள்ளது. ஒவ்வொரு மாதமும் இதே முறையில் இந்தப் பணி நடைபெற்று வருகிறது. செலவு முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சு பல தடவைகள் அறிவுறுத்தல்களை வழங்கியபோதிலும், அதற்கான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை- என்றார். (ஏ-இ)

# மாணவியை காணொலி எடுத்ததாக முறைப்பாடு

யாழ்., ஒக். 22

குளிக்கும்போது அயல்வீட்டைச் சேர்ந்தவர் தன்னைக் காணொலியில் பதிவு செய்தார் என்று மாணவி ஒருவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

உயர்தரத்தில் கற்கும் மாணவி ஒருவர் நேற்றுக் காலை வீட்டுக் கிணற்றில் குளிக்கும்போது, அயல் வீட்டு மலசலகூடம் வழியாக கைபேசி ஒன்று தென்பட்டுள்ளது என்றும், மாணவி சத்தமிட்டதும் கைபேசி காணாமற்போனது என்றும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் மாணவியும் தாயும், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் என்றும், அவர் வெளிநாட்டில் இருந்து வந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஏ-125)

# 5 லட்சம் பேர் வரையில் நாட்டில் வேலையிழப்பு

நாட்டில் ஏறக்குறைய 2 ஆயிரம் தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்கள் மூடப்பட்டதன் காரணமாக கடந்த ஆண்டு ஐந்து இலட்சத்து 33 ஆயிரத்து 858 பேர் வேலையை இழந்துள்ளனர் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

இவ்வாறு வேலையை இழந்தவர்களுள் தொழில்துறையைச் சேர்ந்த மூன்று இலட்சத்து 96 ஆயிரத்து 159 பேரும் சேவைத் துறையில் ஒரு இலட்சத்து 37ஆயிரத்து 699 பேரும் உள்ளடங்குகின்றனர்.

கடந்த வருடத்தில் தனிநபர்களின் வேலை நேரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது என அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தின் முதல் காலாண்டில் 66.1 வீதமானவர்கள் 40 மணித்தியாலங்கள் அல்லது அதற்கு மேல் வேலை செய்தபோதும் அதே வருடத்தின் நான்காம் காலாண்டில் 40 மணித்தியாலங்கள் மற்றும் அதற்கு மேல் வேலை செய்தவர்களின் எண்ணிக்கை 61.7 வீதமாகக் குறைந்துள்ளது என்று வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

அதேவேளை தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 51.2 வீதத்திலிருந்து 48.9 வீதமாகக் குறைந்துள்ளது. 20 தொடக்கம் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே வேலையின்மை 14.2 வீதத்திலிருந்து 17.2ஆக அதிகரித்துள்ளது என்று அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. மூலப்பொருள்களின் விலை உயர்வு, மின் கட்டணம் உயர்வு, எரிபொருள் விலை உயர்வு போன்ற காரணங்களால் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஏ-இ)

# யாழ். விமான நிலையத்தில் வசதியற்ற உட்கட்டமைப்பு!

## பயணிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 22

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஆரம்பித்து நான்கு வருடங்கள கடந்துள்ளபோதும் உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள் பெரியளவில் ஏற்படுத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக இந்தியா மற்றும் கொழும்பு இடையேயான பயணிகள் சேவைகள் இடம்பெற்று வருவதுடன் பெருமளவானவர்கள் அதைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போதைய விமான நிலையத்தில் விமானம் ஊடாக வருபவர்களை அழைத்துவரச் செல்பவர்கள் காத்திருப்பதற்கான இடம் மர நிழலேயாகும். மரங்களுக்குக் கீழே கல்லாசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோடை காலத்தில் அவை பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால், மாரி காலத்தில் மழை பெய்தால் கல்லாசனங்களில் இருக்க முடியாமல் பெரும் சிரமத்துக்கு ஆளாகுவர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

பயணிகள் குடிவரவு -குடியகல்வு செயற்பாடுகளை முடித்து விட்டு காத்திருப்பதற்குப் போதிய இடம் இல்லாமல் அவர்களும் இதே பிரச்சினைக்கு முகம்கொடுப்பர்.

இந்த விடயம் தொடர்பில் உள்ளூர் அரசியல்வாதிகள் முதல் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஆகியோர் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. (ஏ-20)

# பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மூவரிடையே கடும் போட்டி!

கொழும்பு, ஒக். 22

புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ள நிலையில், பொலிஸ் திணைக்களத்தில் உள்ள மூன்று மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கு இடையே இந்தப் பதவிக்காகக் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது என்றுதகவல்கள் வெளியாகியுள்ளன.

மூன்று வாரகால சேவை நீடிப்பின் பின்னர் தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் சேவை நீடிக்கப்படாது என்று தெரியவருகின்றது.

சி.டி.விக்கிரமரத்னவின் சேவையை மேலும் 3 வாரங்களுக்கு நீடிப்பதற்கான ஜனாதிபதியின் தீர்மானம் அரசமைப்புச் சபையின் அங்கீகாரத்தை பெறாதமையால் பல்வேறு நெருக்கடிகள் எழுந்துள்ளன. பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் நியமனம், அரசமைப்புக்கு முரணானது என எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புகளும் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளன. ஆனால், ஜனாதிபதிக்கு அரசியலமைப்பு ரீதியாக உள்ள அதிகாரத்தின்பிரகாரம்தான் சேவை நீடிப்பை வழங்கினார் என சபாநாயகர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதிக்கும் சட்டவாக்க சபைக்கும் இடையில் சர்ச்சைக்குரிய சூழ்நிலை உருவாகியுள்ளதால் புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் வாரம் புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்த நிலையில் மூன்று மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கு இடையே இந்தப் பதவிக்காக கடும் போட்டிநிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

# சுயதொழிலாளருக்கு ஓய்வூதியத் திட்டம்!

## பிரேரணை சமர்ப்பிப்பு

சுயதொழில் செய்பவர்களை ஊக்குவிப்பதற்காக ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் தெரிவித்துள்ளார். குறித்த திட்டத்துக்கான பிரேரணை நிதியமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான பிரேரணையே நிதியமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெதர்லாந்தைத் தோற்கடித்து இலங்கைக்கு முதல் வெற்றி!





**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நெதர்லாந்து அணியைத் தோற்கடித்து தன் முதலாவது வெற்றியைப் பதிவுசெய்தது இலங்கை அணி.**

முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணிக்கு ஆரம்ப வீரர் விக்ரம்ஜித் சிங் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இந்தத் தொடரில் விக்ரம்ஜித் சிங்கின் தடுமாற்றமான செயற்பாடு நேற்றும் தொடர்ந்தது. டோட் 16, அகர்மன் 29, பஸ் டி லீட் 6, ரியா 9 என்று அடுத்தடுத்துப் பவிலியன் திரும்பிக் கொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில் 91 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்தது நெதர்லாந்து அணி. சைபான்ட், வான் பீக் இருவரும் இணைந்து இலங்கையின் வெற்றிக்கனவைக் கலைக்க ஆரம்பித்தனர். இருவரும் அரைச்சதம் கடக்க இணைப்பாட்டமும் 100 ஓட்டங்களைக் கடந்தது. அணி 221 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சைபான்ட் 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வான் வீக் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததையடுத்து 262 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது நெதர்லாந்து. 150 ஓட்டங்களில் சுருண்டுவிடும் என்று கருதப்பட்ட நெதர்லாந்து 262 ஓட்டங்களைப் பெற்றமை வர்ணனையாளர்களால் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

பந்துவீச்சில் மதுசங்க, ராஜித இருவரும் தலா 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு குசல் பெரேரா 5 ஓட்டங்களுடனும், குசல் மெண்டிஸ் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். பதும் நிசங்க மற்றும் சமரவிக்ரம இருவரும் பொறுமையாக ஆடி அணியை மீட்டெடுத்தனர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 54 ஓட்டங்களுடன் பதும் நிசங்க ஆட்டமிழந்தார். வெற்றிடத்தை கச்சிதமாக நிரப்பினார் அசலன்க. மறுமுனையில் சமரவிக்கிரமவின் ஆட்டம் திருப்தியாக இருந்தது. அசலங்க 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் 91 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்று இலங்கையின் வெற்றிக்கு வித்திட்டார் சமரவிக்கிரம. இலங்கை அணி 5 விக்கெட்டுக்களால் வென்றது. (ம)

## உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு 18**

**இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இன்றைய (22.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

**மெகா பரிசு**

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ..........................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

**இந்தியா** - **நியூஸிலாந்து**

இடம் : தர்மசாலா
நேரம்: பி.ப. 2.00

NEW ZEALAND CRICKET

### தெ.ஆபிரிக்காவிடம் நேற்று

# இங்கிலாந்து படுதோல்வி!



உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்காவிடம் 229 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது இங்கிலாந்து அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 7 இலக்குகளை இழந்து 399 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கிளாசன் 109 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் ரொப்லி 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 170 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. வூட் பெற்ற 43 ஓட்டங்கள்தான் இங்கிலாந்து சார்பாகப் பெறப்பட்ட உச்சபட்ச ஓட்டங்கள். பந்துவீச்சில் ஜெரால்ட் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ம)

## தினம் ஒரு பரிசு நாள் 16 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| கி.சாலினி - | வட்டுக்கோட்டை | ற.தினுஸ்கன் - | வவுனியா |
| மா.ஹரிஷாஞ்சலி - | வண்ணார்பண்ணை | செ.பாலசந்திரன் - | சுழிபுரம் |
| செ.ரம்பியராகுலன் - | யாழ்ப்பாணம் | ஜெ.ஜீவனா - | கள்ளப்பாடு |
| உ.றூபியுக்தன் - | அல்வாய் கிழக்கு | நி.நித்தியன் - | வேப்பங்குளம் |
| ஜீ.துபிசன் - | கொக்குவில் | சு.சுரேக்கா - | பம்பைமடு |
| கி.கிரிசாந் - | வவுனியா | சி.ஆதிரன் - | மானிப்பாய் |
| வி.கனிஸ்மன் - | குருநகர் | எல்.லதுசன் - | இணுவில் |
| சி.நந்தகுமார் - | யாழ்ப்பாணம் | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காஸா மக்களுக்காக யாழில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

காஸா மீதான தாக்குதலை நிறுத்த வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக நடந்த போராட்டத்தில் பலர் கலந்துகொண்டனர். போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோஷங்களை எழுப்பியதுடன், கைகளில் பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். (எ-125)

# மறைத்து வைக்கப்பட்ட மரக்குற்றிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

இளவாலையில் அனுமதி பெறப்படாது காணி ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த முதிரை மற்றும் மருது வகையைச் சேர்ந்த 35 மரக்குற்றிகள் பொலிஸாரால் மீடகப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இவை கைப்பற்றப்பட்டுள்ளன. 42 வயதுடைய ஒருவர் சந்தேகநபராகக் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-23)



# மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 22

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில், வல்வெட்டித்துறையில் பொலிஸாரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகலுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும், மணல் ஏற்றப் பயன்படுத்தப்பட்ட உழவியந்திரம் ஒன்று கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். 28 வயதுடைய சந்தேகநபரே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-23)

# போராட்டத்தைக் கைவிட்ட இராமேஸ்வரம் மீனவர்கள்

கொழும்பு, ஒக். 22

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், கைப்பற்றப்பட்ட படகுகளையும் விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி இராமேஸ்வர மீனவர்கள் முன்னெடுத்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கச்சதீவு அருகே எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து கடந்த 14 ஆம் திகதி இராமேஸ்வரம் மீனவர்கள் 27 பேரை இலங்கைக் கடற்படை கைதுசெய்தது. அவர்களது விசைப் படகுகளையும் கைப்பற்றியது.

இது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தி கடந்த 16ஆம் திகதி முதல் இராமேஸ்வர மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர். இந்தப் போராட்டத்தில் பெரிய மற்றும் சிறிய ரக படகு மீனவர்களும் பங்கேற்றனர்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தால் இராமேஸ்வரம் பகுதியில் உள்ள 3 ஆயிரத்து 500 மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலை சார்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு சிறிய ரக படகு மீனவர்கள் வேலைநிறுத்த போராட்டம் கைவிடப்படுகின்றது என்றும், பெரிய ரக படகு மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும் என்றும் மீனவ சங்கத் தலைவர் என்.ஜே.போஸ் தெரிவித்துள்ளார். (எ-இ)

# புகையிலைப்பொருள் விற்பனை 11 வர்த்தகர்களுக்குத் தண்டம்

சாவகச்சேரி, ஒக். 22

21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் கடந்த வாரம் தென்மராட்சி பிரதேசத்தில் கச்சாய், சரசாலை, பாலாவி, மீசாலை, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய இடங்களில் நடத்திய திடீர்ப் பரிசோதனையின்போது 21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப்பொருள்கள் விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 7 வர்த்தகர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் 4 வர்த்தகர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஜ-5)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் குடும்பத்தில் சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும்போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** இழுபறியாக இருந்த காரியங்கள் எதிர்பாராதவகையில் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் உண்டாகும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சியுடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வழியில் சின்னச் சின்ன சங்கடங்கள் ஏற்படலாம். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் துணிச்சல் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தங்கள் நீங்கும்.

**மகரம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமை அவசியம்.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்து நீண்டகாலமாகத் திரும்பவராத கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும்முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். ஆனால், தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# வளர்ப்பு நாய்களுக்கு குருநகரில் தடுப்பூசி!

யாழ்ப்பாணம், ஒக். 22

குருநகர்ப் பிரதேசத்திலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மாநகர சுகாதாரப்பிரிவு அறிவித்துள்ளது.

யாழ்.மாநகரப் பிரதேசத்தில் இந்த மாதத்தின் கடந்த இரண்டு வாரத்தில் 674 வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது. நாவாந்துறையில் 326 வளர்ப்பு நாய்களுக்கும், யாழ்.நகரில் 348 நாய்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று மாநகர சுகாதாரப் பிரிவு மேலும் குறிப்பிட்டது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# செயலுருப் பெறுமா ஆளுநரின் திட்டம்?

சிறப்புத் தேவையுடையவர்களின் குறைகளை நிறைவேற்றும் பொருட்டும், அவர்களைச் சமூகமயப்படுத்தும் வகையிலும் மிகவிரைவில் சிறந்த திட்டங்கள் கொண்டுவரப்படும் என்று அறிவித்துள்ளார் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ். ஆளுநர் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற துறைசார் அதிகாரிகள் மற்றும் திணைக்களத்தினருடனான சந்திப்பின்போதே இந்தக் கருத்தை – திட்டத்தை – நம்பிக்கையை விதைத்திருக்கின்றார் ஆளுநர்.

ஈழத்தில், குறிப்பாக தமிழர் தாயகத்தில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற போர், பல்லாயிரம் மக்களை அங்கவீனர்களாக்கியது. இந்தக் குருதிச் சகதியின் துயர் சாட்சிகளான அந்த மக்களின் இன்னல்கள் இன்னமும் களையப்படவில்லை. சிறப்புத் தேவையுடையவர்களாக – பிறிதொருவரில் தங்கி வாழவேண்டிய தவிர்க்கமுடியாத்தனம் கொண்டவர்களாக –தம் வாழ்வின் எஞ்சிய காலத்தை, 'போரால் தின்று குதறப்பட்ட' மக்கள் கடத்திக் கொண்டிருக்கின்றனர். தவிர, பிறப்பால் அங்கவீனர்களாக உள்ளவர்களுக்கும் சிறப்புத் திட்டங்கள் என்று எதுவும் இந்த நாட்டில் இல்லை. இவ்வாறானதொரு பின்னணியில் ஆளுநரின் கருத்து வரவேற்கப்படவேண்டியது மட்டுமல்ல மெச்சப்பட வேண்டியதும்கூட.

சிறப்புத் தேவையுடையவர்களை 'தங்கி வாழ்வோர்' என்ற கண்ணோட்டத்தில் பார்க்கமுடியாது. பொருளாதார ஈட்டுகைக்கு அவர்கள் தகுதியுடையவர்கள். பொருளாதாரத்தில் ஏற்றம் பெற்றுள்ள மேற்கத்தேய நாடுகள் சிறப்புத் தேவையுடையவர்களை 'தங்கியிருப்பவர்கள்' என்ற கருத்தியலைக் கொண்டு நோக்குவதை அண்மைக்காலமாக மறுத்து – திருத்தி வருகின்றன. அவர்களால் அவர்களின் பொருளாதாரத்தை – வருவாயை தீர்மானித்துக்கொள்ளமுடியும் என்பதுதான் அந்த நாடுகளின் எண்ணப்பாடு. இதற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படும் ஒதுக்கீடுகள், உதவிகள் அனைத்தும் சிறப்புத் தேவையுடையவர்களுக்கு ஒரு 'போனஸ்'.


ஆனால், இலங்கையில் இவ்வாறான சிந்தனைப் பாங்கு இல்லவேயில்லை. சிறப்புத் தேவையுடையவர்கள் என்றால் 'தங்கியிருப்பவர்கள்' என்ற கருத்தியல்தான் இந்த நாட்டின் அரச இயந்திரத்தின் ஆழ்மனதில் அச்சொட்டாகப் பதிந்திருக்கின்றது. மாதாந்தம் வழங்கப்படும் சிறுதொகை உதவியுடன் சிறப்புத் தேவையுடையவர்கள் விடயத்தில் தன் கடமை முடிந்துவிட்டதாக அரசாங்கம் காலாகாலமாகத் திருப்திப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உண்மையில் செய்யவேண்டிய கருமம் அதுவல்ல. சிறப்புத் தேவையுடையவர்கள் தங்களின் பொருண்மியத்தை தாமே உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையிலான தொழில்வாய்ப்புகள், சந்தை வாய்ப்புகள் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படவேண்டும். அவ்வாறு ஏற்படுத்தப்பட்டால் அவர்கள் 'உழைக்கும் வர்க்கத்தினராக' மாற்றம் பெறுவார்கள். இதனால் அரசாங்கத்தின் பொருண்மியச் சுமையும் குறைவடையும். 'பசித்திருப்பவனுக்கு மீனைக் கொடுக்காமல், மீன்பிடிக்கத் தூண்டிலைக் கொடு' என்ற நோக்கே இங்கு தேவையானது.

இதேவேளை, 'நாட்டிலுள்ள சிறப்புத் தேவையுடையவர்களின் வாழ்க்கை மேம்படுத்தப்படும்'. 'வடக்கில் போரால் அங்கவீனமானவர்களின் வாழ்க்கைத்தரம் பிரத்தியேகத் திட்டங்களால் உயர்த்தப்படும்' என்ற வாக்குறுதிகள் வழங்கப்படுவது இதுவொன்றும் முதல் முறையல்ல. சுமார் ஒன்றரைத் தசாப்தமாக கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன விடயம்தான். அதனால், ஆளுநர் சார்ள்ஸ் தன் வாக்குறுதிகளின் சாத்தியப்பாடு தொடர்பில் தீவிரமாகப் பரிசீலிக்கவேண்டும். சொற்களை விடுத்து இதனைச் செயல்வடிமாக்க அவர் அர்ப்பணிப்போடு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

## நாளொரு நல்வார்த்தை

இலட்சியமில்லாதவன்
இருட்டான பாதையில் தடுமாறிச்
சென்று கொண்டிருப்பான்.
எனவே ஒரு இலட்சியத்தை
நோக்கி முன்னேறுங்கள்

- சுவாமி விவேகானந்தர் -




# டயானா கமகேவால் துன்புறும் ஆண்கள்!

## எங்களுக்குப் பாதுகாப்பில்லை ஐ.ம.ச. இவ்வாறு குற்றச்சாட்டு

**கொழும்பு, ஒக். 22**

**நாடாளுமன்றத்தில் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவால் ஆண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துன்புறுத்தப்படுகின்றனர். எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியினர் சபாநாயகரிடம் முறையிட்டுள்ளனர்.**

டயானாவை நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா தாக்கினார் என்று நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார மேலும் தெரிவித்ததாவது:

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே என்னுடன் தூஷண வார்த்தைகளைப் பயன்படுத்தி தர்க்கத்தில் ஈடுபட்டார். எனது காற்சட்டையைக் கழற்றுவேன் என்றார். எல்லோரும் பெண்கள் துன்புறுத்தப்படுவதாகவே கூறுகின்றனர். ஆனால் டயானா கமகேயால் ஆண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துன்புறுத்தப்படுகின்றனர். எமக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் இந்தப் பெண் எம்.பி.யிடமிருந்து ஆண் எம்.பி.க்களின் உரிமைகளை சபாநாயகர் பாதுகாக்கவேண்டும். - என்றார். (ம)



# டயானாவுடன் மோதல் விசாரிப்பதற்குக் குழு!

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் முன்வைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக சபாநாயகரால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையிலான இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ச, ரமேஷ் பத்திரண, கயந்த கருணாதிலக்க, இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா தன்னைத் தாக்கினார் எனக் குற்றஞ்சாட்டினார். இதனை சுஜித் பெரேரா நிராகரித்தார். அத்துடன், இரு தரப்பினரும் இது தொடர்பில் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். அதையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி, அறிக்கை முன்வைப்பதற்காக சபாநாயகர் மேற்படி குழுவை அமைத்துள்ளார். (எ-44)

**நாளை** 23.10.2023 திங்கட்கிழமை ஐப்பசி 06

சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம் : 07.32 - 09.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 01 - 09 - 1949



இறப்பு 19 - 10 - 2023

## திருமதி மேரி மாகிரேட் சிவசுப்பிரமணியம் (கமலா)

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி மாகிரேட் சிவசுப்பிரமணியம் (கமலா) அவர்கள் (19.10.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசேப் - சிசிலியா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சிவா) அவர்களின் பாசமிகு மனைவியும், கௌஷல்யா (கௌசி, கட்டார்), பிரதீபன் (குவைத்) அவர்களின் பாசமிகு தாயாரும், அன்ரனி சகாயறூபன் (றூபன், கட்டார்), விஜிதா (விஜி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விதுஷா, வேஜின், ஷறோமியா, பிரஜித், பிரஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நேசமலர், சேவியர் மற்றும் லீலிமலர், அன்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தவராஜா, சுந்தரலிங்கம் மற்றும் மகேந்திரராஜா (சுவிஸ்), தனபாலசிங்கம் (அவுஸ்ரேலியா), திலகவதி (கனடா) யோகேஸ்வரன் (அவுஸ்ரேலியா), பத்மாவதி (மணி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை (23.10.2023) பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.47, பழையபூங்கா வீதி,
யாழ்ப்பாணம்

cs 52569 (Ak.1)

தகவல்
கௌஷல்யா (கௌசி)
077 112 2394

# 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 27 . 04 . 1928



இறப்பு 14 . 10 . 1998

## அமரர் இராசலிங்கம் அன்னலட்சுமி

நீங்காத நினைவுகள் தந்து
நீண்ட தூரம் சென்று ஆண்டுகள் 25 கடந்தாலும்
ஓயவில்லை அம்மா உங்களின் நினைவுகள்
அகலவில்லை அம்மா உங்களின் அன்புமுகம்
உங்களின் புன்சிரிப்பும் பாசம் நிறைந்த
அரவணைப்பும் எங்களை ஒவ்வொரு
பொழுதும் ஏங்க வைக்கின்றது அம்மா!
காலங்கள் தான் போனதம்மா!
உங்களைப் பிரிந்த வேதனை
இன்னமும் குறையவில்லை அம்மா
எங்கள் அன்புத்தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மில்லேன்,
பிரம்படி,
கொக்குவில் கிழக்கு.

(CS 52547) (AK-1)

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

24.10.2023 (விஜயதசமி) புதிய பிரிவுகள் ஆரம்பம்!
யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்
கேக் வகைகள், ஐசிங், Hair Dressing, Beautician (Facial), மணப்பெண் அலங்காரம், பலவிதமான சேலை அணியும்முறை, Cookery: மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், Ice cream தயாரித்தல் சனி, ஞாயிறு, கிழமை நாள் பிரிவுகள் நடைபெறும்.
0777110383 0742170383

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி
அம்மன் கோவில் (நிர்வாகி)

## அமரர் செல்வப்பிரகாசம் விக்கினேஸ்வரன்

திதி: ஐப்பசி பூர்வபக்க அட்டமி

தோற்றம் 12.11.1954 — மறைவு 01.11.2022

தம்பி செ.சிவானந்தன்
கொக்குவில்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 . 10 . 1928



விண்ணில் 01 . 11 . 2022

கடந்த 01.11.2022 இறைபதம் அடைந்த எமது
குடும்ப குல விளக்கு

## அமரர் நாகலிங்கம் குமாரகுருநாதன் (குருவர்)

திதி : ஐப்பசி மாத வளர்மதி அட்டமி

ஆண்டு ஒன்று கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
குடும்பம் எனும் கோயிலில் குலவிளக்காக
திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும் மறையாது உங்கள் நினைவு
என்றென்றும்....


அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

தம்மளை,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(cs226674) (AK.1)

குடும்பத்தினர்
077 248 7228

# 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் பாலசிங்கம் நடனகுமார் (சிவா)

திதி: புரட்டாதிமாத பூர்வபட்ச அட்டமி (22.10.2023)

அன்பிற்காக அன்னையின்
மடியில் சரண்
12.02.1962

ஈழத்துச் சிதம்பர நடராஜன்
திருப்பாதக்கமலங்களில் சரண்
10.10.2005

**காலத்தாலும் மாறாத உறவே!**

விழிவிட்டுத் தூரமானாலும்
இமை தொடும் தூரத்தில் உள்ளதே உன்நிழல்
நீரில் குளித்தாலும்
நெருப்பில் எரிந்தாலும்
கறுக்காத தங்கம் போல
மாறாதே உன் உறவு
காலம் கரைந்தாலும்
கோலம் அழியாத முகம்
நீங்காதே உன் நினைவுகள்
எங்கள் பாசமிகு சிவாவே!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

தும்பளை,
கதிர்காமசுவாமி கோவிலடி,
[illegible].

(cs26651) (AK.1)

உன் அன்புப் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்

# மண்டோஸ் புயல் பாதித்த வடக்கு மீனவருக்கு உதவி

மன்னார் சமூக பொருளாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டு மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட மீனவர்களுக்கு உதவித்திட்டங்கள் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மன்னார் சமூக பொருளாதார நிறுவனத்தின் இயக்குநர் ஜே.ஜாட்சன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் கலந்து கொண்டு 52 பயனாளிகளுக்கு நண்டு பிடிப்பதற்கான வலைகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் என்பவற்றை வழங்கிவைத்தார். இதுவரை மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண மீனவர்கள் 172 பேருக்கு மன்னார் சமூக பொருளாதார நிறுவனத்தால் உதவிகள் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-27-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள் தேவை

பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை.

தொடர்பு: 074 179 3394

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளையில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கட்டுவன், குரும்பசிட்டி யில் 2 3/4 பரப்புப் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 400 1836



## 10 வருட கலைச்சேவையில் தணிகா நுண்கலைக் கல்லூரி

**எதிர்வரும் விஜயதசமி நன்நாளில் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், சித்திரம்**

சிறந்த நுண்கலை ஆசான்களினால் அரசின் கல்வித் திட்டத்திற்கும். வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகளுக்கும் அமைவாக கற்பிக்கப்படுகின்றன.

மற்றும்

- சைவசமய அறநெறி வகுப்பு
- தரம் 01 முதல் 05 வரையான (தனி / குழு) வகுப்பு
- பெண்களுக்கான புதிய (Fitness Workout 'sonu' வகுப்புக்கள் ஆரம்பிக்கின்றன.

எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை

**வகுப்புநடைபெறும் தினங்கள்:**

நடனம் : வெள்ளி, சனி, ஞாயிறு – பி.ப. 03.00 – பி.ப.4.00, பி.ப.04.00 – பி.ப. 5.00
சங்கீதம் : வெள்ளி, சனி, ஞாயிறு – பி.ப. 03.00 – பி.ப.4.00, பி.ப.04.00 – பி.ப. 5.00
சித்திரம் : வெள்ளி, சனி, – பி.ப. 06.00 – பி.ப.7.00, மு.ப.07.00 – மு.ப. 8.00

தொடர்புகளுக்கு: 077 949 5057, 077 491 2927

தணிகா நுண்கலைக் கல்லூரி
183/4 (528) பலாலி வீதி,
திருநெல்வேலி.

(Cs 52571) (N1.)

## நாகபூஷணி திருமண சேவை

**MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA**

கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும். (C-7161)

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

021 222 9306, 077 138 7596, 071 999 9306

## நவராத்திரி தின பரிசளிப்பு விழா

யாழ்., ஒக். 22

நீர்வேலி வடக்கு காளியம்மன் ஆலய நவராத்திரி தினப் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் மேற்படி ஆலய மண்டபத்தில் த.பிரணவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஒ,66)




## காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

(Cs 25812) (N.1)

**077 755 1193**

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பம் 1992,ரோகினி, Dental Surgeon,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை.

Tel : 0777751380 | 0772321404
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## கடை கட்டடம் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி. சத்திர சந்திக்கும் கொட்டடி. சிவன் பண்ணை வீதிக்கும் இடையில் அறுபது (60) அடி நீளம் பதினெட்டு (18) அடி நீளம் முகப்புகொண்ட வியாபார கடை கட்டடமும் ஐம்பது (50) அடி வெற்று நிலமும் பதினைந்து (15) பேர்ச் விற்பனைக்குண்டு.

**077 728 3811**

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பம் 1996,ஆயிலியம், Engineer,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை.

Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

max adz

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பம் 1994,உத்தரம், Doctor,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை.

Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

max adz

## மணமகள் தேவை

திருகோணமலையைச் சேர்ந்த BSc.(Hons) பட்டதாரி கொழும்பில் தனியார் கம்பனியில் வேலைபார்க்கும் 41 வயதுடைய இந்து சமயபற்றுள்ள, விவாகரத்தான மணமகனுக்கு பொருத்தமான மணமகளை உள்நாட்டிலோ / வெளிநாட்டிலோ எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு: 072 337 3883, 077 479 1183
Call / Whatsapp.

## காணி விற்பனைக்கு

நவாலி தெற்கு, அரசடியில் பனைமரங்களுடன் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 788 0066**
**077 403 9298**

## துபாய் (DUBAI) வேலைவாய்ப்பு



| தொழில்வாய்ப்பு(Non Domestic) | எண்ணிக்கை | சம்பளம் Basic Salary (DHS) |
|---|---|---|
| சுத்திகரிப்பாளர்/ பணியாட்கள் CLEANERS / MESSENGERS – ஆண் | 50 | DHS 906 |
| சுத்திகரிப்பாளர்/ பணியாட்கள் CLEANERS / MESSENGERS – பெண் | 50 | DHS 1006 |
| உதவியாளர்கள்/ பணியாட்கள் GENERAL HELPER / MESSENGERS – ஆண் | 50 | DHS 906 |

(Subjects to change according to the exchange rate) 1HDS = Rs. 88.84

AL 2260/Advt: 02/23

**விதிமுறைகள் & நிபந்தனை:-**

- உணவு, தங்குமிடம், போக்குவரத்து , மருத்துவ வசதி இலவசம்
- 2 வருட ஒப்பந்த காலத்துடன் 6 மாத தகுதிகாண் காலம்
- வேலை நாளொன்றுக்கு 8 மணித்தியாலம் மற்றும் 8 மணித்தியால கட்டாய மேலதிக வேலை நேரம், வாரத்திற்கு 6 நாட்கள் 48 மணித்தியாலம்
- புறப்படுவதற்கும், ஒப்பந்தகாலம் பூர்த்தியாகி நாடுதிரும்ப விமான டிக்கட் இலவசம்
- ஏனைய அனைத்து விதிமுறைகள் & நிபந்தனைகள் துபாய் தொழிலாளர் சட்டத்திற்கு உட்பட்டது.

**IMMEDIATE INTERVIEWS WITH FOREIGN PRINCIPALS**

உங்கள் விண்ணப்பப்படிவத்தை (CV) உடன் அனுப்பிவையுங்கள்
cv@jobenvoy.com OR அழையுங்கள் 0770 884 809
0777 321 400 ( WhatsApp)

அரச அனுமதிக்கட்டணம் 204893

ENVOY
License No : 2260

JOBENVOY.COM (PVT) LTD
LEVEL 06, EAST TOWER, WORLD TRADE CENTER, COLOMBO 01
EMAIL : INFO@JOBENVOY.COM | WEB : WWW.JOBENVOY.COM

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தாரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## மணமகள் தேவை

இந்து 28 வயதுடைய யாழில் பிறந்து, கொழும்பில் வளர்ந்து, லண்டனில் நல்ல தொழில் புரியும் (Assistant Accountant) அழகான படித்த மணமகனுக்கு இலங்கை யாழில் பிறந்து லண்டனில் நிரந்த குடியுரிமையுள்ள இந்து பொருத்தமான அழகான படித்த மணமகள் தேவை. (இலங்கையில் வசிக்கும் பெண் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

தொடர்பு: 077 343 4005

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் சப்பறத்துக்கான சகடை செய்வதற்கான கூறுவிலை சமர்ப்பித்தல்

சகடைக்கான அளவுப் பரிமாணம்
நீளம் - 24 அடி
அகலம் - 12 அடி
உயரம் - 5 1/2 அடி


மேற்படி அளவுகளில் சகடை செய்ய வேண்டியுள்ளது. மேலதிக அளவு, வடிவம் தொடர்பான விபரங்களை ஆலயத்தில் நேரடியாக வந்து பெற்று தங்களுடைய விலை மனுக் கோரல் விண்ணப்பங்களை 30.10.2023 இற்கு முன்னதாக ஆலயத்தில் சமர்ப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

து.பிரதீபன்
செயலாளர்
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய
தர்மகர்த்தா சபை.
021 225 5117

(CS 52576) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பு





தோற்றம் 07.02.1928 — மறைவு 15.09.2023

தோற்றம் 26.01.1959 — மறைவு 23.09.2023

எமது குடும்ப குலவிளக்குகள்

**அமரர் விநாசித்தம்பி இராசையா**

**அமரர் நாகேஸ்வரி சிவானந்தம்**

அவர்களினது அந்தியேட்டிக்கிரியைகள் 20.10.2023 வெள்ளிக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்றைய தினம் 22.10.2023 ஞாயிற்றுக் கிழமை அவர்களது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத் தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னார்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக் கின்றோம்.

மருதடிபிள்ளையார் வீதி,
அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

**குடும்பத்தினர்.**

(GR 403133) A-1

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## திரு. சண்முகம் கனகரத்தினம்

தோற்றம் 13.06.1960 — மறைவு 13.10.2021

**திதி: புரட்டாதி வளர்பிறை அட்டமி (22.10.2023)**

ஆண்டுகள் இரண்டாகியும் ஆறவில்லை எங்கள் சோகம்
நீங்கள் எம்மை விட்டு சென்றாலும்
நீங்கள் வாழ்ந்த அமைதியான வாழ்கை
பாதை எம்மை என்றென்றும் வழி நடத்தும்.

என்றும் உம் நினைவுகளோடு ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


செருக்கல்பிள்ளையார் வீதி,
சாவகச்சேரி.

**குடும்பத்தினர்**

(cs 26678) (N.1).

# மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 05 . 1956



இறப்பு 17 . 10 . 2023

## அன்ரனி பார்க்கர் (ராஜன்)

யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகவும் பிரித்தானியா லண்டன் Walthamstow ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி பார்க்கர் 17.10.2023 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வஸ்தியம்பிள்ளை அன்ரனி மேரி திரேசா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற மயில்வாகனம் சரஸ்வதி தம்பதியரின் இரண்டாவது மருமகனும், சிலோஜனா (சறோ) அவர்களின் அன்புக் கணவரும், அமிர்ராஜ் (கமல்), விமல்ராஜ், அருள்ராஜ், மேரி ஜெனிபர் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதிகங்கேஸ்வரி, நிதர்சினி (மீனா), டேவிட் ஆகியோரின் அன்பு மாமனாரும், லியோ, அமீஷா, டேமியன் ஆகியோரின் அன்புப் பேரனும், விஜயன், லதா, டக்ளஸ், கென்ரா கதா மோகன், சதா, சுதா, ரொபின் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மலர், பாஸ்கரன், சிவநேசன், பவா, சற்குணம், கண்ணன், சிறி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அனைத்தும் நாளை (23.10.2023) திங்கட்கிழமை Our Lady and St.George தேவாலயத்தில் இடம்பெற்று City of London Cemetery and Crematorium லண்டனில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**
கமல் (மகன்) +447377194078
விமல் (மகன்) +447914261596
மோகன் (சகோதரன்) +447728833529
அலன்ராஜ் (மருமகன்) 0766098587

(CS 29681) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 01.02.1971

மறைவு 20.10. 2023



## கணேசலிங்கம் சதீஸ்

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் சதீஸ் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) நேற்று முன்தினம் (20.10.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம் சரஸ்வதி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற மக்கேரியர் மற்றும் சரோயினிதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும், யுலிற்றாவின் பாசமிகு கணவரும், ரவி, காலஞ்சென்ற றமேஸ் மற்றும் ஜெயரஞ்சினி, நிரோசா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, நடராஜா, யோகநாதன் ஆகியோரின் தாய்மாமனும், சகாயநாதன், அருள்நேசன், நிர்மலா, கனிஷ்ரா, ஜடா, யுனிகா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (22.10.2023) ஞாயிற்றுக்கிழமை இல.499, கொழும்புத்துறை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கெலன் தோட்ட சேமக்காலையில் பிற்பகல் 2 .00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 499, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 926 0128, 077 610 3546**

(cs 52575) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

நகைக் கடை / பான்சி கடைகளுக்குக்கான
**கண்ணாடி பிற்றிங் புதியன**
விற்பனைக்கு உண்டு.
ரங்கனாஸ் கோல்ட் ஹவுஸ்
62 கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.
**077 654 4158**
cs52567 AK - 1)

## Online Calsses (நிகழ் நிலை வகுப்புக்கள்)

**GCE A /L பௌதிகவியல்** (Physics) (Boys Only)
**GCE A /L உயிரியல்** (Bio)
**ஆங்கில மொழி மூலம்** (English Medium) **கற்பிக்கப்படும்.**
தொடர்பு: Physics - 074 024 3918
Bio - 076 532 3680
(cs 52570) (N-1)

## ஏடுகள் விநியோகம்

வித்தியாரம்ப நிகழ்விற்கு எமது நிறுவனத்தால்
ஏடுகள் வழமைபோல இலவசமாக வழங்கப்படுகின்றது.
ஏடுகள் பெறவிரும்புவோர் கூடியமட்டும் காரியாலய
நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

**அண்ணா நிறுவனம்**
**துரை வீதி, இனுவில் தெற்கு, இனுவில்.**

சாவகச்சேரியில்
## மிருதங்க வகுப்பு ஆரம்பம்

**விஜயதசமியை முன்னிட்டு**
**புதிய வகுப்புகள் ஆரம்பம்**
இடம் : பெரியமாவடி கந்தசுவாமி கோவில் மண்டபம்,
பேரம்பலம் வீதி.
ஆசிரியர்: திரு.கி. செல்வமோகன்
கலாவித்தகர் - MA, BFA
**077 615 3548, 076 936 3582**

## வெளிநாட்டில் உயர்கல்வி

London I Canada I Italy I Malta I Germany
Paris ( France) I Hungary I Latvia I Lithuania
போன்ற நாடுகளில் மிக துரித கதியில்
வெளிநாடு சென்று பட்டப்படிப்பினைத்தொடர
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்
Family & Single Visit Visaவுக்கான
ஆலோசனைகளும் வழங்கப்படும்.
3 வாரங்களில் விசாக்கள்
CARE HOME , HEALTH CARE பதவிக்கு தகுதி
உள்ளவர்கள் உடன் விண்பிக்கவும்.

**CROATIA STUDY VISA**
- Tution fees -4000-5000euro
- IELTS தேவை இல்லை (No IELTS)

O/L, A/L
சித்தியுடையவர்கள்
விண்ணப்பிக்க முடியும்
October Intake க்கிற்கான
பதிவுகள் ஆரம்பம்.
Work Permit & Settlement
Opportunities After Studies
**American College of Applied Studies Pvt Ltd**
அழையுங்கள்:
**0771828215 I 0759571203**

## SPECIAL FARES

| | | | |
|---|---|---|---|
| LONDON | - 405700 | SINGAPORE | - 92500 |
| MELBORNE | - 317100 | MALAYSIA | - 60000 |
| NARITA | - 234500 | PHILIPPINES | - 184600 |
| SHANGHAI | - 173000 | ROME | - 318000 |
| ZURICH | - 300000 | DUBAI | - 130000 |
| CANADA | - 583900 | ROMANIA | - 274000 |
| PARIS | - 238000 | BANGKOK | - 142000 |

*STUDENT SPEACIAL FARE*
*SPEACIAL RATE FOR GROUP BOOKINGS*
CONDITION APPLY
ifourtravels2017@gmail.com

**VISA SERVICES**

| | | | |
|---|---|---|---|
| BANGKOK | - 16500 | VIETNAM | - 43500 |
| MALAYSIA | - 15000 | TURKEY | - 79000 |
| INDIA | - 12500 / E VISA 11000 | CHINA | - 43000 |

Credit Card Accept
# HOTEL BOOKINGS
# TRAVEL INSURANCE
# AIRPORT DROP & PICKUP
EUROPE VISA HANDLING
0777 262672 / 077 2332672
**I FOUR TRAVELS & TOURS**
#378, George De Silva Mawatha, Colombo- 13


## மாகாண மட்டப் போட்டிகள் — விண்ணப்பப்படிவம்

Sri Lanka வனிதாபிமான
நாட்டை கட்டியெழுப்பும் மகளிரை வலுப்படுத்துவோம்
2023 NDB வங்கி

இலங்கையின் ஊக்கமிக்க பெண்களை இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முழுமையாக இணைத்துக்கொள்வதுடன் அவர்களை பெருமைப்படுத்தும் நோக்கத்துடன் NDB வங்கி மற்றும் News 1st இணைந்து நான்காவது முறையாக நடாத்தும் இலங்கையின் வனிதாபிமான 2023 விருதுகள் நிகழ்வுக்கு விண்ணப்பிக்க, கீழே உள்ள விண்ணப்ப படிவத்தை தேவையான ஆவணங்களுடன் பூர்த்தி செய்து கீழே கொடுக்கப்பட்டுள்ள விலாசத்துக்கு 2023 நவம்பர் 12க்கு முதல் அனுப்பி வைக்கவும்.

| வகை | | விளக்கம் |
|---|---|---|
| தொழில் முயற்சியாளர் (நுண்) | ☐ | ஐந்து ஊழியர்களுக்கு குறைவானவர்கள் பணியாற்றும் வர்த்தகம் ஒன்றை நடத்திச் செல்லுதல் |
| தொழில் முயற்சியாளர் (சிறிய) | ☐ | 06-15க்கும் இடைப்பட்ட ஊழியர்கள் பணியாற்றும் வர்த்தகமொன்றை நடத்திச் செல்லுதல் |
| தொழில் முயற்சியாளர் (வளர்ந்துவரும்) | ☐ | வர்த்தக நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியிருக்க வேண்டும் என்பதுடன் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத காலம் அதனை நடத்திச் சென்றிருக்க வேண்டும் |
| கல்வி சேவைகள் | ☐ | கல்விச் சேவைகள் ஊடாக சமூகத்தின் மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புச் செய்தவர்களுக்காக |
| இளம் தலைமைத்துவம் | ☐ | 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கு 21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவ திறமைகளை கொண்டவர்களுக்காக |
| சமூக சேவைகள் | ☐ | சமூகத்தின் மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோருக்காக |
| இலக்கியம் | ☐ | இலக்கிய துறையில் மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்காக |
| விளையாட்டு | ☐ | விளையாட்டுத்துறையில் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் திறமைகளைவெளிப்படுத்தியவர்களுக்காக |

01. விண்ணப்பதாரியின் பெயர் : ..............................

02. தேசிய அடையாள அட்டை இலக்கம் : .................. 03. பிறந்த திகதி : ..................

04. தொலைபேசி இலக்கம் (கையடக்க தொலைபேசி) : .................. (நிலையான தொலைபேசி) : ..................

05. தனிப்பட்ட முகவரி : ..............................

07. தொழில் மற்றும் தொழில் செய்யும் இடம் : ..............................

08. திருமணமானவர்/ திருமணமாகாதவர் : ..............................

இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.............................. ..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம் திகதி

**அறிவுறுத்தல்கள்**

(01) ஸ்ரீ லங்கா வனிதாபிமான 2023 மாகாண மட்ட போட்டிகளுக்காக 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு 21 வயது பூர்த்தியான மற்றும் 21 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
(02) ஒரு விண்ணப்பதாரி ஒரு பிரிவுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
(03) நீங்கள் விண்ணப்பிக்கும் பிரிவுக்கு தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் சான்றுதழ்களின் பிரதிகளை விண்ணப்ப படிவத்துடன் இணைக்கவும்.
(04) தபாலுறையின் வலது புறத்தில் உங்கள் மாகாணத்தை குறிப்பிடவும்.
(05) நடுவர்களின் முடிவே இறுதியானது. இதனை எக்காரணத்திற்காகவும் சவாலுக்குட்படுத்தமுடியாது.
(06) தொழில் முயற்சியாளர்-வளர்ந்துவரும், தொழில் முயற்சியாளர்-நுண், தொழில் முயற்சியாளர்-சிறிய ஆகிய பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கும் போட்டியாளர்கள் தமது தொழில்முயற்சியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி**

NDB வங்கி , இலக்கம் 40, நவம் மாவத்தை ,கொழும்பு 2 என்ற முகவரிக்கு உங்கள் விண்ணப்பத்தை அனுப்பலாம். அல்லது vb2023@ndbbank.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். மேலதிக விபரங்களுக்கு 0777 6000 40 என்ற இலக்கத்தை தொடர்புகொள்ளவும்.

NEWS 1ST
அரலிய உங்களை விட உங்களுக்கு அதிகமாக வழங்கிடும்
NDB வங்கி எதிர்கால வங்கியியல் முன்னோடி

011 744 8888 www.ndbbank.com

**விண்ணப்பிக்கும் கடிதஉறையின் வலதுபக்க மூளையில் வனிதாபிமான 2023 என்று குறிப்பிடவும்.**


## கொல்லிமலை மாந்திரீகம்

THE MOST POWER FULL

உங்கள் காரியம் எதுவானாலும் வன்சொட்டில் முடிக்க முடியும்.
ஓயாமல் வாட்டும் பிரச்சனைகள் மாயமாய் மறையும். நிம்மதியும்
சந்தோஷமும் கைக்கோர்க்கும். பிரிந்த பிரச்சனைப்பட்ட காதலர்களையும்,
தம்பதியினரையும் அவசரம், அவசியம் அறிந்து ஒன்று சேர்க்க முடியும்.
உங்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டு அடங்கி இணக்கமாக நடப்பார்கள்.
நீங்கள் பிரச்சனைகளால் தடுமாறும் போது சரியான தீர்வு
நாங்கள் கொடுப்போம்.

வெற்றி அழைக்கிறது சகலமும் கிடைக்கிறது
ஓயாமல் வாட்டும் பிரச்சினைகளும் மாயமாய் மறையும்
குறைந்த கட்டணம்
நேரில் வராமலும் காரியங்களை சாதித்துக்கொள்ளலாம்.
**Call : 077 405 7868**
Service by post also Available
சுவாமி ஜீ ஜெய ஸ்ரீ
For Contact : 077 405 7868
**MASTER OF BLACK MAGIC**
உங்கள் கவலைகள் எல்லாம் தீர்ந்து நிம்மதி கிடைக்கும்.
குடும்ப வாழ்க்கை பிரகாசம் ஆகும்.

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் உட்பட்ட பகுதியில் இருவர் தங்குவதற்கு ஏற்ற சமையலறை, குளியல் அறை, தனி அறைக்ளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (தொழில் புரிபவர்கள் மற்றும் மாணவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: **077 814 5018**

## மணமகள் தேவை

யாழ் கத்தோலிக்க R.C வத்தளையை வசிப்பிடமாகக் கொண்ட 1990 இல் பிறந்த பிரபல நிதி நிறுவனத்தில் Executive தொழில்புரியும் மணமகனுக்கு இந்திய வம்சாவளி தவிர்ந்த படித்த அழகிய மணமகள் தேவை.
076 6571666 / 076 0259661

## விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ்நகரில் இயங்கும் நிறுவனம்
ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.
(குறைந்தது ஒரு வருடகால அனுபவம்
உள்ளவராக இருத்தல் வேண்டும். யாழ்நகரை
அண்மித்து வசிப்பவர் விரும்பத்தக்கது).
Call only : 076 828 6976
Whatsapp : 075 097 2238
(Send CV only for Whatsapp)
(cs.52555 (AK.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொல்புரம் கலாலய நாடக மன்றத்தின் தலைவர் செல்லையா உதயச்சந்திரனுக்கு கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்த நிகழ்வு கடந்த வாரம் மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் இடம்பெற்றது. (ச-63)

# மக்கள் மனம் அறிந்துதான் தேர்தல்முறைமை மாற்றமாம்

## நீதி அமைச்சர் வியாக்கியானம்



**கொழும்பு, ஒக். 22**
**நாட்டில் தற்போதுள்ள நாடாளுமன்றத் தேர்தல் முறைமை மாற்றப் படவேண்டும் என்பதே மக்களின் நிலைப்பாடு. மக்கள் மனம் அறிந்துதான் அதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதனை மீளப்பெறும் திட்டம் இல்லை என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

'சிஸ்டம் சேஞ்ச்' பற்றிக் கதைக்கின்றனர், ஆனால் அதனை ஏற்படுத்த முற்படுகையில் எட்டி உதைக்கின்றனர் எனவும் பிரதான எதிர்க்கட்சிமீது அவர் விசனம் வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தேர்தல் முறைமை மாற்ற விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைத்த கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை நானே முன்வைத்தேன், அதற்கான பொறுப்பை ஏற்கின்றேன்.

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டவரைவு முன்வைத்தபோதும், தேர்தல் செலவினங்களைக் கட்டுப் படுத்துவதற்கான சட்டவரைவை முன்வைத்தபோதும் அதன் வெளிப்படைத்தன்மை பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டது. சவால்களும் இருந்தன. ஊழல் எதிர்ப்புச் சட்டவரைவை முன்வைத்தபோதும் இதே நிலைமை காணப்பட்டது. ஆனால் அவை மூன்றும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

1978 அரசமைப்பிலேயே தற்போதைய நாடாளுமன்றத்தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த முறைமையின்கீழ் 1989 இல் பொதுத்தேர்தல் நடைபெற்றது. அதன்பின்னர் 1994 இல் தேர்தல் நடத்தப்பட்டது. அதன்போது ஊழல், மோசடிகளுக்கு வழிவகுக்கும் இந்தத் தேர்தல் முறைமை மறுசீரமைக்கப்படும் என்ற உறுதிமொழியை சந்திரிகா அம்மையார் வழங்கினார். அந்த உறுதிமொழியை வழங்கியதால்தான் அவருக்கு 62 சதவீத வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

2001 இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசும், தேர்தல் முறைமை மாற்றம் அவசியம் என்பதை ஏற்றுக்கொண்டது. இதன்பிரகாரம்தான் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட்டு, அதன் தலைமைப்பதவி அப்போது எதிரணியில் இருந்த தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்கப்பட்டது. 12 ஆண்டுகளாக இது சம்பந்தமாக விசாரணைகளை நடத்தி, அனைவருக்கும் கருத்துகளை தெரிவிக்க வாய்ப்புகளை வழங்கி, அறிக்கை முன்வைத்தார்.

மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளராக களமிறக்கப்பட்டபோது, சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிவகுக்காத வகையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படும் எனக் கூறினோம். அதனைச் செய்தோம். அதேபோல தற்போதுள்ள தேர்தல் முறைமை மாற்றப்படும் எனவும், தினேஷ் குணவர்த்தனவின் அறிக்கை அதற்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டி ருந்தோம்.

இந்த அறிக்கையின் பிரகாரம் பிரதமரால் (நல்லாட்சியில்) அமைச்சரவைப் பத்திரமொன்றும் முன்வைக்கப்பட்டு அதற்கு அனுமதி பெறப்பட்டிருந்தது. எனினும், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். அவர் அவ்வாறு செய்திருக்காவிட்டால் புதிய முறைமை யின்கீழ்தான் நாடாளுமன்றத்தேர்தல் நடைபெற்றிருக்கும்.

தற்போதுள்ள நாடாளுமன்றத்தேர்தல் முறைமையின்கீழ் 89 இல் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்துத் தரப்புகளும் அது மறுசீரமைக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வழங்கின. ஊழல் மோசடிமிக்க இந்த முறைமையால் பண பலம் படைத்தவர்கள்தான் நாடாளுமன்றம் வரமுடியும், புத்திஜீவிகளுக்கு இடமில்லை என்ற விமர்சனமும் உள்ளது.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும், மக்களும் மாற்றத்தைக் கோருகின்றனர், எமது நாட்டு மக்கள் முட்டாள்கள் அல்லர், இது விடயம் தொடர்பில் நாடாளுமன்றம் தனது பொறுப்பை நிறைவேற்றுகின்றதா என அவர்கள் பார்த்துக் கொண்டு இருக்கின்றனர். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு நாம் முற்பட வில்லை. செய்யக் கூடிய விடயங்களை மட்டுமே செய்வோம். என்றார். (ஓ-44)


## கடை வாடகைக்கு

கே.கே.எஸ். (K.K.S) வீதி, இணுவில் உப்புமடம் சந்தியில் இருந்து குறிப்பிட்ட தூரத்தில் உள்ள கடை வாடகைக்கு உண்டு.
(சாப்பாடு கடை மற்றும் சில கடைகள் தவிர்ந்தது)
தொடர்பு: 077 078 1087
(CS 26877) A-1

## வேலையாட்கள் தேவை

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள வெளி நாட்டவர்களுக்கும் மற்றும் தமிழ் உறவுகளுக்கும் இலங்கையின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் Souvenir Central (Pvt) Ltd எனும் வியாபார ஸ்தாபனத்திற்கு பெண் வேலையாளர் தேவை.
(ஆங்கிலம் மற்றும் கணினி தொடர்பான அறிவு இருப்பது சிறந்தது.)
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்-
077 188 6719
(CS 26688) A-1

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?
பால்மா குளிசை - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு
கருமை நிறம் நீங்க வேண்டுமா?
077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(cr 37149)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 23-07-1949
உதிர்வு 22-09-2023



அமரர் திருமதி
சிவசுப்பிரமணியம் அன்னலட்சுமி
31 நாள்கள் ஓடி மறைந்துவிட்டன
ஆனாலும் உங்கள் நினைவு
எப்பவும் எங்களை வாட்டுகின்றது
உங்கள் நல்ல குணங்களை மறக்க முடியவில்லை
உங்களை நினைத்து தினமும் கலங்குகின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை
மருமக்கள், சி.[illegible], சி. [illegible]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 05 . 05 . 1969
விண்ணுலகில் 01 . 11 . 2022



திரு.செல்வராஜா ரமேஷ்
(உள்ளூராட்சி உதவியாளர், JP )
திதி: ஐப்பசி மாத அபரபட்ச அட்டமி (22.10.2023) ஞாயிற்றுக்கிழமை
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"
ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள்
கடந்தாலும் தங்களின் வழிகாட்டுதல்களும்
எங்களுடன் நீங்கள் சேர்ந்து வாழ்ந்த
நினைவுகளும் எப்பொழுதுமே இருக்கும்....
"ஹேமா இல்லம்"
சோமசுந்தரப் புலவர் வீதி,
[illegible]
உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்
(cs.52550) (N.!)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





# யாழ்.நன்நடத்தை அலுவலக சிறுவர்தினக் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணம் மாவட்ட நன்நடத்தை அலுவலகத்தின் ஏற்பாட்டில் இன்று சிறுவர்தின விழா கொண்டாடப்படவுள்ளது.

இராமநாதன் வீதியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் இந்த நிகழ்வு இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

காலை நடைபெறும் முதல் அமர்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரனும், பிற்பகல் நடைபெறவுள்ள இரண்டாவது அமர்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்களில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள், பரிசில்கள் இந்த நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்களில் மேற்கொள்ளப்பட்ட நேரடித் தரிசிப்புகளின் அடிப்படையில் சிறுவர் இல்லங்கள் தரமிடப்பட்டு அவற்றுக்கான விருதுகளும் இன்றைய நிகழ்வில் வழங்கப்படவுள்ளன. சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இன்றைய நிகழ்வில் நடைபெறவுள்ளன.

காலை நடைபெறும் முதல் அமர்வில் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர்ப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதனும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரணவனும் கௌரவ விருந்தினராக யுனிசெப் இணைப்பாளர் திருமதி எஸ்.சர்மிலியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பிற்பகல் நடைபெறும் இரண்டாவது அமர்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேனவும், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன், வடக்கு மாகாண நிதி மாகாணத் திறைசேரியின் பிரதிப் பிரதம செயலாளர் ச.குகதாஸ், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் கீதாஞ்சலி சத்தியதால் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-இ)






முதன்முறையாக டவர் மண்டப அரங்கின்

# யாழில் நாடகத்திருவிழா இந்தவாரம் கோலாகலம்

யாழ்ப்பாணம், ஒக். 22

கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் 'டவர்' மண்டப அரங்க மன்றத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் வருடந்தோறும் நடைபெறுகின்ற நாடகத்திருவிழா, முதற்தடவையாக இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இந்த நாடகத் திருவிழா இடம்பெறவுள்ளது. யாழ்.மாணவர்களின் நாடகத்திறமைகளையும் நாடகக் கலையையும் வளர்க்கும் முகமாக இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இதில் டவர் மண்டப அரங்க மன்ற பாடசாலை மாணவர்களின் நாடகங்கள், வலிகாமம் பிரதேசத்தை முதன்மைப்படுத்துகின்ற நாடக ஆசிரியர்களின் நாடகங்கள் உட்பட நாடக ஆளுமைகள் பலரதும் பல்வேறு நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன.

நிகழ்வில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கும் மாணவர்கள் உட்பட துறைசார்ந்த அனைவரும் பங்கேற்று பயனடையுமாறு 'டவர்' மண்டபத்தின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி சண்முகசர்மா ஜெயபிரகாஷ் தெரிவித்துள்ளார். (ச-20)

# வெகுஜன எழுச்சி நினைவுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 22

1966ஆம் ஆண்டு இடம்பெற்ற சாதியத்துக்கு எதிரான சுன்னாகம் வெகுஜன எழுச்சியின் 57ஆவது வருட நினைவுதினக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலாநிதி மீநிலங்கோ தெய்வேந்திரன் 'சாதியத்துக்கு எதிரான போராட்டங்களில் வர்க்கப் பரிமாணங்கள்' எனும் தொனிப்பொருளில் உரையாற்றவுள்ளார். (ச-66)



நவராத்திரி விழாவை முன்னிட்டு புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலய இந்துமா மன்றத்தின் ஏற்பாட்டில் மாணவர்களிடையே கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் போன்ற போட்டிகள் இடம்பெற்றன. (ச)

# நவராத்திரிதின பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 22

நீர்வேலி வடக்கு காளியம்மன் ஆலய நவராத்திரிதின பரிசளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு த.பிரணவன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீட பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர், பண்டிதர் செ.த.குமரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### லோகேஸ்வரன் கமலநாயகி

பிறப்பு 25-12-1951 இறப்பு 21-10-2023

நெடுந்தீவு மேற்கு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லோகேஸ்வரன் கமலநாயகி அவர்கள் 21.10.2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முருகப்பர் பத்தினிப் பிள்ளையின் மூத்த புதல்வியும் சண்முகம் நாகம்மாவின் பாசமிகு மருமகளும் அமரர் லோகேஸ்வரனின் அன்பு மனைவியும் நிதர்ஷன், தர்ஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலைமகள், கனகறஞ்சினி (பிரதேச செயலகம் நெடுந்தீவு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுந்தரலிங்கம், சந்திரசேகரன், மங்களேஸ்வரி, அற்புதநாயகி, அமிர்தலிங்கம், இரத்தினநாயகி, கனகலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லோகநாதன், தியாகராசா, விமலாதேவி, இந்திராதேவி ஆகியோரின் மைத்துனியும் கிஷான், சர்ஜித், ஜனார்த் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிச்சடங்கு 23.10.2023 முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வெல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 0580794
077 8664248

தகவல்:
குடும்பத்தினர்.

Cs 26689 M -1




# ஆதிவாசிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஒக். 22

மஹியங்கனையில் வசித்துவரும் ஆதிவாசிகள் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர்.

இலங்கையின் ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில அத்தோவரின் தலைமையிலான 70 ஆதிவாசிகள் இவ்வாறு வருகை தந்தனர். அதைத்தொடர்ந்து இவர்களுக்கான விருந்தோம்பல் நிகழ்வு நாச்சிமார்கோவில் அருகாமையில் அமைந்துள்ள ராஜா கிறீம் விடுதியில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து அவர்கள் நாகவிகாரைக்கும், நயினாதீவு நாகதீபம் விகாரைக்கும் சென்றனர். (ஒ-20-27-26)

## கலை நிகழ்வுகள்

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயம் ஆகியவற்றின் நவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு வருடாவருடம் இடம்பெறும் கலை நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளன.

## இந்தியப்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையினுள் உயிரிழந்தோர் நினைவாக உள்ள நினைவுப்படங்களின் முன்னால் நேற்றுக் காலை 9.30 மணிக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, அக வணக்கம் செலுத்தப்பட்டு, ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உட்பட பெருமளவு மருத்துவர்கள், தாதியர்கள் , மருத்துவமனைப் பணியாளர்கள், இந்தியப் படையால் கொல்லப்பட்டோரின் உறவினர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை - மருத்துவமனைக்கு வெளியே



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், மருத்துவமனைக்குள் இந்தியப் படையால் கொல்லப்பட்டோருக்கான நினைவேந்தல் நடத்தப்பட்டது. (அ-ஒ-20-125)


## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை இராசரத்தினம்

(முன்னாள் உப தபாலதிபர், வரணி)

கரம்பைக்குறிச்சி கிழக்கு வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசரத்தினம் (முன்னாள் உப தபலாதிபர், வரணி) நேற்று (21.10.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், தில்லைநாதபிள்ளை சீதேவன் தம்பதியரின் அன்பு மருமகனும், நல்லம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளை, வள்ளியம்மை, சின்னாச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற தெய்வேந்திரம் பிள்ளை தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராசேந்திரன், இரத்தினேந்திரன் (சவுதி), இராகவன் (பளைப்பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலேஸ்வரி (சவுதி), ஜசிந்தா (சாவகச்சேரி பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷயா (சவுதி), அருசன் (சவுதி), பாதுஷா, டர்சனா, ஆராதனா, அபிலாஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நடைபெற்று, பி.ப 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொடிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 034 430


## மின்கட்டண...

யாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கிய அனுமதி சட்டவிரோதமானது என அந்த சங்கத்தின் செயலர் சஞ்ஜீவ தம்மிக சுட்டிக்காட்டியுள்ளார்.

வருடமொன்றுக்கு மூன்று தடவைகள் மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை சட்டத்தில் இடமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சாரசபை முன்வைத்த 4 காரணங்களும் பொய்யானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் முதல் மின் கட்டணத்தை அதிகரிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய, 18 வீதத்தில் இருந்து 20 வீதம் வரையான மின் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள இலங்கை மின்சாரசபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## கட்டுப்பணம்...

பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் இருந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கு 50 ஆயிரம் ரூபா என்ற வைப்புத் தொகையை 26 இலட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கான யோசனையொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளருக்கான வைப்புத் தொகையை 75 ஆயிரம் ரூபாவிலிருந்து 31 இலட்சம் ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி வேட்பாளர் வைப்புச் செய்யக்கூடிய தொகையில் 25 இலட்சம் ரூபாவை திரும்பப் பெறக்கூடிய தொகையாகவும் எஞ்சிய ஒரு இலட்சம் ரூபாவை திருப்பிச் செலுத்த முடியாத வைப்புத் தொகையாகவும் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சுயேச்சை வேட்பாளரின் வைப்புத் தொகையில், 30 இலட்சத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியும் என அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## நாளாந்தம்...

படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இந்த முறை அறிமுகப்படுத்தப்படும் என மின் சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்துள்ளார். இதன் மூலம் எரிபொருள் விலைகள் தினமும் மாறிக்கொண்டே இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## பருத்தித்துறை...

விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கட்டார் விமான சேவையின் ஊடாக டோகா நோக்கிச் செல்வதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு பிரவேசித்திருந்த சந்தர்ப்பத்திலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பணத்தை...

பண மோசடிகளில் சிக்கிக் கொண்ட பலர் உள்ளனர். குறிப்பிட்ட விளையாட்டுச் செயலிகளில் இணைந்து கொள்வோர் அங்கு ஒரு சிலரைக் கொண்ட குழுவாக்கப்படுகின்றனர். அதில் இணையும்போது ஒரு சிறு தொகைப் பணம் அவர்களின் கணக்குக்கு வழங்கப்பட்டுச் சேர்க்கப்படுகின்றனர். இதன்போது அந்தக் குழுவில் அதிகளவானோர் இருப்பதாகக் காட்டும் வகையில் அந்தச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் விளையாட்டின் ஒவ்வொரு படிநிலையின்போதும் ஒரு தொகைப் பணத்தை அதனை விளையாடுவோர் செலுத்தவேண்டும். அதில் சிறு தொகை உடனடியாகவே மீளவும் விளையோடுவோரின் கணக்கில் வரவு வைக்கப்படும். தொடக்கத்திலே விளையாடுபவர் வெற்றிபெறுவார்.

அதனால் ஏற்படும் நம்பிக்கையால் மீண்டும் மீண்டும் பணம் செலுத்தி விளையாடத் தூண்டப்படுகின்றனர். விளையாட்டின் ஒவ்வொரு படிநிலையின்போதும் செலுத்தவேண்டிய தொகை அதிகரித்துச் செல்லும். இது இலட்சங்களை எட்டும்போதும் கணக்கில் சிறியளவு தொகை வரவு வைக்கப்படும். உதாரணமாக 40 இலட்சம் ரூபா ஒருவர் செலுத்தினால் அவரது கணக்கில் சில இலட்சங்கள் உடனடியாக வரவு வைக்கப்படும். விளையாட்டில் வெற்றி பெற்றால் வெற்றித் தொகையும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படும்.

பெருந்தொகையை வைப்பிலிடும் சந்தர்ப்பங்களில் விளையாட்டுப் படிமுறைகளை நிறைவேற்றவில்லை என்று கூறி ஒரு கட்டத்தில் அந்த விளையாட்டுக் குழுவில் இருந்து விளையாடுவோர் நீக்கப்படுசின்றனர். இதனால் முதலில் பெரும் பணம் கிடைக்கும் என நினைத்து பல இலட்சங்களை இந்த விளையாட்டில் முதலீடு செய்தோர் பலர் இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பணத்தை இழந்துள்ளனர். இது தொடர்பாக எவர் மீதும் குற்றச்சாட்டுப் பதிவு செய்ய முடியாத நிலைமையே காணப்படுகின்றது. அந்தக் குழுவில் உள்ளவர்களிடையே பணம் பரிமாற்றப்பட்டு, ஒரு சங்கிலித் தொடராக இது மேற்கொள்வதால் இறுதியில் பணத்தைப் பெற்றுக்கொள்வது யார் என்பதைக் கண்டுபிடிப்பதும் கடினமானது. ஆகையால் இவ்வாறான விளையாட்டுச் செயலிகள் மூலம் நடக்கும் பண மோசடி தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றது. இந்தப் பண மோசடியில் பலர் சிக்கி, பணத்த இழந்த போதும் அவர்களால் முறைப்பாடு செய்ய முடிவதில்லை. யாருக்கு எதிராக முறைப்பாடு செய்வது என்ற சிக்கலாலேயே பலர் இது தொடர்பில் மௌனமாக இருக்கின்றனர். பல்வேறு தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்தல் சம்பவங்களின் பின்னணியில் இவ்வாறான மோசடிகளும் உள்ளன. எனவே இவ்வாறான செயலிகளை மக்கள் உபயோகப்படுத்தாது தவிர்த்தலே புத்திசாலித்தமானது - என்றார். (அ-எ-26)

### ஜனாதிபதித்...

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு தலைமையேற்று உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்சக்களைப் பாதுகாப்பதற்காகவே நான் ஆட்சியைப் பொறுப்பேற்றேன் எனச் சிலர் விமர்சித்தனர். கோத்தாபய ராஜபக்சவிடம் வலிந்துசென்று நான் பிரதமர் பதவியைக் கேட்கவில்லை. அவர் தந்தார், நான் ஏற்றேன். நாட்டுத் தலைவர் பொறுப்பு வழங்கினால் ஏற்காமல் இருக்க முடியுமா என்ன? அதுவும் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லவே அந்த பொறுப்பை ஏற்றேன். இலங்கையர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதே எனது இலக்கு.

அரசமைப்புக்கு அப்பால்சென்று ஆட்சியை மாற்றுவதற்கு சிலர் முற்பட்டனர். அதையும் தடுத்து நிறுத்தி நாட்டில் உறுதிப்பாட்டை ஏற்படுத்தினேன். இலங்கையை 'ஸ்மார்ட்'நாடாக கட்டியெழுப்பி, நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்துவதே எமது நோக்கமாக இருக்கின்றது. மாற்றம் என்பது எம்மில் இருந்து ஆரம்பிக்கவேண்டும், அந்த மாற்றத்தை பிறரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. ஜனாதிபதியாக நான் மாற்றத்தை ஆரம்பித்தேன். 21ஆவதுதிருத்தச்சட்டம் ஊடாக எனது அதிகாரத்தைக் குறைத்து, அரசமைப்பு பேரவைக்கு அதிகாரம் வழங்கினேன். நாடாளுமன்றத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதற்கும் அதிகாரங்களை வழங்கினேன். நாடாளுமன்றத்தில் பாதீட்டு அலுவலகம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசமைப்புக்கு அமைவாக அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலையும், அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலையும், அவை முடிந்த பின்னர் 2025 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் மாகாண சபைத் தேர்தலையும் நடத்தத் தீர்மானித்துள்ளேன். ஐக்கிய தேசியக் கட்சியும் இதற்குத் தயாராகவேண்டும் - என்றார். (அ-ஒ-44)

### சிங்களக்...

பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார் புலனாய்வுஊடகவியலாளரும், இலங்கை விமானப்படையின் முன்னாள் அதிகாரியுமான கீர்த்தி ரத்னாயக்க.

இந்த காவி உடை தரித்த குழுவில் உள்ள சிலரை ஐ.எஸ். முத்திரையுடன் களமிறங்குபவர்கள் வெட்டிக் கொலை செய்வார்கள், அதன் பின்னால் நாட்டில் எவ்வாறானதொருநிலை ஏற்படும்? அடுத்த தேர்தலை இலக்கு வைத்த வியூகமாக இது இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரபல சிங்கள ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவுடன் இடம்பெற்ற நேர்காணலின்போதே, கீர்த்தி ரத்னாயக்க மேற்படி பகீர் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கீர்த்தி ரத்னாயக்க இந்தியாவின் 'றோ' அமைப்பின் உளவாளி என்ற குற்றச்சாட்டுக்கும் இலக்கானவர். அவர் அதனை நிராகரித்தும் உள்ளார். மேற்படி நேர்காணலின்போது அவர் கிழக்கு விவகாரம் தொடர்பில் வெளிப்படுத்திய முக்கியமான தகவல்கள் வருமாறு:-

கிழக்கில் காணி பகிர்வு தொடர்பான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படு கின்றது. இதனை யார் செய்வது? அம்பிட்டிய சுமண தேரர் என்ற புதுமையான தேர ரும், எங்கிருந்து வந்தார்கள் என்பதை அடையாளம் காணமுடியாதுள்ள காவி உடை தரித்த சிலருமே இதனைச் செய்கின்றனர். இது தொடர்பில் தேடிப் பார்த்தேன். தகவல்கள் கிடைத்தன. இதன் பின்னணியில் மிகவும் சூட்சுமமான முறையில் வேலைத்திட்டமொன்று இடம்பெறுகின்றது.

கிழக்கில் காணிப் பகிர்வு மற்றும் சிங்கள மக்கள் குடியேற்றம் போன்ற நடவடிக்கையில் காவி உடை தரித்த சிலர் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பதை அறிவது கடினமாக உள்ளது. இது புலனாய்வுப் பிரிவின் 'கேம்' ஆகும். காவி உடை தரித்தவர்கள் புலனாய்வுப் பிரிவினரால் அனுப்பப்பட்ட நபர்களாக இருக்கலாம்.

எனக்குக் கிடைத்துள்ள தகவலின் பிரகாரம் இன்னும் சில மாதங்களில் அதாவது இந்தியத் தேர்தலுக்கு முன்னதாக, அந்தக் காலப்பகுதியில் இலங்கையிலும் தேர்தல் வரும், ஐ.எஸ். முத்திரை குத்தப்பட்ட சிலரால், இந்தக் காவி உடை தரித்தவர்களில் மூன்று, நான்கு பேர் வெட்டிப் படுகொலை செய்யப்படலாம். ஐ.எஸ். முத்திரை குத்தப்பட்டவர்கள் காவி உடை அணிந்தவர்களை வெட்டிக் கொன்றால் நாட்டு நிலைமை எப்படி இருக்கும்? அப்போது தேசத்தைக் காக்கும் நாயகன் என்ற கோஷம் எழும். தேசத்தின் காவலன் எனக் கூறப்பட்ட கோத்தாபய ராஜபக்சவுக்கு வயதுபோய் விட்டது, விஜயதாஸ ராஜபக்ச இளமையானவர், தான் அந்த இடத்துக்கு வரலாம் என அவர் நினைக்கின்றார்.

ஐ.எஸ். என்பது அதிகாரத்துக்கு வருவதற்கு பயன்படுத்தப்படும் சிறந்த கருவியாக உள்ளது. மத்திய கிழக்கிலும் புலனாய்வாளர்களால்தான் ஐ.எஸ். உருவாக்கப்பட்டது. இலங்கையிலும் வேலைத்திட்டமொன்றை முன்வைத்து மக்களின் ஆசியுடன் ஆட்சிக்கு வர முடியாதவர்கள், குறுக்கு வழியில் ஆட்சிக்கு வருவதற்காக ஐ.எஸ். மற்றும் முஸ்லிம் விரோதப்போக்கைப் பின்பற்றுகின்றனர் - என்றார். (அ-ஒ-44)

### தென்னையிலிருந்து...

வரணி, நாவற்காட்டில் தென்னைமரத்தில் தேங்காய் பறிப்பதற்காக ஏறிய 60 வயதானவரே இவ்வாறு தென்னைமரத்தில் இருந்து வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

முள்ளந்தண்டு முறிவால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனைகளை சட்ட மருத்துவ நிபுணர் கனகசபாபதி வாசுதேவா முன்னெடுத்திருந்தார். (அ-ஒ-7-125)


**வீடு விற்பனைக்கு**

நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள
2 பரப்பும் 14 குழியுமான வீடு விற்பனைக்குண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 0022251
தொடர்பு: 076 7698300

**காணி விற்பனைக்கு**

பத்தானை வீதி, வடபத்திரகாளி அம்மன் கோவிலுக்கு அருகில் 192/ GS Office க்கு அருகாமையில் 2 பரப்புக் காணி 2 துண்டுகளாக விற்பனைக்கு உண்டு.

077 0022251
076 7698300

**டோசர் / BULLDOZER WORK**

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் கட்டுமான பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கும் காணி ஒன்றின் நிலப்பரப்பினை சமப்படுத்த (BLADE WORK) டோசர் தேவை.

077 711 1999

**வேலை வாய்ப்பு - அச்சுவேலி**

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் உள்ள கட்டுமான வேலைகள் நடைபெறும் நிலப்பரப்பு ஒன்றில் உள்ள சிறியரக கற்களை சேகரித்து குவியல் ஆக்குவதற்கு வேலையாட்கள் தேவை.
தேநீர், சிற்றுண்டி, மதிய உணவுடன்
சம்பளம் - 2000 /=

077 433 4820

**நயினை அம்மன் திருமண சேவை**

சகல சமூகத்தினருக்குமான திருமண சேவை.
G.P.S வீதி, கல்வியங்காடு.
பதிவுக்கட்டணம் இலவசம்
076 050 3863, Whatsapp : 076 311 9485

**பெண் வேலையாள் தேவை**

யாழ்நகரில் இயங்குகின்ற கல்வி நிலையம் ஒன்றிற்கு பெண் வேலையாள் தேவை.
(அலுவகல உதவியாளர்)

தொடர்பு: 077 737 0908
070 737 0908

**பணி நிலை வெற்றிடம்**

பிரபல கம்பனிக்கு குழுத்தலைவர் மற்றும் நிதி ஆலோசகர் தேவைப்படுகின்றனர்.
ஊதியம்:
குழுத்தலைவர் : 15,000 +15000 + Commision + Allowance
நிதி ஆலோசகர் : 10,000 +With Commision + Allowance
வயதெல்லை: 18 - 50

076 711 2102, 077 542 0783

**அலுவலக உதவியாளர் தேவை**

தனியார் நிறுவனமொன்றுக்கு அலுவலக உதவியாளர் தேவை.
- வயதெல்லை - 20 - 40
- கணினி அறிவு அவசியம்
- சிங்களம் அல்லது ஆங்கிலம் அறிந்திருத்தல் அவசியம்
- அடிப்படை Accounts அறிந்திருத்தல் விரும்பத்தக்கது.

077 634 9054

**விற்பனைக்கு**

நாவலர் றோட், கச்சேரி நல்லூர் றோட்டை முகப்பாக கொண்ட 3 3/4 பரப்புக் காணி. கொழும்புத்துறை சுவாமியார் வீதியை முகப்போடு கொண்ட 1 1/4 பரப்புக் காணியில் அமைந்த வீடு.
Contact Number:
Divakar Thavavinayagan
+94 77 221 6683

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் **24 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

* நிலப்பரப்பு
* 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் ( 300000/=)
* A-9 வீதியிலிருந்து 250 மீற்றர் தூரம்
* களஞ்சியம் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்ற இடம்
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 0760 389

(CS 28663) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

கட்டட நிறுவனம் ஒன்றிற்கு
தங்கிநின்று வேலை செய்யக்கூடிய
மேசன் வேலையாட்கள் தேவை.
ஊரெழு.உரும்பிராய். கொக்குவில்
ஆகிய பகுதிகளில்.

**077 349 6918**

## குத்தகைக்கு / பங்குதாரர்

10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள கடல்
அட்டைப் பண்ணை சகல வசதிகளுடன்
அரியாலை கிழக்கில் குத்தகைக்கு /
பங்குதாரர் தேவை. **புதிய இறால் கூடு,
நிலவலை, நூல் வலை, கரை வலை**
விற்பனைக்குண்டு.

**075 278 6033, 077 875 7860**

## பொன்னகவை காணும் நாள்

பொன்னகவை காணும்
நண்பர்

**அரிச்சந்திரன்
யோகதாஸ்**

**(சிரேஷ்ட முகாமையாளர் -
HNB Jaffna Metro)**

அவர்களுக்கு

**இனிய பிறந்தநாள்
வாழ்த்துக்கள்**




**பரி.யோவான் கல்லூரி
1992 - உ/த பிரிவு நண்பர்கள்**

(cs.26645) (N.1)

## மணமகள் தேவை

1982ம் ஆண்டு ஆயிலியம் நட்சத்திரத்தில் பிறந்த
கனடாவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட
வாய் பேச முடியாத மணமகனுக்கு பெற்றோர்
மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
மணமகன் தற்போது இலங்கை வந்துள்ளார்.

**077 990 6867, 077 214 0220**

(CS52480) (Ak.1)

## மரண அறிவித்தல்

பிறப்பு
31 . 08 . 1934



இறப்பு
20 . 10 . 2023

**இரத்தினபூபதி துரைராஜா**
**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

யாழ். வரணியைப் பிறப்பிடமாகவும். பண்டத்தரிப்பு. கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினபூபதி துரைராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்கள் கடந்த 20.10.2023 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்). இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை. தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை துரைராஜா (ஓய்வுபெற்ற தபால் தந்தி திணைக்கள கணக்கு பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும். சுகுமார். சுமதி. சுகந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும். சுபத்திரா. கேபர்ட் ஜெயரஞ்சன். றொபர்ட் மோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும். சுஜந்தன். சுவேதா. யூடி. ரிஷான். எயிட்ரியன். றொமி. றோசி ஆகியோரின் அன்புப் பேத்தியும். மைக்கல் ஆஷர் அவர்களின் அன்புப் பூட்டியும். காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராஜரட்ணம். செல்வநாயகி. செல்வரட்ணம். சுபாரட்ணம். Dr.அழகரட்ணம். சுகிர்தரட்னம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான முருகேசு. பத்மாவதி மற்றும் சிவராசா. இராஜலஷ்மி. ஜெயநிதி. மீரா. யோகநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2023) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0777 222 339**

(CS 52566)A-1

12 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
**அமெரிக்க லொத்தர் இலவச விசா**
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
**V2 Travels**
**0768226244**
**0768226241**

## காணி விற்பனைக்கு

யாழ் மயிலிட்டியில் காங்கேசன்துறை
தொண்டைமனாறு கரையோர
கார்பட் வீதியில் இருந்து 150m
தூரத்தில் 11 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.

**075 521 3533**

## PACKING வேலை - கோண்டாவில்

நிறுவனம் ஒன்றின் கோண்டாவில் தாவடி
கிளையில் BOTTLE லேபலின்ங்.
பக்கிங். செய்வதற்கு ஆண்/பெண்
ஊழியர்கள் தேவை.
தேநீர். மதிய உணவுடன் நாள் சம்பளம் 1500 /=
பகல். இரவு வேலையும் உண்டு.
மாலை 5 PM - 1 AM வரை இரவு வேலை.
சம்பளம் 1500 /= (பகல் + இரவு 3000 சம்பளம்)

**தொடர்பு : 0777608528, 0753953437**

## "STUDY, MIGRATE & SETTLE IN AUSTRALIA"

A FREE INFORMATION SESSION ORGANIZED BY
RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES, AUSTRALIA

**JAFFNA**
**Hotel North Gate**
3.30-5.30 P.M
31 October 2023

REGISTERED MIGRATION CONSULTANT
**THILINIKA WIJESINGHE** (MARA: 1463863 MIA: 8531)
*Reliance International Migration Services*
*Level 10. 14 Mason Street, Dandenong, VIC 3977 Australia*
*No 351/1 R A De Mel Mawatha, Colombo 03.*

WE PROVIDE ASSISTANCE WITH

STUDENT VISAS
SKILLED MIGRATION FOR ALL LISTED OCCUPATIONS
MANY OTHER VISAS

To Assess Your Eligibility, send us your CV to
**colombo@rimigrations.com**
by 30th October 2023
Contact **076 767 8281**

## அகரம்

**உயர்நிலைக் கல்லூரி**
**AHARAM HIGH STANDARD COLLEGE**
காங்கேயன்துறைச்சாலை
மலவாகம் | கொக்குவில்

**புதிய கல்வி ஆண்டு - 2024**

**புதிய தரம் 06**

தமிழ் மொழி மூல. **English Medium**
வகுப்புக்களிற்கான அனுமதிகள்
வழங்கப்படுகின்றன.

2024 தரம் 06 இற்கான
நாள் வகுப்புக்கள் விஜயதசமி நன்னாள்
அன்று ஆரம்பிக்கப்படும்.

**24.10.2023 காலை 10.30 - 12.00 வரை**

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

## ஜே ரைட்

JRIDE
Safety and comfort are our concern

**ஒன்லைன் ரக்சி அப்**
**ONLINE TAXI APP FROM JAFFNA**

**நாங்கள் தயார் நீங்கள் தயாரா?**
**WE ARE READY ARE YOU READY?**

இலங்கை முழுவதும் எமது சேவையை பெற
**BOOK NOW!**





பாதுகாப்பான மகிழ்ச்சியான பயணம்; திருப்தியான கட்டணம். இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்து பயணத்தை ஆரம்பிக்கலாம்.

**JRIDE TAXI SERVICE**
**SPEED IT NET**

**உங்களுக்காக உங்கள் தேசத்தில் இருந்து நாம்! | www.jride.lk**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சஞ்சீவி

பக்கங்கள்: 08

வள்ளுவர் ஆண்டு : 2053 ஐப்பசி 05 ஞாயிற்றுக்கிழமை (22.10.2023) சிகரம் : 170


மண்டியிட்டால் மன்றாடினால்
உன் கடிகாரப் பைக்குள் கை நுழைத்து
அள்ளி எறியக்கூடும்
சில சில்லறை வினாடிகளை...

வேண்டாம் ஒரு வாழ்வு முடிய
இன்னும் ஒரு உயிர் மீதமிருக்கிறது.

- பிரான்சிஸ் கிருபா




# "பிரபாகரனின் மகளோடு நான் உரையாடினேன்!"

○ நேர்காணல்: இரா.மயூதரன்

(தமிழ் மக்களுக்காகப் போராடப் புறப்பட்ட போராளிக்குழுக்களில் ஒன்றான ரெலோவில் இணைந்து ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு, பின்னர் தொடர்ச்சியாக மக்களின் உரிமைக்காக அரசியல்ரீதியாகப் போராடிவரும் நாடாளுமன்றம், மாகாணசபை என்பவற்றின் முன்னாள் உறுப்பினரான எம்.கே. சிவாஜிலிங்கம் வழங்கிய சமகால நிலைவரம் தொடர்பான நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது)





## எம்.கே.சிவாஜிலிங்கம்

## பரபரப்புத் தகவல்

**கே:** இலங்கையில் பல தசாப்தங்களாக நீடித்துவரும், தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் இன்னமும் சுமுகத் தீர்வெதுவும் எட்டப்படவில்லை. எமது உரிமைக்கான ஆயுதப்போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்த பின்னணியில் உள்ள இந்தியா, அரசியல் ரீதியான தீர்வைப் பெற்றுத் தருவதிலும் அசமந்தமாக உள்ளதே. அது பற்றி?

**ப:** 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் எங்களைக் கட்டாயப்படுத்தி ஆயுதப் போராட்டத்தை கைவிடச்செய்த இந்தியாதான் இதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்கவேண்டும். ஆனால் அதனை அவர்கள் இதுவரை ஏற்றுக்கொண்டதாக இல்லை. வடக்கு - கிழக்கு ஒரே மாகாணமாக இருக்கும், ஒரே இடமாக இருக்கும் என்று சொன்ன இந்தியாவின் வாக்குறுதி காற்றில் பறந்து பல வருடங்களாகி விட்டன. வடக்கும், கிழக்கும் 17 ஆண்டுகள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தன. இதனை வைத்து இரு மாகாணங்களையும் நிரந்தரமாக இணைப்பது குறித்து ஒரு வாக்கெடுப்பை நடத்த சிறிலங்கா அரசாங்கம் விடவில்லை. இதனால் வடக்கு - கிழக்கு என இணைந்திருந்த மாகாணம், 2016 ஆம் ஆண்டு இலங்கையின் அன்றைய உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து இரண்டாக்கப்பட்டது. ஆனால் அவர் தன்னுடைய தீர்ப்பில் ஒருவிடயத்தைத் தெரிவித்திருந்தார், '13 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாணசபைகள் சட்டம் இலக்கம் 42 இன் படி அருகருகாக இருக்கக்கூடிய ஒன்றுக்கும் மேற்பட்ட மாகாணங்கள் விரும்பினால் நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை ஆதரவு மூலம் இணைக்கப்படமுடியும் ' என்பதே அந்தவிடயம்.

போர் நடைபெற்ற போதுதான் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டன . அப்படியானால் இப்போது போருக்கு முந்தைய நிலைமையில், இரு மாகாணங்களையும் தற்காலிகமாகவேனும் இணைத்த பின்னர் தான் தீர்வு குறித்துப் பேசவேண்டும். பொருளாதாரநெருக்கடி காலத்தில் நான்கு பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு கொடுத்த சமயத்தில் ' வடக்கையும் கிழக்கையும் நாடாளுமன்றின் பெரும்பான்மைப் பலத்துடன் தற்காலிகமாக இணையுங்கள். மற்றைய விடயங்களைப் பின்னர் பேசலாம்' என இந்தியா நிபந்தனை விதித்திருக்கலாம். அந்தச் சமயத்தில் இலங்கையும் வேறுவழியின்றி, வடக்கு-கிழக்கை தற்காலிகமாக இணைத்திருக்கலாம். ஆனால் இந்தியா அவ்வாறு எதுவும் செய்யவில்லை. மாறாக இலங்கைக்கு நிபந்தனையற்ற உதவிகளை இந்தியா வாரி வழங்கிவருவதால் தான் , இந்தியா எமக்கு வழங்கிய ஒவ்வொரு வாக்குறுதிகளும் மீறப்பட்டு வருகின்றன.

**கே:** புலிகளின் தலைவர் பிரபாகரனின் மனைவி மதிவதனியும், மகள் துவாரகாவும் உயிரோடு இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே . அது உண்மையா?

**ப:** 'தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் மேதகு வே.பிரபாகரனுடைய மகள் துவாரகா அவர்கள் மக்களுக்கு உரையாற்ற விரும்புகிறார். ஓர் அறிக்கையை விட உள்ளார் ' எனத் தகவல்கள் வெளியாகியவுடன் சிலர் குதிக்கிறார்கள். அப்படி ஓர் அறிக்கை வந்தால் அந்த அறிக்கையை பாருங்கள். அதன் பின்னர் அதை வெளியிட்டது துவாரகாவா? இல்லையா? என்பதைப் பார்க்கலாம்.

இப்பொழுது பிரபாகரனின் மனைவி மதிவதனியின் அக்கா தான் அருணா என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர்தான் ' துவாரகாவும் மதிவதனியும் உயிரோடு இருப்பதை நேரில் பார்த்தேன்' எனக் கூறியுள்ளார். கடந்த மாதம் நான் இந்தியாவில் இருந்தபோது கூட, அருணா என்னுடன் - சுமார் 12 ஆண்டுகளின் பின்னர் பேசியிருந்தார்.

> **இப்பொழுது பிரபாகரனின் மனைவி மதிவதனியின் அக்கா தான் அருணா என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர்தான் 'துவாரகாவும் மதிவதனியும் உயிரோடு இருப்பதை நேரில் பார்த்தேன்' எனக் கூறியுள்ளார்.**

அதைத் தொடர்ந்து துவாரகா என்று தன்னை அடையாளப்படுத்திய ஒருவர் என்னுடன் தொலைபேசியில் சில நிமிடங்கள் பேசியிருந்தார். துவாரகா என்னுடன் தொலைபேசியில் உரையாடியபோது சில விடயங்களைப் பேசியுள்ளார். அவற்றை ஓரளவு ஏற்றுக் கொள்ளலாமெனத் தோன்றுகிறது. ஆயினும் அவர் உரையாடியதை வைத்து அவர்தான் உண்மையான துவாரகா என்றோ, அவர் உயிரோடு இருக்கிறார் என்றோ கண்ணை மூடிக் கொண்டு ஏற்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. என்னுடன் பேசியவர், தான் துவாரகா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு ஒரு விஞ்ஞான பூர்வமான வழிமுறையுண்டு. அதாவது அவர் தான் துவாரகா என்பதை 'டீ.என்.ஏ.' பரிசோதனை மூலமாகப் பகிரங்கமாக உறுதிப்படுத்தலாம். டென்மார்க்கில் பிரபாகரனுடைய மூத்த அண்ணன் மனோகரன் இருக்கிறார், சகோதரி விநோதினி ராஜேந்திரன் (சித்திரா அக்கா) கனடாவில் வசித்து வருகின்றனர். பிரபாகரனுடைய தாயாருடைய அஸ்தி என்னிடம் இருக்கிறது . எனவே அவற்றின் அடிப்படையில் துவாரகா 'டீ.என்.ஏ.'பரிசோதனை செய்து தன்னை நிரூபிக்க முடியும். அதைவிடுத்து இந்த விடயம் உண்மையா, பொய்யா என விவாதித்துக்கொண்டு இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. இந்தக் குழப்பங்களை எல்லாம் விட்டுவிட்டு, நாங்கள் எங்கள் தரப்பில் என்ன என்ன வேலைத்திட்டங்களை எங்களுடைய மக்களுக்காக செய்ய வேண்டுமோ அவற்றில் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மாவீரர், போராளி குடும்பங்களுக்கும் உதவிகளை நாம் அனைவரும் செய்ய வேண்டும். அதுவே இப்போதைக்கு அவசியமான பணி.

**கே:** ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் நமக்கான அரசியல் ரீதியான போராட்டத்தை சரியான திசையில் கொண்டு செல்வதற்கான பொருத்தமான தலைமைத்துவம் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப முடியுமென எண்ணுகிறீர்களா?

**ப:** ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர்களின் அரசியல் போராட்டத்தை நடத்துவதற்கு ஒரு பொருத்தமான ஆளுமையான தலைமை நம்மிடையே இப்போது இல்லை என்பது உண்மையே. இனிமேல் ஓர் ஆயுதப்போராட்டம் தேவையில்லை என்பது எங்களது உறுதியான கருத்து. அப்படி ஆயுதப் போராட்டத்துக்கு யாரும் தயாராக இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் அரசியல் ரீதியான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஒவ்வொரு தமிழனுக்கும் ஒவ்வொரு தமிழிச்சிக்கும் உரிமை உண்டு. பிரபாகரனின் மகள் துவாரகா உயிருடன் இருந்தால், அவருக்கும் அந்த உரிமை இருக்கிறது. தேசியத் தலைவரது மகள் என்பதற்காக அவருக்கு அந்த உரிமை இல்லை என்று கூறிவிடமுடியாது.

06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்போது புலிகள் இப்போது ஹமாஸ்



அ.நிக்ஸன்

விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள். அவர்களை அழித்த பின்னர்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவில் இருந்து தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவரையும் அன்று மார்தட்டியிருந்தனர். புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு எனவும் நியாயம் கற்பித்திருந்தனர். இதனை உள்வாங்கியே புலிகளை அழிக்க 2002 பெப்ரவரியில் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் திட்டம் வகுக்கப்பட்டிருந்தமை இஸ்ரேல் - பலஸ்தீன போர் ஆரம்பமானதில் இருந்து வெளிச்சத்துக்கு வருகிறது. 2020 ஜனவரியில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றிய இரா. சம்பந்தன், 'விடுதலைப்புலிகளை அழித்துப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த பின்னர் நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்படும். அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என அமெரிக்க, இந்தியத் தூதுவர்கள் 2009 ஜனவரி மாதம் தன்னைக் கூட்டாகச் சந்தித்துக் கேட்டிருந்தனர் என்று விபரித்தார்.

அரசியல் தீர்வு ஏற்படும் என்ற உறுதிமொழியை தான் நம்பியதாகவும் ஆனால் பத்து ஆண்டுகள் சென்ற பின்னரும்கூட தீர்வு ஏற்படவில்லை எனவும் அமெரிக்க, இந்திய அரசுகள் தன்னை ஏமாற்றியுள்ளதாகவும் சம்பந்தன் கவலை வெளியிட்டிருந்தார்.

இப்போது இஸ்ரேல் - பலஸ்தீனம் போர் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ என்ன சொல்கிறார்? 'ஹமாஸ் இயக்கம் வேறு, பலஸ்தீன மக்கள் வேறு' என்கிறார். ஹமாஸ் அழிக்கப்பட்ட பின்னரே பலஸ்தீனியர்களுக்குத் தீர்வு என்றும் நாடாளுமன்றத்தில் சென்ற வியாழக்கிழமை ட்ரூடோ கூறியிருக்கிறார்.

இதனையே அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் சொல்கிறார். பிரித்தானிய நாடாளுமன்றத்திலும் ஹமாஸ் பயங்கரவாத இயக்கம் என்று பகிரங்கமாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் காஸா மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு இந்த நாடுகளால் ஒற்றைவரியில் கூட கண்டனம் வெளியிடப்படவில்லை. இருந்தாலும் பாதிக்கப்பட்ட பலஸ்தீன மக்களுக்காக நூறு மில்லியன் டொலரை வழங்கவுள்ளதாக ஜே பைடன் அறிவித்திருக்கிறார். ஐரோப்பிய நாடுகளும் நிதியுதவிகளை வழங்கவுள்ளதாக அறிவித்திருக்கின்றன. ஆனால் காஸா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை 'பயங்கரவாத' என அந்தநாடுகள் பகிரங்கமாகக் கண்டிக்கவேயில்லை.

ஒக்ரோபர் ஏழாம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலைக் கண்டித்த மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள், பலஸ்தீனம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட எந்தவொரு அத்துமீறல்களையும் கண்டுகொள்ளவில்லை. கண்டிக்கவுமில்லை. இந்த அத்துமீறல்களை எதிர்ப்பதற்கான அதி உச்ச வெளிப்பாடாகவே ஹமாஸ் இஸ்ரேல் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தியிருந்தது. அரசியல் நியாயம் என்பது இஸ்ரேல் அரசுக்குச் சாதகமாகவும் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் புவிசார் அரசியல், பொருளாதார நோக்கிலும் அமைந்துள்ளதை இந்தப் போர் பட்டவர்த்தனமாகக் காண்பிக்கிறது. வன்னி பெருநிலப்பகுதியில் 2009 இல் இலங்கை அரசாங்கம் நடத்திய போர், சாட்சியங்கள் இன்றி நடத்தப்பட்டதாகச் சம்பந்தன் 2010 இல் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

'கிளிநொச்சியில் இருந்து ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகங்கள் அனைத்தும் முற்றாக மூடப்பட்டு அங்கு பணிபுரிந்த அனைத்து வெளிநாட்டவர்களும் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர். கிளிநொச்சியில் சர்வதேச அமைப்புகளின் அலுவலகங்கள் மூடப்பட்டபோது அங்கு ஒன்றுகூடிய மக்கள் தங்களைத் தனியாகக் கைவிட்டு வெளியேற வேண்டாம் என்று கோஷம் எழுப்பி அழுது புலம்பினர் .

ஆகவே சாட்சியங்கள் இன்றி வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த அத்தனை கொலைகளுக்கும் 'இலங்கை அரசு பொறுப்பேற்க வேண்டும்' என்று சம்பந்தன் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கோரியிருந்தார். ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் இதுவரை பொறுப்புக்கூறவில்லை. அத்துடன் அமெரிக்க - இந்திய அரசுகள் தங்கள் மனச்சாட்சியை இதுவரை தொட்டுப் பார்க்கவுமில்லை. இந்தநிலையில் பலஸ்தீனம் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களைக் கண்டுகொள்ளாமல் ஹமாஸ் இயக்கத்தை அழிப்பதிலேயே மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் குறியாக இருக்கின்றன. பலஸ்தீனம் தனிநாடு என்ற நிலைப்பாட்டை ஏற்று 139 நாடுகள் 2012 இல் ஐ.நா. சபையில் வாக்களித்திருக்கின்றன.

இந்தியாவும் இதனை ஆதரித்திருந்தாலும், அங்கு இஸ்ரேல் மேற்கொள்ளும் இனஅழிப்புகள் பற்றி வாய்திறக்கவில்லை.

மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சாதகமான முறையிலும் அதேநேரம் ரஷ்ய - சீனக் கூட்டுக்கு ஏற்ற முறையிலும் இரட்டை நிலைப்பாட்டுடன் இந்தியா இயங்குகின்றது. இதேபோன்றுதான் ஈழத்தமிழர் விவகாரத்திலும் இந்தியா இரட்டை நிலைப்பாட்டுடன் இயங்குகின்றது. ஆகவே விடுதலை இயக்கங்களைத் தலையெடுக்கவிடக்கூடாது என்ற வன்மம் ஏன் இந்திய மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிடம் ஏற்பட்டுள்ளது? ஐக்கிய நாடுகள் சபை, ஹமாஸ் இயக்கத்தைக் கண்டித்தளவுக்கு இஸ்ரேல் அரசை ஏன் கண்டிக்கவில்லை?



**வன்னியில் மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்க சர்வதேசம் தவறியதாக 2010 நிபுணர்குழு அறிக்கையில் உண்டு. இதனை ஒரு அனுபவப் பாடமாக எடுத்துப் பலஸ்தீனப் போர் விவகாரத்தில் கையாள ஐ.நா. தயங்குவது ஏன்?**

ஹமாஸ் தாக்குதல்களில் இஸ்ரேலில் சாதாரண அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதை மறுக்கமுடியாது. ஆனால் அதனையும் விட மிகக் கொடூரமாக பலஸ்தீன மக்கள் கடந்த எழுபது வருடங்களாக இன அழிப்புக்குள்ளாகி வருகின்றனர். அவர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. பலஸ்தீன பொருளாதார வளங்கள் இஸ்ரேல் அரசினால் அபகரிக்கப்பட்டும் அழிக்கப்பட்டுமுள்ளன. ஆனால் சர்வதேச நீதி என்ன?

ஒரு கட்டத்தில் பலஸ்தீன மக்களுக்காக மத்திய கிழக்கு நாடுகள் அமெரிக்காவுடன் இணங்கிப் போகவும் தயாராக இருந்தன. எண்ணெய்வளங்களைப் பரிமாறவும் அதற்குரிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவும் இணங்கியிருந்தன.

ஆனால் பின்னர், பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தொடர்ச்சியான இன அழிப்பினால் மத்திய கிழக்கு நாடுகள் அமெரிக்காவுடனான உறவைத் தொடர்வதற்குத் தயக்கம் காண்பித்திருந்தன. 2012 இல் ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்தீனம் தனிநாடாக இருக்கவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டபோது அமெரிக்கா ஆதரவு வழங்கவில்லை. ஆனாலும் அமெரிக்காவுடன் மத்திய கிழக்கு நாடுகள் உறவைப் பேணி வந்தன.

2016 இல் அமெரிக்காவில் பதவிக்கு வந்த டொனால்ட் ட்ரமப் மேற்கொண்ட பலஸ்தீன எதிர்ப்பு நடவடிக்கைகள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் 2020 ஜனவரியில் பதவிக்கு வந்த ஜோ பைடன் நிர்வாகம் அதனைச் சீர்ப்படுத்தியிருக்கவேண்டும். மாறாக மத்திய கிழக்கு நாடுகளுடன் மென்போக்கு நகர்வைக் கையாண்டு, டொனால்ட் ட்ரமப் மேற்கொண்ட அனைத்துச் செயற்பாடுகளையும் அப்படியே முன்னெடுத்து இஸ்ரேலுக்கு ஜோ பைடன் வலுச்சேர்த்திருக்கிறார். இந்தப் பின்புலத்திலேயே பலஸ்தீனம் மீது ஆரம்பிக்கப்பட்டுள்ள போர், மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள்சபை அதன் கீழ் இயங்கும் அனைத்துச் சர்வதேச பொது அமைப்புகள் மீதும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை தவறிழைத்திருக்கிறது என ஐ.நா.நிபுணர்குழு 2010 இல் வெளியிட்ட அறிக்கையில் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டியிருந்தது. பொதுமக்கள் கொல்லப்படுவதை சர்வதேசம் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று அந்த அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. ஜெனிவாவில், மனித உரிமைகள் பேரவையின் அறிக்கைகளிலும் பொதுமக்கள் கொல்லப்பட்டபோது தடுத்த நிறுத்த சர்வதேசம் நடவடிக்கைஎடுக்கத்தவறிவிட்டதுஎன்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இவ்வாறு குற்றம் சுமத்தியிருந்தார்.

ஆனால் தற்போது ஹமாஸின் தாக்குதலையடுத்து , பலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தும் அவலப்படுகின்றனர். அதனைத் தடுக்க ஐ.நா .கடந்த பன்னிரெண்டு நாள்களாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. வன்னி பெருநிலப்பரப்பில் இலட்சக்கணக்கில் உயிரிழப்புகள் ஏற்பட்டபோது அதனைத் தடுக்கத் தவறிய ஐ.நா. ஏன் பலஸ்தீனத்திலும் அதேபோன்று நடக்கின்றது? முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்டப் போர் தொடர்பாக ஐ.நா. 2010 இல் வெளியிட்ட நிபுணர்குழு அறிக்கையை ஒரு பாடமாக எடுத்துப் பலஸ்தீனத்தில் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்கலாமல்லவா?

ஐ.நா.வில் அங்கீகாரம் உள்ள பலஸ்தீன மக்கள் இஸ்ரேலினால் கொல்லப்படுவதை ஐ.நா. ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறது? ஆகவே ஐ.நா. சபையின் பின்னால் செயற்படுவது யார்? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு யாருடையது? வல்லரசு நாடுகளின் புவிசார் அரசியல் பொருளாதார நலன் என்பது இதுதான். அதாவது மனித உரிமை, ஜனநாயகம் என்று தமது தேவைக்கு ஏற்ப அளந்து பேசுவது. அத்துடன் புவிசார் அரசியல் பொருளாதார நலன்களைப் பெறும் நோக்கில் மனித உரிமை மீறல், இன அழிப்பு என்று காண்பித்து குறித்த அரசுகளுக்கு எச்சரிக்கை விடுப்பதும் இந்த வல்லாதிக்க நாடுகளின் வழமை. இதற்கு வசதியாக ஐ.நா. சபையும் மனித உரிமைகள் பேரவையும் பக்கபலமாக இயங்குகின்றன. விடுதலை இயக்கங்கள் மீதான தவறுகள் கண்டுபிடிக்கப்படுதல் அல்லது திட்டமிட்டு தவறுகளை உருவாக்குதல் என்பதன் பின்னணியையும் இங்கிருந்துதான் நோக்க வேண்டும். 2009 இல் விடுதலைப் புலிகளுக்கு நடந்ததையும் தற்போது ஹமாஸ் இயக்கத்துக்கு நடந்து கொண்டிருப்பதையும் இந்தப் பின்புலத்தில் இருந்துதான் ஆராய வேண்டும். உலகில் பயங்கரவாதம் என ஒன்று இல்லை. அதனை உருவாக்குவது அல்லது அதற்குக் காரணமாக இருப்பது இந்த வல்லாதிக்க நாடுகள்தான். ஆனால் விடுதலை இயக்கங்களைப் பயங்கரவாதிகளாக்கி அந்த விடுதலை இயக்கங்கள் எந்த அரசுக்கு எதிராகப் போரிடுகின்றனவோ அந்த அரசைக் காப்பாற்றும் நகர்வுகளிலேயே அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகள் முனைப்புக் காட்டுகின்றன. குறிப்பாக இஸ்ரேல் அரசை வேறு பார்வையிலும், சிறிய நாடான இலங்கையை இந்தோ - பசுபிக் விவகாரத்திலும் அமெரிக்கா கையாள்வதை அவதானிக்க முடியும். இதற்கு இந்தியாவும் பின்னணியாகச் செயற்படுகிறது.

ஏனெனில் இந்தியாவில் மாநில அரசுகளுக்கு உரிய அதிகாரங்கள் இல்லை. இந்திய மத்திய அரசிடமே அனைத்து அதிகாரங்களும் உண்டு. இதனை மையமாகக் கொண்டு தமது தனது பிராந்தியப் பாதுகாப்புக் கருதி ஈழத்தமிழர்களுக்கும் அரைகுறைத் தீர்வான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து 1987 இல் இந்தியா உருவாக்கியிருந்தது.

அதற்கு எதிராக இந்திய இராணுவத்துடன் இடம்பெற்ற போரில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டனர். 1987 இல் இந்திய இராணுவம் யாழ். மருத்துவமனை மீது கொலைவெறித்தாக்குதல் நடத்தி மருத்துவர்கள்,தாதியர்கள் , நோயாளிகள் உட்பட 187 பேரின் உயிரைக் காவுகொண்டது. 2009 இல் வன்னி பெருநிலப்பரப்பில் நடந்த இறுதிப் போரில் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, மாத்தளன் மருத்துவமனைகள் மீது இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தி பல்லாயிரக்கணக்கில் பொதுமக்களைக் கொலை செய்தது. இப்போது காஸா மருத்துவமனையை இஸ்ரேல் தாக்கியுள்ளது. ஆனால் இதுவரையும் இதனை சர்வதேசம் கண்டிக்கவேயில்லை.

முப்பது வருட ஆயுதப் போரை இல்லாதொழிக்க இலங்கை அரசாங்கத்துக்கு , அமெரிக்க - இந்திய அரசுகளும் , சீனாவும் மற்றும் சில நாடுகளும் முரண்பாட்டில் உடன்பாடாக ஒத்துழைப்பு வழங்கியதாக அப்போது பிரதமராக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க 2009 டிசெம்பரில் நாடாளுமன்றத்தில் பெருமையாகக் கூறியிருந்தார். இதன் காரணத்தினால் வல்லாதிக்க நாடுகளின் நலன் சார்ந்து தமிழ் இனஅழிப்பு என்பதைச் செவிமடுக்காமல் சர்வதேசப் போர்க் குற்ற விசாரணைக்கு மாத்திரம் மனித உரிமைகள் பேரவை பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கிடையே நிலவும் பனிப்போர் மற்றும் சர்வதேச விவகாரங்களில் இந்திய அரசின் இரட்டைத் தன்மைப் போக்கை அவதானித்து இலங்கை சர்வதேசப் போர்க்குற்ற விசாரணையை நிராகரித்து, பொறுப்புக் கூறலில் இருந்தும் முற்றாகவே விலகி நிற்கிறது. இதுபோன்ற ஆபத்தான நிலைமைதான் சர்வதேச அங்கீகாரம் உள்ள பலஸ்தீன மக்களுக்கும் ஏற்படும் என்பது பட்டவர்த்தனம். அதாவது விடுதலைப்பு லிகளை அழித்த பின்னரே தீர்வு என்று வாக்குறுதி வழங்கப்பட்டு இதுவரையும் எந்த ஒரு தீர்வும் இல்லாமல் ஈழத்தமிழர் தொடர்ந்து இன அழிப்புக்கு உள்ளாவது போன்று, ஹமாஸ் இயக்கம் அழிக்கப்பட்டாலும் பலஸ்தீன மக்களும் தொடர்ந்தும் இஸ்ரேல் அரசினால் இன அழிப்புக்கு உள்ளாவர் என்பது பரகசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன- இஸ்ரேல் யுத்தம்: தமிழர்கள் யாருடைய பக்கம்?

○ நிலாந்தன்

தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டம் வேகமெடுக்கத் தொடங்கியபோது 1970 களின் இறுதியாண்டுகளிலும்,1980களின் முற்கூறிலும்,தமிழ் இயக்கங்களான ஈரோஸ்,ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் போன்றன பலஸ்தீனத்தில் படைதுறைப் பயிற்சிகளைப் பெற்றன. அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் தாயகத்தில் "பி.எல்.ஓ. ரெய்னிஸ்" என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களிற் பலர் அந்த இயக்கங்களில் முக்கியமான பொறுப்புகளை வகித்திருக்கிறார்கள். அவர்களிற் சிலர் - சுரேஷ் பிரேமச்சந்திரன்,டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள்-இப்பொழுதும் தமிழ் அரசியலரங்கில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகாலகட்டங்களில் பலஸ்தீனம் தமிழ் மக்களின் நட்பு சக்தியாக இருந்தது. அந்நாள்களில் கவிஞர் நுஃஹ்மான் தொகுத்த 'பலஸ்தீனக் கவிதைகள்' என்ற தொகுப்பு தமிழ்ப் போராளிகளால் விரும்பி வாசிக்கப்பட்டது. அந்நூல் பல இளம் கவிஞர்கள் மீது செல்வாக்குச் செலுத்தியது. அந்தக்காலகட்டத்தில் இஸ்ரேல், இலங்கை அரசாங்கத்துக்கு போர்த்தளபாடங்களை வழங்கியது. அது கெடுபிடிப் போர்க் காலகட்டம்.





1992 இல் இஸ்ரேலிய உளவு நிறுவனமாகிய மொசாட்டின் உளவாளிகளில் ஒருவரான விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி என்பவர் ஒரு நூலை வெளியிட்டார். 'By Way of Deception: The Making and Unmaking of a Mossad Officer 'எனப்படும் அந்த நூல் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியது. அந்த நூலை வெளியிட்ட விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி கனடாவில் தஞ்சமடைந்து விட்டார். அந்த நூலானது மொசாட் எவ்வாறு இலங்கைத்தீவில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளுக்கும் உதவிகளைப் புரிந்தது என்ற தகவல்களை வெளிப்படுத்தியது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராளிகளுக்கும் இலங்கை அரசபடைகளுக்கும் ஒரே மைதானத்தின் இருவேறு பகுதிகளில் பயிற்சி வழங்கப்பட்டது பற்றிய விபரங்கள் அந்நூலில் உண்டு.

மேலும் இலங்கை அரச படை அதிகாரிகள் தொடர்பாக தரக்குறைவாகச் சித்திரிக்கும் பகுதிகளும் உண்டு. இலங்கை அரச படை அதிகாரிகள் ஒருவர் துறைமுகத்தில் "வக்யூம் கிளினரோடு" ( தரையைச் சுத்திகரிக்கும் கருவி) இணைக்கப்பட்டிருந்த ஸ்கானிங் திரையைக் காட்டி இதில் என்ன தெரியும் என்று கேட்டபொழுது,நீருக்கடியில் இரகசியமாகச் சுழியோடி வருபவர்களின் குருதிப்பிரிவு உட்பட எல்லா விவரங்களையும் இது காட்டும் என்று ஒரு மொசாட் அதிகாரி அவருக்கு கூறுகிறார். "ஏன் அப்படி பொய் சொன்னாய் ?"என்று ஏனையோர் அவரிடம் கேட்டதற்கு "அவர்கள் இப்பொழுதுதான் காட்டிலிருந்து வந்திருக்கிறார்கள்" என்ற தொனிப்பட அவர் பதில் கூறியதாக ஒரு ஞாபகம். இந்த நூலை விடுதலைப்புலிகள் இயக்கம் "வஞ்சகத்தின் வழியில்" என்ற தலைப்பில் மொழிபெயர்த்து தனது போராளிகளுக்கு விநியோகித்ததாகவும் ஒரு ஞாபகம். அந்த நூல் இலங்கை அரச படைகளை அவமதிக்கிறது என்று கூறி அப்போதிருந்த ஜனாதிபதி பிரேமதாஸ, விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கிக்கு எதிராக வழக்குத் தொடுக்க முற்பட்டதாகவும் ஒரு ஞாபகம்.

இந்நூல் வெளிவந்த அடுத்தாண்டு,1993 இல் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின் விளைவாக இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் ஒஸ்லோ உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கையின்படி பலஸ்தீனர்களுக்கு ஒரு தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தக்கட்டமைப்பு இலங்கைத்தீவில் மஹிந்த ராஜபக்சவுக்கு அதிகம் நட்பாக காணப்பட்டது. தொடக்க காலத்தில் இருந்தே மஹிந்த பலஸ்தீனத்தின் நண்பனாக இருந்து வருகிறார். பலஸ்தீன-சிறீலங்கா சகோதரத்துவ அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் அவர். 2014 ஆம் ஆண்டு அவர் பலஸ்தீன அதிகாரசபையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு விஜயம் செய்தார். அங்கே அவருக்கு அந்நாட்டின் அதி உயர் விருதாகிய "Star of Palestine"(பலஸ்தீன நட்சத்திரம் விருது) வழங்கப்பட்டது. அங்குள்ள ஒரு வீதிக்கு மஹிந்தவின் பெயர் சூட்டப்பட்டது. இனப்படுகொலை மூலம் மஹிந்த, தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டத்தைத் தோற்கடித்ததாக தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்த ஓர் அரசியற் சூழலில்,ஐ.நா.வில் மஹிந்தவுக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில்,பலஸ்தீனம் மேற்கண்டவாறு மஹிந்தவைக் கௌரவித்தது. இப்படிப்பட்டதோர் வரலாற்றுப் பின்னணியில், இப்பொழுது வெடித்திருக்கும் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான போரில் தமிழ் மக்கள் எப்படிப்பட்டதொரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்? தர்மத்தின் அடிப்படையில் சொன்னால், போராடும் தேசிய இனம் என்ற அடிப்படையில் சொன்னால், பலஸ்தீனத்தைத் தான் ஆதரிக்கவேண்டும்.

காஸாவில் இப்பொழுது என்ன நடக்கின்றதோ அது தான் வன்னியிலும் நடந்தது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக பெரும்பாலான அரபு நாடுகள் உண்டு. ஆனால் தமிழ் மக்களுக்கு ஆதரவாக வெளிப்படையாக எந்த ஒரு நாடும் அன்றைக்குக் குரல் கொடுக்கவில்லை. தமிழ்மக்கள் தனித்துவிடப்பட்டிருந்தார்கள். ஏறக்குறைய முழு உலகத்தாலும் சுற்றிவளைக்கப்பட்டிருந்த ஒருநிலை. பலஸ்தீனர்களுக்கு உணவு, மருந்து, தார்மீக ஆதரவு போன்றவற்றைக் கொடுப்பதற்கு அரபு நாடுகள் உண்டு. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு யார் இருந்தார்கள்? அதேசமயம் இஸ்ரேலுக்கு அதன் 'தொட்டப்பாக்களாகிய' மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து தார்மீக ஆதரவையும் ஆயுதத்தளபாடங்களையும் வழங்கி வருகின்றன. குறிப்பாக போர் தொடங்கிய உடனேயே இஸ்ரேலுக்கு தன் ஆதரவை, ஆசிய வட்டகைக்குள் இந்தியா தெரிவித்துவிட்டது. இப்பொழுது மேற்சொன்னவற்றைத் தொகுத்துப் பார்க்கலாம். ஒரு காலம் தமிழ் மக்களுக்கு ஆதரவாக காணப்பட்ட பலஸ்தீனம் பின்னாளில் மஹிந்த ராஜபக்சவுக்கு அதிஉயர் விருதை வழங்கியது. அதேசமயம் இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுதங்களை விநியோகித்த இஸ்ரேல் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் பயிற்சிகளை வழங்கியதாக விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி கூறுகிறார். இப்பொழுது இஸ்ரேலை ஆதரிக்கும் மேற்கு நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன. அப்படியென்றால் இது விடயத்தில் ஈழத்தமிழர்கள் யாருடைய பக்கம் நிற்கவேண்டும்?

தர்மத்தின் அடிப்படையில் சொன்னால் பலஸ்தீனத்தின் பக்கம்தான். இராஜதந்திரத்தின் அடிப்படையில் பார்த்தால்……? முதலில் அரசியலில் தர்மம் சார்ந்த நிலைப்பாடுகள் உண்டா என்று பார்க்கலாம். நவீன அரசியலைப் பொறுத்தவரை அறம்,தர்மம்,நீதி என்று எதுவும் கிடையாது. அரசியல்,இராணுவ,பொருளாதார நலன்சார்ந்த அருவருப்பான பேரம் மட்டும்தான் உண்டு.

உதாரணமாக,யூதர்களை எடுத்துக் கொள்வோம். உலகின் மிக நீண்டகாலம் புலம்பெயர்ந்த மக்கள் யூதர்கள் தான். சுமார் இரண்டாயிரம் ஆண்டு கால புலப்பெயர்ச்சி அது. அதனால் உலகில் அதிகம் ஐரோப்பிய மயப்பட்ட ஆசியர்களாக அவர்கள் மாறினார்கள். கடந்த நூற்றாண்டில் யூதர்கள் ஐரோப்பாவெங்கும் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். இரண்டாம் உலக மகா யுத்தச்சூழலில் சுமார் 6 மில்லியன் யூதர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த இனப்படுகொலையின் குழந்தை தான் இஸ்ரேல். இன்னொரு விதமாகச் சொன்னால் யூதப் புலப்பெயர்ச்சியின் குழந்தையே இஸ்ரேல். ஆனால் ஓர் இனப்படுகொலையின் விளைவாக உருவாகிய யூததேசம், இன்னொரு இனப்படுகொலைக்குக் காரணமாகியது. உலகில் அதிகம் இனப்படுகொலைக்குள்ளாகிய ஒரு மக்கள் கூட்டம், பலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்கின்றது. உலகின் மிகப் பெரிய இனப்படுகொலையில் இருந்து இஸ்ரேல் கற்றுக்கொள்ளாத அறத்தை, தர்மத்தை, நீதியை வேறு யாரிடமிருந்து எதிர்பார்க்கலாம்?

ஜனநாயகம்,மனிதஉரிமைகள் போன்றவற்றை அரசியல் உபகரணங்களாகப் பயன்படுத்தும் மேற்கத்திய நாடுகள்தான் இஸ்ரேலின் 'தொட்டப்பாக்கள்'. கடந்த 18 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்கப் பிரதிநிதி பேசத் தொடங்கிய பொழுது, அங்கேபிரசன்னமாகியிருந்த பெரும்பாலான நாடுகளின் பிரதிநிதிகள் எழுந்து நின்று அமெரிக்கப்பிரதிநிதிக்கு தமது முதுகைக் காட்டியபடி நின்றார்கள். நிகழும் யுத்தத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு எதிரான நடவடிக்கை அது. ஆனால் அதே அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள்தான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்டு வருகின்றன.

இஸ்லாமிய நாடாகிய துருக்கி அமெரிக்கா தலைமையிலான நேட்டோவுக்குள் அங்கம் வகிக்கின்றது. ஆனால் ஹமாஸுக்கு உதவிபுரியும் நாடுகளில் துருக்கி முக்கியமானது. ஒருபுறம் அது ஹமாஸுக்கு உதவி செய்கிறது. இன்னொரு புறம் அமெரிக்கக் கூட்டணிக்குள் காணப்படுகின்றது.

கியூபா, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் பக்கம் தான் நிற்கின்றது. அது போராடி வென்ற ஒரு நாடு. ஈழப்போராட்டத்தின் தொடக்கத்தில் கியூபாவும் ஓர் இலட்சிய முன்மாதிரியாகப் போற்றப்பட்டது. ஈழப் போராளிகள் சிலர் தமக்கு கஸ்ரோ என்று பெயர் வைத்துக் கொண்டார்கள். ஆனால் கியூபா,ஐ.நா.வில் தமிழ் மக்களின் பக்கம் நிற்கவில்லை.

எனவே இங்கு தர்மம் ஓர் அளவுகோல் அல்ல. உலகில் எந்தவொரு நாடும் அது சிறியதோ அல்லது பெரியதோ, தனது நலன் சார்ந்த முடிவுகளைத்தான் எடுக்கும். நலன்சார்ந்த உறவுகளைத்தான் வைத்துக்கொள்ளும். அறம் சார்ந்து அல்ல. அரசுடைய தரப்புகளே அவ்வாறு முடிவு எடுக்கும் பொழுது அரசற்ற சிறிய மக்கள் கூட்டமாகிய ஈழத் தமிழர்கள் எப்படிப்பட்ட முடிவை எடுக்கவேண்டும்?

நீதிமான்களிடம் தான் ஈழத்தமிழர்கள் நீதியைக் கேட்கலாம் என்றால் உலகில் எங்கேயும் நீதியைக் கேட்கமுடியாது. தேவராஜ்யத்திடம்தான் கேட்கலாம். அல்லது மறைந்த மலையகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டைமானைப்போல யாகம் செய்யலாம். நவீன அரசியலைப் பொறுத்தவரை பூமி தர்மத்தின் அச்சில் சுற்றவில்லை. அது முழுக்கமுழுக்க நலன்களின் அச்சில்தான் சுற்றிக் கொண்டிருக்கிறது. அப்படியென்றால் ஈழத்தமிழர்கள் இப்பொழுது என்ன நிலைப்பாட்டை எடுப்பது?

ஈழத்தமிழர்கள் மத்தியில் தோன்றிய ஆன்மீகவாதியும் எழுத்தாளரும் அறிஞருமாகிய மு.தளையசிங்கம் ஒரு வார்த்தையைப் பயன்படுத்துவார். அதுதான் "சத்தியதந்திரம்"மு.தளையசிங்கம் ஈழப்போரின் முன்னோடி இலக்கியவாதிகளில் ஒருவர். அவர் எழுதிய "ஒரு தனி வீடு" நாவல் ஒரு தனி நாட்டுக்கான போராட்டத்தை தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தியது என்று அவருடைய ஆன்மிக நண்பர்கள் கூறுவார்கள். சத்தியதந்திரம் என்றால் என்ன? மகாபாரதத்தில் கிருஷ்ணர் செய்வது அதைத்தான். பாரதப்போரில் பாண்டவர்கள் வென்றது புஜபலம், ஆயுத பலம் , படை பலம் என்பவற்றால் மட்டும் அல்ல, பெருமளவுக்கு கிருஷ்ணருடைய புத்தி பலத்தால்தான். மகாபாரதத்தை வேறு வார்த்தைகளில் சொன்னால் கிருஷ்ண தந்திரம் எனலாம். அதைத்தான் தளையசிங்கம் சத்தியதந்திரம் என்று சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் தமிழ்மக்கள் தமது போராட்டத்தின் இதயமாக இருக்கும் அறத்தைக் கைவிடாமல், உலக ஒழுங்குக்கு ஏற்ப நெளிவு சுழிவோடு நடந்து கொள்வது என்றால் அது தான் ஒரேவழி. அதை கிறிஸ்துவின் வார்த்தைகளில் சொன்னால் "இதயத்தில் புறாக்களைப்போல் கபடம் இல்லாமலும் செயலில் பாம்புகளைப் போல் தந்திரமாகவும்" நடந்து கொள்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காத்திருப்பின் வலிகள் காண...



முப்பது ஆண்டுகளுக்குப் பின்பு என்னுடைய பிறந்த மண்ணைப் பார்ப்பதற்காக செல்கின்ற ஆர்வம், மகிழ்ச்சியோடு கலந்த கோபம் தோய்ந்த எதிர்பார்ப்பை உருவாக்கியது.

'அம்மாக்குச் சரியான கடுமை. நீ வந்தாத்தான் சீவன் போகும் பிள்ளை'

நெஞ்சைத் தொடும் இரக்கமான பேச்சின் உச்சக் கெஞ்சுதல்களை மறுக்கமுடியாமல், இறுக்கமாக இருந்த வைராக்கியத்தின் பிடிப்பு மெல்ல மெல்ல விலகத் தொடங்கியது. பண்பட்டுப்போன வயது இறுக்கமான எண்ணங்களை மெல்ல விட்டுவிடத்தான் வழிகாட்டியது. அந்த ஊருக்குப்போகமாட்டேன் என்று, பிடிவாதமாக எண்ணிய மனது இப்போது புறப்படத் தயாரானது. பிறந்து வளர்ந்த மண்ணை வெறுப்பின் உச்சக்கட்டத்தில் உதறித் தள்ளி விட்டு வெளிநாடு போனவள், அம்மா காட்டிய மாப்பிளைக்கு கழுத்தை நீட்டுவதற்குத் தயாராக இல்லை என்று கடைசி வரை போராடி முடிவில் வேண்டா வெறுப்பாக திருமணத்துக்குச் சம்மதித்து கனடா போய், இன்றைக்கு முப்பது வருடங்கள் நிறைந்து, அம்மாவின் மீது இருந்த கோபமும் தணிந்து அவளை இறுதியாகப் பார்த்து விடலாம் என்கின்ற மன்னிப்பு எண்ணம் இந்தப் பயணத்தை முடிவாக்கியது.

பிறந்த மண்ணை நெருங்கிய போது மண்ணுருண்டையாக மனதுக்குள் பிசைந்து கிடந்த பழைய நினைவுகள், கசிந்து குளிர் பெற்று ஈரமாக மெல்ல மெல்லக் கசியத் தொடங்கின. இங்கு நிறையவே மாறி இருக்கிறது. அமைதியான எண்ணங்களோடு சிட்டுக்குருவிகளாக பறந்து திரிந்த வீதிகள் பளபளப்பாக, விசாலமாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் கட்டடங்களும் கடைகளும் நவீனத்தை வரவேற்கும் வடிவங்களாக வித்தியாசமாகத்தான் இருக்கின்றன. நான் விட்டுச் சென்ற யாழ்ப்பாணம் அப்படியே இருக்கும் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு மடத்தனம்? என்னுடைய தோற்றம், நிறம், வாழ்கைமுறை எப்படி மாறியிருக்கிறதோ அதுபோல இங்கேயும் பல மாற்றங்கள் நிகழ்ந்துதான் இருக்கின்றன. அம்மாவோடு எனக்கேற்பட்ட இளவயது கோபம்,நீண்ட காலத்துக்குப் பிறகு அவளைக் கடைசி நேரத்தில் பார்க்க அனுமதித்திருக்கின்றது.

"வாங்கோ வாங்கோ குஞ்சுகளே.. ராசாத்தி உன்ர கொம்மா சீவன் போறதுக்கு இப்படி ஒரு பாடு படுறா.... உயிரைக் கொண்டு போக யமனுக்கு இவ்வளவு தடையோ?..."

ஒப்பாரியும் கூக்குரலும் எனக்குப் பிடிக்கவில்லை. மனதின் வடுக்கள் இத்தனை ஆண்டுகள் போனாலும் அப்படியே தானே இருக்கிறது. அம்மாவில் கொஞ்சம் முன்னேற்றம் தெரிகிறதாக மற்றவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். என்னைக் கண்டதும் அவளுடைய உயிர் வலிமை பெற்றதாக உருமாறுகிறதாக மகிழ்ந்தார்கள். மூடிக்கிடந்த அவளுடைய கண்கள் திறப்பதற்கு முயற்சிக்கின்றன. எங்கோ கட்டுப்பாடில்லாமல் கத்திக் கொண்டு இருக்கின்ற அண்டங்காக்காவின் அழுகுரல் போல எனக்குள்ளே வெளிவராத துக்கம் முள்ளந்தண்டைக் கிழித்துக் கொண்டு கைகளை நீட்டுகிறது. அம்மாவைத் தூக்கி மடியில் கிடத்துகின்றேன்.

'நீ செய்த பாவங்கள் தானம்மா உன்னைப் போகவிடாமல் தண்டிக்கிறது'

என்னையறியாமல் வந்து விழும் வலிய வார்த்தைகள். நெஞ்சின் வெளிகளுக்குள் துக்கக் காற்று அடைத்து வெடித்து வெளியேறிய வார்த்தைகளை அப்படியே கட்டி வைத்து விட்டுக் கல்லாக இருக்கிறேன். பாவம் அவள் தாய்மை என்ன செய்யும்? தன் மகளின் வாழ்வு நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக கடுமையாகப் போராடினாள். அது அவளின் தவறல்லவே. தாய்மையின் இயல்பை பாவம் என்று பழித்துவிட்ட என் மனதை இதயம் கண்டிக்கிறது. ஒரு ஏழைத்தாயின் ஏக்கம், இயலாமை, போராடி முடித்த காலங்களின் வலியோடு களைத்துப் படுத்திருக்கிறது. இதைப் பாவம் செய்தாள் என்று பழி போடுவது உண்மையில் பிழையில்லையா?

நான் பிழை செய்து விட்டேனோ? என் தாயை மறந்து இவ்வளவு காலமும் வாழ்ந்திருக்கின்றேன். அவ்வளவு வைராக்கியம் பெற்றதா என் காதல்? அந்த இளமைக்கால காதலுக்காக என் தாயை அவமானப்படுத்தி விட்டேனோ? என்றெல்லம் இதயம் அடிக்கடி கேட்டுக் கொண்டே இருந்தது.

'உதுக்கு நான் ஒருநாளும் சம்மதிக்கமாட்டன். இயக்கத்தில் இருக்கிறவனுக்கு என்ர பிள்ளையை கலியாணம் செய்ய விடமாட்டான்'

அம்மா பிடிவாதமாக நின்றாள். தினமும் வீட்டில் பிரச்சினைகள், சண்டைகள், ஆரவாரங்கள் ,ஒப்பாரிகள். கூக்குரலும் அழுகையும் இல்லாத நாள்களே இல்லை. நிலவனை அவமானப்படுத்தினார்கள். அவன் மிகப் பெரிய தவறு செய்து விட்டதாக, அவனைத் திட்டித் தீர்த்தார்கள்.

அம்மாவின் இதயத்தில் வெடித்துப் பறக்கும் கடந்த கால நினைவலைகள் நிலவனை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை

"ஏற்கனவே என்ர ஒரு குஞ்சை இழந்திட்டன்.... அவன் வீடு வாசல் தாய், தகப்பன் வேண்டாமெண்டு போனவன் தானே.... பிணமா வருமட்டும் புளுகித்தள்ளினீங்கள்... எல்லாத்தையும் அவனே சாதித்து விடுவான் எண்டு சொல்லிச் சொல்லி என்னைச் சமாதானப்படுத்தினியள்... ராசாத்தி வாழ்விழந்து நிக்கிறத என்னால பாக்க முடியாது. இதுகளைப்பாத்து சகித்து விசரியாக வாழ்றதை விட இப்பவே நான் செத்துப்போறன்"

அம்மா கத்திக் கூச்சல் போட்டாள். பெத்த வயிறு எதையும் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. கருவறைக்குள் அடைகாத்த குஞ்சுகளை பருந்துக்குப் பலி கொடுக்கும் அளவுக்கு அவள் தாய்மை வலிமை பெறவில்லை. நிலவனைத் திட்டித் தீர்த்தாள். குடும்ப உறவாக மிக நெருக்கமாக ஒரு பிள்ளையைப் போலப் பேணி நடந்தவள் ஒரு நொடியில் தூக்கி எறிந்து அவமானம் செய்து விட்டாள். அந்த வலியை இன்று முப்பது ஆண்டுகள் கடந்தும் என்னால் மறக்க முடியவில்லை.

இருபது வயதில், நிலவனுக்கும் எனக்கும் ஏற்பட்ட காதல் ஒருவரை ஒருவர் பிரிவதற்கு அனுமதிக்கவில்லை. நிலவன் ஒரு கட்டுப்பாட்டுக்குள் தன்னை நெறிப்படுத்த வேண்டியிருந்தது. அங்கிருந்து விலகி வர அவனால் முடியாது. அந்தக் கட்டுப்பாடுகளுக்குள் அவனுக்காக என்னால் உள்நுழைய முடியவில்லை. எனது தம்பியும் எங்களை விட்டு நிலவன் மாதிரி நாட்டுக்காக தன்னை அர்ப்பணித்தவன். ஆனால் அவனது பிணத்தை முழுமையாகப் பார்க்க முடியாமல் எங்களுக்கு ஏற்பட்ட கொடூரமான அனுபவம், நிலவனையும் உள்ளீர்த்துக்கொண்ட அந்த முறைமையை வெறுக்கும் நிலையை உருவாக்கியது. நிலவனை அங்கிருந்து எடுத்துக் கொள்ளவும் முடியவில்லை. அம்மாவின் பிடிவாதமும், மரணத்தைக்காட்டிப் பயமுறுத்தும் கோபமும் எதையும் முடிவெடுக்க முடியாமல் தவிக்க வைத்தன.

அன்று தான் கடைசியாக நிலவனைப் பார்த்தேன். அன்று போனவன் பின்பு வரவேயில்லை. என்னையே சுற்றிச் சுற்றி வந்து கதைகள் பேசியவன் திடீரென்று காணாமல் போனதை மனம் தாங்க மறுத்தது.

மாதங்கள் கடந்தன, வருடங்கள் ஆகின. கனடா வாழ்வு எல்லாவற்றையும் புரட்டிப் போட்டது. புதிய வாழ்க்கையில் எல்லாமே மாறிவிட்டன. நிலவனுடைய நினைவுகளும் காலத்தின் வேகத்தோடு கரைந்து போயின. இத்தனை வருடங்கள் கடந்து சென்றாலும், இதயத்தில் உருவாகிய ஆழமான வலியின் நெருடல் மறந்து போகமுடியாமல் நெருடிக் கொண்டே இருக்கும். மீண்டும் என் தேசத்துக்கு வரும் போது மறந்துபோக வேண்டும் என நினைக்கின்ற நினைவுகள் மீள வந்து பழைய வாழ்க்கையை நினைவுக்குக் கொண்டு சென்று விடுகின்றன.

சிலபேருடைய தவறுகள் பலபேருடைய வாழ்கையைப் புரட்டிப்போட்டு, புண்ணாக்கி ,உறவுகளைக் களைந்து நிர்வாணமாக்கி,நிர்க்கதியாக ,அநாதையாக, ஏதிலிகளாக அலையவிட்டுள்ளது. மீண்டும் சரிசெய்யமுடியாத பிழைகளை ஏற்படுத்திய வடுக்களை சீர்ப்படுத்த முடியாமல் நிலவன் மற்றும் என் தம்பி போன்ற எத்தனை இளம்பராயத்தினர் தமது வாழ்வைத் தொலைத்து விட்டு வேதனைப்படுகின்றார்கள். மேலைத்தேய நாடுகளில் இளம்பராயத்தினர் தமது எதிர்காலம் பற்றிய எத்தகைய கவலைகளும் இன்றி எவ்வளவு அழகாக வாழ்கின்றார்கள். எமது தேசத்தின் பிள்ளைகளில் பல பேருக்கு ஏன் இப்படியொரு வாழ்வு உருவாகியது என்பது இதுவரையும் விடைகாண முடியாத வினாவாகவே உள்ளது.

✪ ✪ ✪ ✪ ✪ ✪ ✪ ✪

யாழ்ப்பாணம் வந்து இரண்டு நாள்கள் ஆகி விட்டன. இடமாற்றங்கள் நித்திரையைக் குழப்பி விட்டதால். மனம் அமைதியின்றி இருந்தது. அம்மா கொஞ்சம் தேறிவருகின்றாள். என்னுடைய வாழ்வும் வருகையும் அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்கிறது. இளம் வயதிலேயே அப்பாவை இழந்து ஒரு பாடசாலை ஆசிரியையாக கடுமையான உழைப்போடு என்னையும் தம்பியையும் அரும்பாடுபட்டு அன்போடும் பாசத்தோடும் வளர்த்தவள். என்னுடைய பிரிவின் துயரைமனதில் பதிந்து கொண்டு சாகாப்பிணமாகக் கிடந்தவள் கொஞ்சம் மூச்சு விட ஆரம்பித்திருக்கின்றாள். தாயை விட காதலை முக்கியமாகக் கருதி அவளைத் தவிக்க விட்டதை நினைத்தால் முட்டாள்தனமாக இருக்கிறது. இளம் வயதில் எழுகின்ற முடிவுகள் பலபேரைப் பாதிக்கின்றன.குறிப்பாக பெற்றோரின் வலிகள் சந்ததி கடந்தும் வேதனையை ஏற்படுத்தியபடி இருக்கின்றன.

பருத்துக் கிடந்த வீதிகள் ஒதுக்கிக் கிடக்கும் குப்பைகூழங்களைத் தள்ளிக் கொள்வதற்கான வாய்க்கால்களோடு ஒட்டிக்கொண்டு கிடந்தன. அவற்றில் தேங்கிக் கிடக்கும் குப்பைகூழங்கள் வீதிகளின் அழகை இழிவுபடுத்தின. பருத்துக்கிடந்த நிழல் மரங்களைக் காணவில்லை. வீடுகளைப் பிரிக்கும் அகல மதில்களும் பெரிய கதவுகளும் அக்கம் பக்கத்துத் தொடர்புகளை அறுத்தெறிந்து பிரித்து விட்டிருந்தன. கந்தர் சந்திக்கு வந்து சேருகின்றேன் முழுமையாக மாறிவிட்ட சந்தி. கந்தரின் தேனீர்க் கடையும் சுப்பரின் சைக்கிள் கடையும் இல்லை. நான்கு மாடிக் கட்டடம் ஒன்று நிமிர்ந்து இருக்கின்றது. முற்று முழுதாக மாறிப் போயிருக்கும் கந்தர் சந்தியைப் பார்க்க நெஞ்சடைக்கும் வலி உருவாகியது .மாரடைப்பு வந்துவிடுமோ என்பது போல இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. இந்தச் சந்தியைக்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்துதானே எமது பாடசாலைக்குச் செல்லவேண்டும? ஒரு நாளைக்கு எத்தனை தடவைகள் இந்தச் சந்தியைக் கடந்து செல்லுவோம். பட்டாம் பூச்சியாக நண்பிகளோடு இந்தச் சந்திகளைக் கடக்காத நாள்களே இல்லை. கந்தர் கடையின் பின்பக்கம் தான் நிலவனின் வீடு இருக்கிறது. இப்போது அதை மறைத்து இந்தப் பிரமாண்டமான கட்டடம் நிமிர்ந்து நிற்கிறது. இயற்கை அழகைஅழித்து கட்டடங்களை உருவாக்கி மகிழும் மேலைத்தேச வாழ்வின் தழுவல்களை இங்குள்ள மக்களும் கைப்பற்றிவிட்டார் கள். நவீனத்துக்கு மாறி விட்டவர்கள் தான் இயற்கை யைத் தேடி வருகிறார்கள். எமது இயற்கையைத்தொ லைத்துவிட்டு மறுபடியும் அதைப்போல உருவாக்க எத்தனை கோடி ஆண்டுகள் தேவை? போரின் பரிமாணங் கள் ஒரு புறம் இயற்கையை அழித்துத்தீர்க்க , போர்விட் டுச்சென்ற எச்சங்களாகிய மனிதர்கள் இயற்கையின் மிச்ச சொச்சங்களை அழித்து நவீனப்படுத்துகின்றோம். நவீனமயப்படுத்தப்பட்ட கட்டடங்களுக்கு நடுவே மாற்றம் பெறாத சிறுவீடுகள் போரின் வடுக்களைச்சுமந்து மாற்றங்களுக்கு விரும்பாமல், அம்மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வலுவின்றி ஞாபகங்களை வைத்துக் கொண்டு இருப்பதாகத் தோன்றுகின்றது. அதுபோல நிலவனின் வீடும் ஆக்கிரமிப்புக்கு அல்லல்பட்டு ஒதுக்கப் பட்டதான தோற்றத்தை வெளிப்படுத்தியது.

நிலவனின் அம்மா இந்த வீட்டில் தானே இருந்தாள் ? தன்னுடைய ஒரே ஒரு மகனுக்காக தன் உயிரை வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தவள். நிலவன் 'அங்கு 'இருந்தாலும் அடிக்கடி வந்து செல்வான். அம்மாவின் சுவையான சமையலுக்கும் அன்புக்குமாக தன்னுடைய நண்பர்களோடு வந்து சிலவாரங்கள் தங்கிவிட் டுச்செல்வான்.

' எல்லாத்தையும் விட்டுட்டு வீட்டுக்கு வா தம்பி. . . '

தாய் ஒவ்வொரு முறையும் கெஞ்சிக் கொண்டே இருப் பாள். நிலவன் மிகவும் உறுதியாக இருந்தான், தன்னு டைய முடிவில் இருந்து அவன் விலகுவதாக இல்லை. நிலவனைக் காணவில்லை என்று அறிந்ததும் பல தடவை கள் சென்று தேடினேன். நிலவனின் அம்மாவும் என்மீது இரக்கம் காட்டவில்லை இதைப்பற்றிப் பேசவும் தயாராக இல்லை. எனது அம்மா ஏதோ கடுமையாகக் கதைத்தி ருக்க வேண்டும். அதனால் நிலவனின் அம்மா என்னோடு அவ்வளவாகக் கதைக்க விருப்பமில்லாமல் இருந்தாள். எல்லாவற்றையும் வேண்டாமென்று விட்டுவிட்டுப் போய்விட்டேன். மீண்டும் வரும் போது, பழைய நினைவுகள் பழைய வாழ்க்கையை நினைவுபடுத்த, இங்கு ஏன் வந்தேன்? பலவருடங்களுக்குப்பிறகு இறைவன் ஏன் என்னை இங்கு கொண்டுவந்தான்? இந்தக் கேள்விகளுக்கு பதில் கிடைக்குமோ என எண்ணம் புலம்பியது. ஒரு சிறிய படலை இருப்பது போலவும் இல்லாதது போலவும் தோன்றுகிறது. சிறிய பாதையொன் றில் படலை போடப்பட்டிருந்தது. அந்த வீடு அப்படியே இருக்கிறது. பாதை மட்டும் வேறுபக்கமாக மற்றப்பட்டு ஒடுக்கமாக்கப்பட்டிருக்கிறது.

படலையைத் தட்டிப் பார்க்கிறேன். ஒரு பெண் பிள்ளை படலையைத் திறக்கின்றாள்.

**அம்மாவின் மீது இருந்த கோபமும் தணிந்து அவளை இறுதியாகப் பார்த்து விடலாம் என்கின்ற மன்னிப்பு எண்ணம் இந்தப் பயணத்தை முடிவாக்கியது. பிறந்த மண்ணை நெருங்கிய போது மண்ணுருண்டையாக மனதுக்குள் பிசைந்து கிடந்த பழைய நினைவுகள், கசிந்து குளிர் பெற்று ஈரமாக மெல்ல மெல்லக் கசியத் தொடங்கின.**

'தங்கச்சி ,தேவி அன்ரி எண்டு ஒராள் இருந்தவா. இந்த வீடுதானே?இருக்கிறாவா?'

'ஓம் அன்ரி வாங்கோ இருக்கிறா'

அந்தப் பிள்ளையின் தோற்றம் நிலவனை மீண்டும் எனக்கு நினைவூட்டியது. அதே கண்கள், அதே சுருட்டை முடி, கன்னக் குழி, நிலவனின் மகளாக இருக்குமோ? என மனம் ஆர்வத்தால் துள்ளியது.

'வாங்கோ அன்ரி. அப்பம்மா தான் படுத்திருக்கிறா'

நிலவனின் மகள் என்று உறுதியாகியது. காலச் சுழற்சி நின்றுவிட்டு, மீண்டும் சுழல அது விருப்பப்பட்டதாக, உயிரின் ஒரு பக்கத்தை யாரோ கசக்கி எடுத்து எறிந்து விட்டு திரும்பவும் அதைச்சீர்படுத்தித் தந்ததாகவும் இருந்தது.

'கடவுளே நிலவன் நல்லாயிருக்கிறான் அது போதும்' என்றது மனம். அந்த ஒடுங்கிய பாதைக்கு நடுவே நடந்து உள்ளே போனபோது கால்கள் இரண்டும் இழுத்துக் கொண்டது, போல ஒரு உணர்வு. நிலவனின் அம்மா




கட்டிலில் படுத்திருக்கிறார். இளமையின் அழகில் மின்னிக் கொண்டிருந்த அந்தத்தாய் முதுமை விழுந்து வாழ்வின் முக்கால் பகுதியைக் கடந்து விட்டதான வலியில் படுத்திருந்தாள்.

'அன்ரி ராசாத்தி வந்திருக்கிறன் கனடாவில இருந்து. . .'

அவர் அதைப் புரிந்து கொண்டது போலத் தெரியவில்லை. என்னுடைய நடை, உடை, பாவனையின் முழுமையான மாற்றம், தோற்ற வேறுபாடு அவருக்கு என்னை உடனே அடையாளம் காட்டத்தவறியது.

'அன்ரி ராசாத்தி வந்திருக்கிறன். நிலவன் எங்க? நீங்கள் எப்படியிருக்கிறியள் ?இந்தப் பிள்ளை யார்? '

நீண்டு கொண்டு போன கேள்விகளுக்கு அவர் பதிலளிக்க விரும்பாமல் அமைதியாக கண்ணீர் வடிக்கத் தொடங்கி னார். அந்தச்சிறிய பெண் பிள்ளை ஆதரவோடு கை கொடுத்து அவரைத் தூக்கி இருத்தியது. அவருடைய அழுகை நின்றபாடில்லை. ஓடிக் கொண்டிருந்த கண்ணீர் விம்மலாக வெடித்து கூக்குரலாகி பின்னர் ஒப்பாரி ஆகியது. 'எங்கையெண்டு தெரியாது.யாருக்கும் தெரி யாது. என்ர நிலவன் எங்க போனவன் ? எங்க இருக்கி றான் எண்டு ஒன்றும் தெரியாது ராசாத்தி'

'அப்ப போன நிலவன் இன்னும் வரேல்லையோ?'

'இல்லையம்மா. . . சண்டையெல்லாம் முடிஞ்சு புனர் வாழ்வில ஒரு வருசம் இருந்தவன். அங்கேயே ஒரு பிள்ளையை விரும்பிக் கல்யாணம் செய்தவன். புனர்வாழ்வுக்குப் பிறகு இங்க தான் என்னோட இருந்தவை. . . இவள் பிறக்கும் மட்டும் இருந்தவை'

அவனுக்கு ஒரு வாழ்வு இருந்தது என்று நினைக்க மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் இப்போது அவன் எங்கே என்ற கேள்விக்குப் பதில் இல்லை என்ற போது இரத்த அழுத்தம் அதிகரிக்கும் உணர்வு இதயத்தின் பாரத்தை ஏற்றியது.

தேவி அன்ரியின் அழுகை நிற்கவேயில்லை அந்தப் பிள்ளையும் சேர்ந்து அழுகிறது. நானும் அங்கே பிணமாக நின்று அழுதுகொண்டிருக்கிறேன். வீட்டில் வறுமை நிலை வெளிப்படையாகத் தெரிந்தது. போட்டிருக்கும் ஆடைகள், வசதி எதையும் வெளிப்ப டுத்தாத வீட்டின் உள்ளகத்தோற்றம், மனதை மிகவும் வருத்தியது.

'அன்ரி நிலவனுக்கு என்ன நடந்தது. . . இந்தப் பிள்ளை யார்?'

'இது நிலவன்ர பிள்ளை தான்.ஆறுமாதம் குழந்தையா இருக்கேக்க ஒரு இரவு விசாரணைக்கெண்டு கொண்டு போனவை. இண்டைக்கு 12 வருசமாச்சு இன்னும் வரேல்ல. . .'

தேவி அன்ரியின் அழுகையும் அந்த அழுகைக்கு பின்னால் தேங்கிக்கிடந்த பலவருட எதிர்பார்ப்புகளும் சோகங்களும் எனது நிலைக்குத்தான உணர்வுகளை தள்ளி விட , என் கால்கள் தன்னை மறந்து சரிய அப்ப டியே அந்த வெற்று நிலத்தில் சடுதியாக அமர்ந்து கொள்கின்றேன்.'பொல்லாத அந்த இரவு ஏன் வந்தது? எல்லாத்தையும் விட்டுட்டு பாவம் தனக்கெண்டு ஒரு வாழ்க்கைக்கு வந்து நிம்மதியாக இருந்தவன் ஒருவருசம் கூட என்னோட இருக்கேல்ல. . . என்ர குஞ்சுக்கு இப்படி ஒரு விதியோ?' இது நிலவன்ர பிள்ளை. என்னோடதான் வளர்ந்தது. என்னை விட்டுப் பிரிய விரும்பாமல் என்னோ டதான் இருக்கிறாள். இவளிண்ட தாயின்ர சகோதரங்கள் உதவிசெய்யினம். படிக்கிறாள்.. மனம் நிறைந்த வேதனை பாவம் உதப்பாக்கிற நேரமெல்லாம் வயிறு பத்தி எரியுது.. தாயும் தகப்பனும் வருவினம் எண்டு சொல்லிச்சொல்லி எனக்கு ஆத்தாது. எல்லா இடமும் பதிஞ்சு இருக்கிறம் போராட்டங்களுக்கும் போனனாங்கள்.இப்ப என்னால ஏலாது.. இவவின்ர தாயின்ர தங்கச்சி இவளுக்காக எங்களோட தான் இருக்கிறா. . . அவ கலியா ணம் செய்யேல்ல இவள வளக்குற துக்காக.. இங்கேயே இருந்திட்டா. இப்ப வெளியில போயிருக்கிறா. . . எங்கள் ரெண்டு பேரையும் அவதான் பாக்கிறா.

இது நிலவன்ர பெயரில இருந்த காணி அடாவடித்தனமா உந்தக்கட்ட டம் கட்டேக்க முன்பக்கம் எல்லாத் தையும் பிடிச்சிட்டாங்கள் . . . உதைக்கட்டிறதும் நிலவனோட ஒண்டா இருந்தவைதான். . . . எத்தினை குடியைக்கெடுத்திட்டாங்கள்.

'கோர்ட்டுக்கு சிலவழிச்சு என்ர முழு நகையும் முடிஞ்சுது. இனி ஒண்டும் வேண்டாம் இருக்கிற தோட்டை இருப்பம் எண்டு இருக்கிறம்.'

எத்தனை விதமான துன்பச்சுமைகள். இவை எதையும் தெரிந்து கொள்ளாமல் இத்தனை ஆண்டுகள் ஒரு சுயநலவாதியாக வெளிநாட்டில் வாழ்ந்து கொண்டி ருக்கிறேன். நிலவனை மறப்பதற் காக வந்த பாதை நெருஞ்சி முட்களான நினைவுகளை குத்திக் கிழிப்பதான வலிகளை மீண்டும் தந்து விட்டது.

நிலவனுடைய அம்மா எத்தனை காலங்களாக துயரங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றாள்? இவள் போன்ற எத்தனை தாய்மைகள் கருப்பையின் நினைவு களை அழிக்க முடியாமல், வருவார்கள் என்று காத்திருக் கின்றன.

'பன்னிரண்டு வருசமாச்சு இனியும் வருவினமோ?'

நம்பிக்கையில்லாத மனம் மௌனமாய் பேசியது.

'நிலவனுக்கு வலக்கால் இல்லை. மனிசிக்கு இடக்கை இல்லை . . .பாவங்கள் எண்டு இரக்கம் வரேல்லையோ? உங்க கடவுளும் இருக்கோ.. உதுகளை மன்னிக்க வேண்டுமெண்டு ஒரு மனுசருக்கும் மனசு வரேல்லை யே. . . . . .என்னை ஏன் இந்தக்கடவுள் வச்சிருக்கிறான்?'

காலில்லாத நிலவனின் சரீர வலியும் பெற்ற மகளை விட்டுப்போன நெஞ்சு வலியும் நிலவனின் நெஞ்சுக்குள் எத்தனை வேதனைச்சிந்தனைகளை கொடுத்திருக்கும்? இந்தப்போராட்டம் இப்படி மனித இனங்களின் பரம்பரை வேதனைக்காக உருவாக்கப்பட்டதோ? இல்லை என்பது ஒரு வலி. இருக்கிறதா, இல்லையா என்று தெரியாமல் இருப்பது போலவும் இல்லாதது போலவும் தேடி அலைவது எத்தனை வலி? ஈடுகட்ட முடியாத துயரம். இதற்குப் பிராயச்சித்தம் என்ன?

'உம்மட அம்மா வாறவா பிள்ளை. நிலவனுக்கு காசு குடுத்தவா. நிறைய உதவி செய்தவா. . . .அவன் காணா மல் போனபிறகும் வாறவா. எனக்கு அவ தான் முழுக்க ஆறுதல்.எங்களுக்கு சாமான்கள் எல்லாம் வேண்டிக் கொண்டுவந்து தருவா.பேத்தியெண்டு இவளோட நல்ல வாரப்பாடு.இப்ப சுகமில்லாம இருக்கேக்க நான் போய்ப் பாத்தனான் . . .கனநாளா இங்கால வரேல்ல."

நான் வெறுத்து ஒதுக்கிய என் தாய் , இப்போது எனக்கு தெய்வம் போலத் தெரிகிறாள்.

அம்மாவோடு கதைத்திருந்தாலும் பலவிடயங்கள் தெரிந்திருக்கும். எனது வைராக்கியம் அதுக்கு இடம் கொடுக்கவில்லை. எதுவுமே தெரியாமல் இருந்திருக்கின் றேன். அம்மா நிறையக்கடமைகள் செய்திருக்கிறாள். பாவம் அவளை நான்தான் தவறாக துன்பப்படுத்தியிருக்கிறேன். இந்தக்குடும்பம் 'காத்திருப்பு' எனும் கொடிய நோயில் அகப்பட்டுத் துடிக்கின்றது. இதற்கு மட்டுமல்ல இதுபோன்ற காத்திருக்கும் குடும்பங்களுக்கு நான் ஒரு மகளாக வாழ வேண்டுமென்று மனம் உறுதி கொண்டது. கன்னத்தில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு . . .நிலவனின் மகளை நெருங்கி முத்தமிடுகின்றேன் .

'அழுவாதே மகளே . . . . . . .உனக்கு ஒரு தாயாக நானும் இருகின்றேன்'

தேவி அன்ரியின் தோள்களைத்தழுவி நெஞ்சோடு அணைத்து' . . . . .அம்மா நான் உனக்கு மகளாக இருக் கின்றேன்'

வார்த்தைகளாக வராத மௌன மொழிகள் நெஞ்சுக்குழிக் குள் நின்று அமைதியாகப் பேசிக்கொண்டன.

'இனி என் காலங்களை இந்தப் பாவப்பட்ட மக்களுக்காக வாழ்வேன்' என்ற உறுதியோடு கண்களைத் துடைத்துக்கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகங்களை ஒடுக்கும் சட்டவரைவு

குருமன்காட்டாள் வன்னிகா




இலங்கையில் அதிகாரத்தில் உள்ளவர்களின் ஊழல், இலஞ்சம், நிதி மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், பாலியல் இலஞ்சம் கோரல் முதலியன பற்றிய தகவல்களும் சமூக, பொருளாதார, அரசியல் அதிர்வலைகளை உருவாக்கும் செய்திகளும் சிங்கள, தமிழ், ஆங்கிலமொழி மூலமான சமூக ஊடகங்களால் துரித வேகத்தில் மக்களுக்கு தொடர்பாடல் செய்யப்படுகின்றன. அதன்மூலம் மக்கள் வீதிக்கு இறங்கி பெருமளவில் அணிதிரண்டு, ஆர்ப்பாட்டங்கள் நடத்தி ஜனநாயகரீதியில் ஆட்சியாளருக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றனர். ஆட்சிக் கதிரைகளையும் ஆட்டம் காண வைக்கின்றனர். இந்த நிலையைத் தடுத்து ஆட்சியைத் தொடரவேண்டுமானால் சமூக ஊடகங்களை எவ்வாறேனும் அதிகாரத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். அதற்காகவே 'ஒன்லைன்' பாதுகாப்புச் சட்டவரைவை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதுடன் அதை நாட்டின் சட்டமாக்கவும் அவசரம் காட்டுகிறது எனும் பலத்த விமர்சனம் எழுந்திருக்கும் நாள்கள் இவை. 'ஒன்லைன்' பாதுகாப்புச் சட்டவரைவை (Online Safety Bill) சவாலுக்கு உட்படுத்தி 45 மனுக்கள் உச்சநீதிமன்றத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்த்தன 18.10.2023 புதன்கிழமை அன்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். அந்த மனுக்களின் நகல்கள் தனக்கும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2023 செப்ரெம்பர் 18 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்ட இந்தச் சட்டவரைவு, நாட்டுக்குள் சில குறிப்பிட்ட விடயங்கள் அல்லது அறிக்கைகளின் 'ஒன்லைன்' தகவல்தொடர்பாடலை தடைசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக - உண்மை மற்றும் நம்பகத்தன்மையற்ற - 'ஒன்லைன்' கணக்குகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் இது வகைசெய்கிறது. தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் 'ஒன்லைன்' இருப்பிடங்களைக் கண்டறிந்து அறிவிக்கவும், தவறான அறிக்கைகளின் தகவல்தொடர்புக்கான நிதி மற்றும் பிற ஆதரவுகளை நிறுத்தவும் இந்தச் சட்டவரைவு வகைசெய்கிறது. ஒக்ரோபர் 03 ஆம் திகதி பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால், 'ஒன்லைன்' பாதுகாப்புச் சட்டவரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி நாடாளுமன்றத்தின் ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த, 'ஒன்லைன்' பாதுகாப்பு சட்டவரைவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்வதற்கான 14 நாட்கள் அவகாசம் கடந்த செவ்வாய் 17.10. 2023 இல் முடிவடைந்தது. இந்தக் காலஅவகாசத்துக்குள் 45 மனுக்கள் உச்சநீதிமன்றத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம், சித்திரவதை மற்றும் மன உளைச்சல் மற்றும் பாகுபாடு ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்கான உரிமைகள் உட்பட பல அடிப்படை உரிமைகள் 'ஒன்லைன்' பாதுகாப்புச் சட்ட வரைவினால் மீறப்பட்டுள்ளதாகவும், அதன் பல உறுப்புரைகள், தாய்ச்சட்டமான அரசியல் யாப்புக்கு முரணானவையாகவும் எதிரானவையாகவும் உள்ளன என்றும் மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

'ஒன்லைன்' சட்டவரைவில் கூறப்பட்டுள்ளபடி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு நீதித்துறை அதிகாரங்களை வழங்குவதன் மூலம் குடிமக்களின் பல அடிப்படை உரிமைகள் மீறப்படும் என மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயங்களைக் கருத்தில் கொண்டு, 'ஒன்லைன்' சட்டவரைவை சட்டமாக்குவதற்கு நாடாளுமன்றத்தில் சிறப்புப் பெரும்பான்மையுடன் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பும் அவசியம் என்று தீர்ப்பளிக்குமாறு மனுதாரர்கள் உச்ச நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மேற்படி சட்டவரைவை சவாலுக்கு உட்படுத்தி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சார்பில் உச்சநீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவில் பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

முதலாவதாக, "குழப்பும் அல்லது துன்பப்படுத்தும் அறிக்கைகளால்" ஏற்படும் சேதத்துக்கு எதிராக மக்களை "பாதுகாக்கும்" ஒன்லைன் பாதுகாப்பு ஆணையகத்தின் அதிகாரம் உட்பட அந்தச் சட்டவரைவில் பல தெளிவற்ற நோக்கங்கள் உள்ளன.

இரண்டாவதாக, ஒன்லைன் பாதுகாப்பு சட்டவரைவுக்குள் பட்டியலிடப்பட்டுள்ள "தடைசெய்யப்பட்ட அறிக்கைகளின்" அர்த்தம் 'விட்டேத்தியான' பரந்த வீச்சில் இருப்பதோடு, அது அரசியலமைப்புக்கும் எதிரானதாகவுள்ளமை. மூன்றாவதாக, அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு முரணாக நீதித்துறை அதிகாரத்தைப் பயன்படுத்துவது உட்பட, ஒன்லைன் பாதுகாப்பு ஆணையகத்துக்கு வழங்கப்பட்டுள்ள தன்னிச்சையான மற்றும் நியாயமற்ற அதிகாரங்கள்.

நான்காவதாக, தனிப்பட்ட நபர்களை "நிபுணர்களாக" நியமிக்க அமைச்சருக்கு வழங்கப்பட்ட தன்னிச்சையான அதிகாரங்கள், பின்னர் அவர்களுக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. இது குடிமக்களின் சுதந்திரத்தைப் பாதிக்கிறது மற்றும் எந்தப் பொறுப்புக் கூறலும் இல்லை.

ஒன்லைன் பாதுகாப்பு ஆணையகத்தின் விதிகளை உருவாக்கும் திறனையும், 'ஒன்லைன் பாதுகாப்பு' குறித்த விதிமுறைகளை உருவாக்கும் அமைச்சரின் திறனையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சவாலுக்குட்படுத்துகிறது. ஒன்லைன் பாதுகாப்புச் சட்டவரைவு 1978 அரசியல் யாப்பின் 3, 4(c), 10, 12, 14(1)(a),(b),(c),(e),(f) மற்றும் (g) மற்றும் 14A(2) ஆகிய உறுப்புரைகளுடன் முரண்படுகிறது என்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினர் வாதிடுகின்றனர். ஆகையினால் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் பெரும்பான்மை மக்கள் ஆதரிப்பதுடன், நாடாளுமன்றில் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் இந்தச்சட்டவரைவுக்கு ஆதரவாகக் கிடைத்தால் மட்டுமே இதனைச் சட்டமாக இயற்ற முடியும் எனவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உச்சநீதிமன்றத்திடம் சமர்ப்பித்துள்ள தனது மனுவில் தெரிவித்துள்ளது.

அப்பிள், பேஸ்புக், கூகுள், அமேசான் மற்றும் யாகூ உள்ளிட்ட பல தொழில்நுட்ப நிறுவனங்களைக் கொண்ட ஆசிய இணையக் கூட்டணி (ஏ.ஐ.சி.), சர்வதேச நீதிபதிகள் ஆணையம் (ஐ.சி.ஜே.), இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவையும் இலங்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒன்லைன் பாதுகாப்புச் சட்டவரைவின் பிரச்சினைக்குரிய உறுப்புரைகளையிட்டு தமது கவலைகளையும் அதிருப்திகளையும் வெளியிட்டுள்ளன. இந்தச்சட்டவரைவு தொடர்பில் இவ்வளவுக்கு எதிர்ப்புக்களும் அதிருப்திகளும் கவலைகளும் ஊடக நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள், சமய, சமூகத் தலைவர்கள், அரசியல் கட்சிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சர்வதேச அமைப்புக்கள் முதலியவற்றிடமிருந்து வருகின்றபோதும் அரச தரப்பிலும் நியாயங்களும் காரணங்களும் கூறப்படுகின்றன.

சிங்கப்பூரின் தகவல் தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையகச் சட்டத்தின் (Media Development Authority Act of Singapore) முக்கியத்துவம்,சிங்கப்பூரின் அபிவிருத்திப் பயணம் ஆகியவற்றின் தூண்டுதலுடன் எமது பொதுமக்கள் சரியான துல்லியமான தகவல்களைப் பெறுவதை உறுதிசெய்வதற்காகவும் இலங்கையின் உலகளாவிய நிலையை உயர்த்துவதற்காகவும் ஒன்லைன் பாதுகாப்புச் சட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன கூறியுள்ளார்.

" உலகெங்கிலும் உள்ள வளர்ந்த நாடுகள் தகவல்களின் துல்லியம் மற்றும் ஊடக நிறுவனங்களின் பொறுப்பான நடத்தை ஆகியவற்றை உறுதிப்படுத்த ஒழுங்குமுறைக் கட்டமைப்பை செயல்படுத்தியுள்ளன. சிங்கப்பூரின் தகவல் தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையச் சட்டம் சிங்கப்பூரின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியுள்ளது. இன்று, குறிப்பாக இளைய தலைமுறையினர் பேஸ்புக், ருவிற்றர், ரிக்ரொக், இன்ஸ்டாகிராம் மற்றும் யூடியூப் போன்ற சமூக ஊடகத் தளங்கள் மூலம் பரப்பப்படும் செய்திகளால் கணிசமான அசௌகரியங்களை எதிர்கொள்கிறார்கள். இதுபோன்ற தளங்கள் இளையோரின் வாழ்க்கையை எதிர்மறையாக பாதிக்கும் நிகழ்வுகள், தற்கொலை என்பவற்றுக்கு கூட காரணிகளாகின்றன. ஆகவே ஒன்லைன் ஊடகங்களை கட்டுப்படுத்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் அவசரத் தேவையை சமகால நிலைமைகள் எடுத்துக்காட்டுகின்றன" என்றும் வஜிர கூறினார். உச்சநீதிமன்றில் மனுதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்கள் மீதில் என்ன நிகழும்?

இலங்கை உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சட்டவரைவுஅல்லது அதன் எந்த விதியும் அரசியலமைப்புக்கு முரணானதா என்பதை சபாநாயகர் மூலம் நாடாளுமன்றத்துக்கு அறிவிப்பதாகவிருக்கும். உச்ச நீதிமன்றத்தின் வியாக்கியானமும் அறிவிப்பும் எவ்வாறு அமையும் என்பதைப் பொறுத்தே ஒன்லைன் பாதுகாப்புச் சட்டவரைவு கைவிடப்படுமா அல்லது மீண்டும் திருத்தங்களுடன் முயற்சிக்கப்படுமா என்பது தெரியவரும்.



## பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**கே:** மீண்டும் ஆயுதப் போராட்டம் தொடர்பில் தமிழ்த் தரப்பினரின் கவனம் திரும்பியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அண்மையில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்கூட குறைந்தளவேயான அதிகாரங்களுடன் கூடிய 13 ஐ கூட தர மறுத்தால் மீண்டும் ஒரு பிரபாகரனை நாம் அழைத்து வர வேண்டியிருக்கும்' எனக் கூறியிருந்தார். ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் மட்டக்களப்பில் வைத்து 'நாங்கள் ஆயுதங்களைக் கைவிட்டமை தவறான முடிவு என தற்போது சிந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்' என கூறியுள்ளார். ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் மீண்டும் ஆயுதப்போராட்டம் தொடர்பில் பேசப்படும் நிலையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்...?

**ப:** இனியெப்போதுமே ஆயுதப் போராட்டம் மீண்டும் ஆரம்பமாகாது என்பதை சொல்வதற்கு நாங்கள் கடவுளும் அல்லர், சாத்திரக்காரர்களும் அல்லர் எம்மினம் மீது அடக்குமுறைகள் தொடர்ந்தால் எம் எதிர்கால சந்ததி கைகட்டிக் கொண்டு அதனை வேடிக்கை பார்க்கும் என்றும் சொல்லமுடியாது.அடக்குமுறைகள் தொடர்ந்தால் ஏதோ ஒரு விதத்தில் போராட்டத்தைக் கையிலெடுக்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகி விடலாம்.

அகிம்சைப் போராட்டக் காலத்தில் சிறுவயதிலே பார்வையாளர்களாக இருந்த நாங்கள் பின்னர் ஆயுதப் போராட்டத்திலும், அரசியல் போராட்டத்திலும் பங்குபற்றி, 1983 ஜூலை இனப்படுகொலைக்கு பின்னர் முழுவீச்சோடு ஆயுதப் போராட்டத்தில் இணைந்தோம். பின்னர் ஆயுதங்களை கைவிட்டு அரசியல் ரீதியான போராட்டத்திலே ஒரு அளவுக்கு மேல் எங்களால் எதனையும் செய்ய முடியாது என்பதனை உணர்ந்திருக்கின்றோம்.

ஆகவே சர்வதேச சமூகத்தினுடைய உதவியோடு வெளிநாடுகளின் தலையீட்டின் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர்களது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும். உலகத் தமிழர்கள் அத்தனை பேரும் ஒன்றுபட்டு நின்றால் எங்கள் தலைவிதி எங்கள் கையில் என்று தலைநிமிர்ந்து வாழ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.பாலமனோகரன்



○ இயல்வாணன்

தகழி சிவசங்கரப்பிள்ளையின் செம்மீன், பாலமனோகரனின் நிலக்கிளி, செங்கை ஆழியானின் வாடைக்காற்று ஆகிய மூன்று நாவல்களையும் விமர்சகர்கள் ஒப்பிட்டுப் பேசுவர். பகைப்புலம், கதைமாந்தர் வேறாயினும் வாசிக்கும் வாசகனுக்கு இம்மூன்று நாவல்களும் ஒத்த அனுபவத்தைத் தருவதாக அமைந்திருந்தன. நிலக்கிளி நாவலை எழுதியதால் நிலக்கிளி என்ற அடைமொழியோடு அண்ணாமலை பாலமனோகரன் அடையாளப்படுத்தப்படுமளவுக்கு அந்த நாவல் பேசப்பட்டது. பாலமனோகரன் ஒரு நாவலாசிரியராக, சிறுகதை எழுத்தாளராக, மொழிபெயர்ப்பாளராக,ஓவியராக பல தளங்களில் பங்காற்றியுள்ளார்.

இவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீரூற்றுக் கிராமத்தில் செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் 07.07.1942 இல் பிறந்தார். இவரது தந்தையார் சிங்கப்பூர் பென்சனியர். அத்துடன் கிராம விதானையாராகவும், உள்ளூராட்சிமன்றத் தலைவராகவும் இருந்தவர். தாயார் தண்ணீரூற்று சைவப் பாடசாலையின் முதல் பெண் ஆசிரியராக இருந்தவர்.




பாலமனோகரன் தனது ஆரம்பக் கல்வியை தரம் - 2 வரை தண்ணீரூற்று சைவப் பாடசாலையிலும், தரம் - 3 முதல் 5 வரை ஆங்கிலமொழி மூலம் உடுவில் மகளிர் கல்லூரியில் விடுதியில் தங்கியும் பெற்றார். இடைநிலைக் கல்வியை ஆங்கிலமொழி மூலம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பெற்றார். எனினும் 15 வயதில் அங்கிருந்து இடம்மாறி யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்து சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றினார்.

1962 இல் ஆசிரிய நியமனம் கிடைத்து மன்னார்,ஆண்டான்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பணியை மேற்கொண்டார். தொடர்ந்து பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆங்கில பாடத்தில் சிறப்புப் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட ஆசிரியராக 1967 இல் மூதூர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நியமனம் பெற்றார். தொடர்ந்து முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் கற்பித்தார். 1984 இல் டென்மார்க்குக்கு புலம்பெயர்ந்து சென்று அங்கேயே வசித்து வருகிறார். டென்மார்க்கிலும் இவர் கட்டடத் தொழில்நுட்பவியலாளர் படிப்பை 3 வருடங்கள் மேற்கொண்டு நிறைவு செய்திருந்தார்.

தண்ணீரூற்றில் இவரது வீட்டில் ஆனந்தவிகடன், கல்கி ஆகிய தமிழக சஞ்சிகைகளை வாங்குவார்கள். மாணவப் பருவத்தில் வீட்டுக்கு வரும் வேளை அவற்றைப் படிப்பார். அத்துடன் 10 வயதில் ராஜாஜி எழுதிய வியாசர் விருந்தைப் படித்து அதனால் நூல் வாசிப்பில் ஆர்வம் கொண்டிருந்தார். இவரது வீட்டில் பல ஆசிரியர்கள் வாடகைக்குக் குடியிருந்தனர். முல்லைமணி சுப்பிரமணியம், அப்பச்சி மகாலிங்கம், நா.சுப்பிரமணிய ஐயர் எனப் பலரும் ஒன்றுகூடி இவரது வீட்டில் இலக்கிய விவாதங்களை நடத்துவதை இவர் பார்த்து வளர்ந்துள்ளார்.

மூதூரில் இவர் கற்பித்துக் கொண்டிருந்த காலத்தில் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த ஆசிரிய நண்பனொருவர் சிறுகதையொன்று எழுதித் தருமாறு கேட்டுக்கொண்டார். அதற்காக எழுதிய சிறுகதையை மஹ்ரூப் என்ற மாணவனிடம் கொடுத்து அழகான கையெழுத்தில் எழுத வைத்தார். அதைப் படித்த மாணவன் வ.அ.இராசரத்தினம் என்ற எழுத்தாளர் பற்றிக் கூறி அவரிடம் இந்தச் சிறுகதையைக் காண்பிக்கும் விருப்பத்தை வெளியிட்டார். வ.அ.இராசரத்தினம் இவர்களை வரவேற்று கதை தொடர்பில் சில திருத்தங்களையும் முன்வைத்தார். அவர் மூலமாக சிந்தாமணி பத்திரிகையில் இவரது முதலாவது சிறுகதையான 'மலர்கள் நடப்பதில்லை' இளவழகன் என்ற புனைபெயரில் வெளிவந்தது. இளவழகன் என்ற புனைபெயரிலேயே ஆரம்பத்தில் இவரது சிறுகதைகள் வெளிவந்தன. தொடர்ந்து சிந்தாமணியின் ஆசிரியர் இராஜ அரியரத்தினத்துடனான தொடர்பால் பல சிறுகதைகளை அந்தப்பத்திரிகையில் எழுதினார். அத்துடன் வீரகேசரி, தினகரன், Weekend ஆகிய பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் வெளிவந்ததுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் ஒலிபரப்பப்பட்டன.

இளமைக்காலத்தில் சில வருடங்கள் சொந்த ஊரான தண்ணீரூற்றில் தங்கியிருந்த காலத்தில் தண்ணிமுறிப்புக் காட்டுக்கு வேட்டைக்காரர்களுடன் சேர்ந்து வேட்டைக்குச் சென்றிருக்கிறார். அதேவேளை தகழி சிவசங்கரப்பிள்ளையின் செம்மீனை வாசித்த அருட்டுணர்வும் சேர்ந்து கொள்ள ஒரு நாவலை உருவாக்கினார். தண்ணீரூற்றில் வாழ்ந்த ஒருவரையே கோணாமலை என்ற பாத்திரமாக்கி உருவானதே நிலக்கிளி நாவலாகும். 1973இல் வீரகேசரி பிரசுரமாக இந்நாவல் வெளிவந்தது. இந்த நாவலின் பெயரை மாற்ற வீரகேசரி பிரசுரத்தினர் விரும்பிய போதும் நூலாசிரியர் அதற்கு அனுமதிக்கவில்லை. இந்நாவலுக்கு அந்த வருடத்துக்கான சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. இதன் இரண்டாம் பதிப்பு மல்லிகைப்பந்தல் வெளியீடாக 2002 இல் வெளிவந்தது. மித்திரனில் வண்ணக் கனவுகள் என்ற நாவலைத் தொடராக எழுதியுள்ளார். தொடர்ந்து வீரகேசரி பிரசுரமாக குமாரபுரம் (1974), கனவுகள் கலைந்தபோது (1977) ஆகிய நாவல்கள் வெளிவந்தன. இவரது பதிப்பகமான பனம்பூ வெளியீடாக தாய்வழித் தாகங்கள் (1987) நாவல் வெளிவந்தது. அப்பால் தமிழ் இணையத்தளத்தில் தொடராக இவரெழுதிய வட்டம்பூ நாவல் நந்தாவதி என்ற பெயரில் நூலாக தமிழ்நாட்டில் வெளிவந்தது. நந்தாவதியை இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து Bleeding Hearts (2009) என்ற நூலாக வெளியிட்டுள்ளார்.




21


இவரெழுதிய 11 சிறுகதைகள் தீபதோரணம் (1977) தொகுப்பாக வெளிவந்துள்ளது. இவர் ஆங்கிலத்தில் எழுதிய 15 சிறுகதைகள் நாவல் மரம் என்ற சிறுகதைத் தொகுதியாக டெனிஷ் மொழியில் வெளியிடப்பட்டது. முருகர் குணசிங்கம் ஆங்கிலத்தில் எழுதிய ஆய்வு நூல்கள் இரண்டை இவர் தமிழில் 'இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு', 'இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் அதன் ஆரம்பத் தோற்றம் பற்றியதோர் ஆய்வு' என்ற தலைப்புகளில் தமிழுக்கு மொழிபெயர்த்திருக்கிறார். அத்துடன் டெனிஷ் - தமிழ் அகராதியையும் இவர் தயாரித்து பிரபல நிறுவனம் மூலம் வெளியிட்டுள்ளார். ஓவியராகவும் இவர் விளங்குகிறார். இவரது ஓவியங்களை டென்மார்க்கில் பலரும் வாங்கி தமது வீடுகளில் தொங்கவிட்டுள்ளனர்.'அப்பால் தமிழ்' இணையத்தளம் ஓவியக் கூடம் என்ற பகுதியை உருவாக்கி, அதில் இவரது ஓவியங்களை வெளியிட்டு இவரைக் கௌரவித்திருந்தது. பாலமனோகரனின் கதைகள் முல்லை மண்ணின் இயல்பான வாழ்வையும், இயற்கையின் அழகையும் பேசுவன. வன்னிப் பிரதேசத்தின் எளிமையும் இனிமையும் இவரது கதைகளின் சாரமாகும். மறுபுறத்தில் துன்பங்களை எதிர்கொண்டு துணிந்து வாழும் மக்களின் பண்பையும் வெளிப்படுத்துவன.

81 வயதிலும் டென்மார்க்கில் தளராத பணியாற்றி வரும் பாலமனோகரன் எமக்கு நல்ல இலக்கிய முதுசொம்களைத் தந்துள்ளார். மேலும் புதிய அனுபவ வெளிகளை புதிய படைப்புகள் மூலம் அவர் தரவேண்டும் என்று வேண்டுகிறோம்.






ர.அஷ்வந்
ஞானசூரியன்
முன்பள்ளி



சி.பூர்விக்ஹா
தரம் - 3 B
யா/புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்



ர.சுமீரா
தரம் -7
கிளி /இராமநாதபுரம். மகா
வித்தியாலயம்



R.அன்புநிலா
தரம் -10
கிளி /முழங்காவில்
மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தை வளர்ப்பு; நல்லெண்ணெய்க்குளியலும் விற்றமின் D யும்

Dr. தி.சுதர்மன்
மானிப்பாய்.

எமது பாரம்பரியத்தில் குழந்தை வளர்ப்பில், குழந்தைகளுக்கு நல்லெண்ணெய் பூசி உடலை மென்மையாகப்பிடித்துவிட்டு, காலைவேளையின் இளவெயிலில் பனையோலைத் தடுக்கில் வளர்த்தி விடுவார்கள். இந்தப்பழக்கமானது திடீரென ஏற்பட்டதொரு பழக்கமன்று. நீண்டகால அவதானிப்பிலும் அனுபவத்திலும் அவற்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கற்றலில் இருந்துமே உருவாகியது. பொதுவாக எமது பாரம்பரியப் பழக்கவழக்கங்கள் யாவும் இவ்வாறானதாகவே அமைந்துள்ளன. அவற்றில் சில காலமாறுதல்களுக்கு ஏற்ப மாற்றமடைய வேண்டிய தேவை ஏற்பட்டாலும் அந்தப்பழக்கவழக்கங்களின் உள்ளார்ந்த நோக்கம் தெரியாமல் நாம் மாறுதலடைவது ஆபத்தானதாகும்.

ஊட்டச்சத்துகளில் உயிர்ச்சத்து 'D' குழந்தைகளின் என்பு வளர்ச்சிக்கும், நோயெதிர்ப்பு சக்திக்கும் இன்றியமையாதது ஆனால் பிறந்த குழந்தைகளுக்கு முதல் ஆறு மாதங்களும் தனியே தாய்ப்பால் கட்டாயமானது . ஆனால் தாய்ப்



பாலில் மிகமிகக் குறைந்தளவில் - அவ்வளவு ஏன் இல்லையென்று சொல்லுமளவுக்கே - உள்ளது. பொதுவாக நாளொன்றுக்கு குழந்தைகளுக்கு 1000 1500IU அளவிலான உயிர்ச்சத்து ' D' தேவையாகும். உயிர்ச்சத்து 'D' து மேலதிகமாக மேலைத்தேய நாடுகளில் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகின்றது.

பொதுவாக சூரியஒளி உயிர்ச்சத்து ("Sunshine vitamin") என உயிர்ச்சத்து 'D' அழைக்கப்படுகின்றது. காரணம் எமது உடலுக்குத் தேவையான உயிர்ச்சத்து 'D' இனை எமது உடலானது சூரிய ஒளியில் இருந்தே தொகுத்துக்கொள்கின்றது.

நல்ல வெயில் காலத்தில் குறைந்தளவு உடையுடன் வெயிலில் இருக்கும்போது 10000 20000 IU அளவு உயிர்ச்சத்து 'D' ஐ , 15 - 30 நிமிடத்தில் குழந்தைகளின் உடல் தொகுத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இயற்கையின் படைப்பில் எமது உடலானது எமது தேவைக்கு மேலதிகமாக உயிர்ச்சத்து'D'ஐ இவ்வாறு தொகுப்பதில்லை.

வெப்பவலய நாடான எமது நாட்டில் எமது குழந்தைகளுக்கு தாய்ப்பாலில் இருந்து கிடைக்காத உயிர்ச்சத்து 'D' வெயில் மூலம் கிடைத்து விடுகின்றது. ஆனால் புதிதாகப் பிறந்த குழந்தையின் மிருதுவான தோல் எமது வெயிலைத் தாங்காது. அதிக வெயிலால் தோலில் ஒவ்வாமை, தோற்கலங்கள் சிதைவடைதல், எதிர்காலத்தில் தோல் புற்றுநோய் என்பன ஏற்படலாம். இவற்றில் இருந்து பாதுகாக்கவே காலை இள வெயிலில் தடுக்கில் குழந்தைகளை கிடத்துகின்றார்கள்.

அதேவேளை நல்லெண்ணெய் பூசி வளர்த்தும்போது , அது குழந்தைகளின் தோலினை அதிக சூரிய ஒளியில் இருந்து பாதுகாப்பதுடன் உடலுக்கு குளிர்ச்சியையும் தருகின்றது. ஓலைப்பாயும் குழந்தையின் உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றது.

குழந்தைகளின் உடலுக்கு நல்லெண்ணெய் பூசி மிருதுவாகப் பிடித்துவிடும்போது தோலில் உள்ள கலங்கள் புத்துணர்ச்சியுடன் தொழிற்படுகின்றன. இதனால் இளவெயிலில் கூட விரைவான உயிர்ச்சத்து 'D' உருவாக்கம் நிகழ்கின்றது.

ஏனைய எண்ணெய் வகைகளை விட நல்லெண்ணெய் , சூரிய ஒளியில் உள்ள புறஊதாக்கதிர்களின் தாக்கத்தை 30% குறைப்பதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. சித்தமருத்துவத்தில் பல மூலிகைகள் சேர்ந்த பாலர்களுக்கான எண்ணெய் வகைகள் நல்லெண்ணெய் கொண்டு தயாரிக்கப்படுவது கவனிக்கத்தக்கதும் ஆய்வுக்குரியதும் ஆகும்.

எனவே குழந்தைகளுக்கு காலை வேளை நல்லெண்ணெய்பூசி உடலைப் பிடித்துவிட்டு பனை ஓலைப்பாயில் இளவெயிலில் வளர்த்தும்போது குழந்தைகளுக்குத் தேவையான 'உயிர்ச்சத்து D' பாதுகாப்பான முறையில் போதுமான அளிவில் கிடைக்கின்றது. இது குழந்தைகளில் பிரதானமாக என்புவளர்ச்சி, நோயெதிர்ப்பு சக்தி என்பவற்றுக்கு ஆதாரமாகச் செயற்பட்டு குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்ச்சி பெற உதவுகின்றது. அத்துடன் நரம்புத்தொகுதி, நுரையீரல், இதயம் போன்றவற்றின் ஆரோக்கியத்துக்கும் உதவுகின்றது.

பனை ஓலைப்பாய் தடுக்கானது குழந்தைகளின் உடலுக்குக் குளிர்ச்சியைத் தருகின்ற அதேவேளை தேவையற்ற ஒவ்வாமைகளையும் ஏற்படுத்துவதில்லை. மாறாக இன்று பயன்படுத்தப்படும் இறப்பர் / பிளாஸ்ரிக் வகை விரிப்புகள் நன்றன்று. சுற்றுச்சூழலுக்கும் உகந்தவையன்று. இலகுவில் உக்காதவை. இவற்றைப் பயன்படுத்தி தேவையற்ற இரசாயனங்களையே குழந்தைகளின் தோலுக்கு தொடுகையுறச் செய்கின்றோம். பனையோலைத் தடுக்கு சுற்றுச்சூழல் இசைவானதும் இலகுவாக உக்கக்கூடியதும் ஆகும். நல்லெண்ணெய் அல்லது கிரந்தி எண்ணெய் பூசி (எண்ணெய்க் குளியல்) குழந்தையினை காலை வெயிலில் தடுக்கினில் வளர்த்தி பின் குளிப்பாட்டும் பழக்கம் இன்று அருகிவருகின்றது.

இது குழந்தையின் ஆரோக்கியத்துக்கு நன்றன்று. இன்றைய காலகட்டத்தில் குழந்தைப்பருவத்தில் காணப்படும் உயிர்ச்சத்து 'D' குறைபாடு, பிற்காலத்தில் அந்தக்குழந்தையின் சதையி சுரப்புக்களினால் இன்சுலின் சுரப்பு குறைவடைந்தோ அல்லது இல்லாது போவதாலோ, நீரிழிவு (Type 1 Diabetes mellitus) ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்துவிடுவதாகக் கருதப்படுகின்றது. இது தொடர்பில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.



# ஊர்ப்புதினம்

## பாகம் 2

இராகவன்

போனகிழமையும் சங்கீத வித்துவான் குமாரசுவாமியைப் பற்றிக் கதைச்சனான். இந்தக் கிழமையும் கொஞ்சங்கதைக்க இருக்குது. கிட்டடியில செந்தில்மாதவன் அண்ணையைச் சந்திச்சன். இவர் ஆரெண்டால் கணபதிப்பிள்ளைப் பண்டிதரின் மகன். (கணபதிப்பிள்ளைப் பண்டிதர், குமாரசுவாமி மாஸ்ரரின் தாய்மாமன்) . என்னோட மருதங்கேணி டி.எஸ்.ஒப்பீஸில ஒண்டா வேலை செய்தவர். இப்ப ஒரு அலுவலா லீவில நிக்கிறார். அவரைச் சந்திச்சாப்போல குமாரசுவாமி மாஸ்ரரைப் பற்றிக் கதை வந்திச்சுது. அப்ப அவர், "உனக்குத் தெரியுமே எங்கட அத்தான் சங்கீதத்தில மட்டுமில்ல சண்டையிலயும் வலுவிண்ணன்தான்.

முந்தி எங்கடையாக்கள் எங்கையும் சண்டைக்குப் போறதெண்டால் அத்தானைத்தான் கூட்டிக்கொண்டு போறவை. அத்தான்ர தலைக்கறுப்பைக் கண்டாலே எதிர்க்கன்யாக்கள் பம்மிக்கொண்டு பின்வாங்கியிடுவாங்கள்" எண்டு சொன்னார். இது எனக்குப் புதுத்தகவல். எண்டாலும் குமாரசுவாமி மாஸ்ரர் எங்கடை வகுப்புப் பொடியளுக்கு முதல்நாள் குடுத்த சாத்துப்படிதான் எனக்கு ஞாபகம் வந்தது. இப்படிக்கொத்த மகத்தான ஆக்களோடயெல்லாம் இருந்து பாத்துப் பழகியுமிருக்கிறன் எண்டது எனக்கு எண்டைக்குமே பெருமைதான்.

குமாரசுவாமி மாஸ்ரரைப் போல இன்னுமொராள்தான் நவரத்தினம் மாஸ்ரர். அவர் எங்கட வகுப்புக்கு சைவசமயம் படிப்பிச்சவர். ஆள் கொஞ்சங்கட்டை. கொஞ்சங்குண்டாயிருப்பார். விக்னேஸ்வரா வீதியால திரும்பி மேற்கை போனால் கீரிப்பல்லி எண்டொரு இடம்வரும். அதுக்குள்ளதான் எழுத்தாளர் யோ. கர்ணனின்ரை வீடிருக்கு. அதையுங்கடந்து போனமெண்டால் கலட்டிவரும். அதுக்குள்ளதான் நவரத்தினம் மாஸ்ரரின்ர வீடிருக்கு. அங்கையிருந்து பள்ளிக்கூடத்துக்கு சைக்கிள்ளதான் வாறவர். இந்தச் சைக்கிள வைச்சும் ஒரு பகிடி இருக்கு. எங்கட பள்ளிக்கூடத்தில கணிதமும் விஞ்ஞானமும் படிப்பிக்கிறதில விண்ணனாயிருந்தவர் ஜெயரத்தினம் மாஸ்ரர். அவரைக் கண்டாலே பொடியளுக்கெல்லாம் கெதிக்கலக்கம். அவரின்ரை குரலைக்கேட்டாலே இன்னுங் கெதிக்கலக்கம். அவர் பக்கத்து வகுப்பில பாடமெடுக்கிறார் எண்டால் அடுத்தடுத்த வகுப்புகள் வாத்திமார் இருந்தாலென்ன இல்லாட்டியென்ன வலுஅமைதியாயிருக்கும். அவர் ஒருகாலமும் அடிக்கிறதுக்கு பிரம்பு பாவிச்சதே கிடையாது.

10

கன்னத்தில மின்னுறதுதான் அவரின்ரை 'ஸ்ரைல்'. மற்றது 'ஸ்ரைலாத்தான்' கதைப்பார். அதுகும் வானொலி அறிவிப்பாளர் மாதிரி உச்சத்தொனியிலதான் கதைப்பார். இன்னுமொரு சிறப்பு என்னவெண்டால் ஆங்கிலம் கலந்து கதைக்கவேமாட்டார். தனித்தமிழ்தான். அதுகும் இலக்கணத் தமிழ்தான். அவர் பாடமெடுக்கேக்குள்ள பக்கத்து வகுப்பில சத்தம் வந்தால் உடன அங்கை வந்து "யாரடா சட்டாம்பிள்ளை?" எண்டு கேட்பார். சட்டாம்பிள்ளை எண்டால் மொனிற்றர் எண்டு அர்த்தம். "எழும்பி வகுப்பைப் பாரடா" எண்டு அடுத்த கட்டளை போடுவார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org